KALKI 27.1.2008 ரூ.8.00 60 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



புலிகளுக்கு உதவி செய்ய மாட்டோம்!



லட்ச ரூபாய் ரகசியம்!



கல்கி

குடும்பத்துடன் படிக்க...

27.1.2007

உள்ளே...











ப்ரிஸ்கிரிப்ஷன்

எனக்குக் கொஞ்ச நாட்களாக கழுத்தில் வலி இருந்துகொண்டே இருக்கிறது. நண்பர் ஒருவர் போகிறபோக்கில், இது என் முதுகெலும்பில் உள்ள கோளாறாக இருக்கும் என்று கூறிவிட்டுப் போனார். கழுத்து வலிக்கும் முதுகெலும்புக்கும் என்ன சம்பந்தம்?

- நடராஜன், மதுரை

எலும்புநல அறுவை சிகிச்சை மருத்துவர் டாக்டர் எம்.பார்த்தசாரதியின் விளக்கம்:-

''முதுகெலும்பு பல சின்னச்சின்ன எலும்புகளின் இணைப்புதான். இவற்றில் முதல் ஏழு வளையங்கள் கழுத்தில் உள்ளன. இவற்றை செர்விகல் வர்டிப்ரா (cervical vertebra) என்கிறோம். அடுத்த பன்னிரண்டு வளையங்கள் மார்புப் பகுதியிலும் (thoracic vertebra), அதைத் தொடரும் ஐந்து வளையங்கள் கீழ் முதுகுப் பகுதியிலும் (lumbar vertebra), கடைசி ஐந்து வளையங்கள் (sacral vertebra) இடுப்புக்கட்டு எலும்புகளோடு இணைந்து அசைவற்றும் காணப்படுகின்றன.

ஒருவரின் வடிவத்தை நிர்ணயிப்பதில் கழுத்துக்கு முக்கியப் பங்கு உண்டு. பரம்பரையாகவும் கழுத்தின் அமைப்பு நிர்ணயிக்கப்படுகிறது. என்றாலும், கழுத்துப் பயிற்சிகளின் மூலமும் சிறந்த கழுத்தைப் பெறலாம்.

முதுகெலும்பின் முதல் வளையத்தை 'அட்லாஸ்' என்கிறோம். இந்த வளையம்தான் தலையைத் தாங்குகிறது.

முதுகெலும்பு, அடியில் பருமனாகவும் மேலே போகப்போக மெலிதாகவும் காணப்படுகிறது. அதாவது, நமது கழுத்துப் பக்கம் உள்ள முதுகெலும்புப் பகுதி மிக மெலிதானது. ஆனால், அந்த இடத்தில்தான் அதற்குள்ளே செல்லும் தண்டுவடம் பெரிதாக இருக்கிறது.

முதுகெலும்புகளில் ஏறபடும் சிக்கல்களினாலும் கழுத்து வலி வரலாம்.

கண்களுக்கென்று தனி அழுத்தமா?



தொலைவில் இருக்கும் பொருட்கள் சரியாகத் தெரியவில்லை என்பதற்காக கண் டாக்டரிடம் போனேன். அதற்கான சொட்டு மருந்தைக் கண்ணில் விடுவதற்கு முன்பாக, ஏதோ ஒரு கருவியில் என் கண்களை வைத்துக்கொள்ளச் சொல்லி, எதையோ சோதனை செய்தார்கள். கேட்டதற்கு கண்ணில் உள்ள அழுத்தத்தை அளந்து பார்த்ததாகக் கூறினார்கள். இரத்த அழுத்தம் கேள்விப்பட்டதுண்டு. மற்றபடி கண்களுக்கென்று தனி அழுத்தம் உண்டா?

- சரண்யா, சேலம்



● எம்.பார்த்தசாரதி

கண் மருத்துவர் டாக்டர் அருள்மொழிவர்மனின் விளக்கம்:

கண் என்பது திரவத்தால் நிரம்பிய ஒரு கோளம். இதில் ஒருவித திரவம் தொடர்ந்து சுரந்து கொண்டிருக்கிறது. இதை அக்வஸ் ஹ்யூமர் (Aqueous Humour) என்போம். இது சுரந்துகொண்டே இருப்பது போல் தொடர்ந்து வெளியேறவும் செய்யும். இந்த இரு செயல்களும் ஒரு சீராக நடக்கும்போது கண்ணில் உள்ள அழுத்தம் சுமார் 18 mm/Hg அளவில் இருக்கும். இதை 'இன்ட்ரா ஆகுலார் ப்ரஷர்' என்போம்.

சில காரணங்களினால் (உதாரணம் குளுக்கோமா நோய்) இந்த அழுத்தம் அதிகமானால், கண்ணில் உள்ள நரம்புகள் அழுத்தப்பட்டுக் கண்களில் சிக்கல் ஏற்படக் கூடும்.

இந்த அழுத்தம் 18லிருந்து 25 அல்லது 30 என்று அதிகரிக்கும்வரைகூட இதற்கான அறிகுறிகள் தெரியாமலே போகலாம். ஆனால், சுமார் 40 என்கிற அளவில் இந்த அழுத்தம் அதிகமாகும்போது கண் நரம்பு வலிக்கத் தொடங்கும்.

அதனால்தான் வேறு கண் குறைபாடுகளுக்காக வருபவர்களுக்குக்கூட, கண் அழுத்தத்தைச் சோதிக்கிறார்கள். பொதுவாக நாற்பது வயதைத் தாண்டியவர்களுக்கே குளுக்கோமா வருவதால், அந்த வயதுக்கு மேல் வருடத்துக்கு ஒருமுறை கண் அழுத்தத்தைச் சோதித்துக்கொள்வது நல்லது. மூக்குக் கண்ணாடி அணிபவர்களென்றால் அதற்கான சோதனையின்போதே கண் அழுத்தத்தையும் அளந்து பார்த்து விடுவார்கள். கண்ணாடிக் கடைகளிலேயே கண்களைச் சோதித்து கண்ணாடி அணிந்து கொள்பவர்களால், கண் அழுத்தம் தொடர்பான சிக்கல்களை அறிந்து கொள்ள முடியாது.

- ஜி.எஸ்.எஸ்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர்:
மு.மாறன்

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி:
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல்:
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு:
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

லட்ச ரூபாய்

அண்மையில் டெல்லி பிரகதி மைதானத்தில் நடந்த ஆட்டோ எக்ஸ்போ, அனைத்து உலக கவனத்தை ஈர்த்தது. காரணம், அங்கு நடந்த டாடா நிறுவனம் தயாரிக்கப் போகும் சாமானிய மக்களுக்கான காரின் வெள்ளோட்டம்தான். அந்த நிறுவனத் தலைவரான ரத்தன் டாடா புதிய 'டாடா நானோ' காரை ஓட்டிக் கொண்டு வந்து நிறுத்தியபோது, இந்திய சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்டது.



ரத்தன் டாடா

'நானோ' காருக்கு ஒரு லட்ச ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரிகளையும் சேர்த்து, வாங்குகிற போது ஒரு லட்சத்து இருபதாயிரம் வரை ஆகும் என்கிறார்கள்.

நூறுக்கும் அதிகமான உதிரி பாக உற்பத்தியாளர்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த காரின் அனைத்துப் பாகங்களையும் சிறியதாகவும், எடை குறைவான மாற்று உலோகங்களைப் பயன்படுத்தியும் வடிவமைத்திருக்கிறார்கள். காரின் இஞ்ஜின் வழக்கமாக வார்ப்பு இரும்பில் தான் செய்யப்படும். ஆனால், நானோவின் இஞ்ஜின் அலுமினியத்தில் செய்யப்பட்டிருக்கிறது. மிக அதிகமான எண்ணிக்கையில் நானோ கார் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுவதால், விலை குறைப்புச் சாத்தியமானது என்கிறார்கள் நானோவுக்கு உதிரி பாகங்களைத் தயாரித்துக் கொடுத்திருக்கும் நிறுவனத்தினர். 'இவ்வளவு குறைந்த விலையில் தயாரிக்க எங்களால் முடியாது' என்று சொல்லி ஒதுங்கிக் கொண்ட உதிரிபாக உற்பத்தி நிறுவனங்களும் உண்டு.



பாலாஜி

குறைந்த விலையில் நானோ கார் விற்பனைக்கு வருவதால் நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகும் என்பது நிச்சயம். தமிழகத்திலும் கணிசமாக இந்த கார் வாங்கப்படக் கூடிய சூழலில், பெரு நகரமான சென்னை மிகுந்த போக்குவரத்துச் சிரமத்துக்கு ஆளாக நேரிடும்.

ஏற்கெனவே போக்குவரத்து சென்னை மக்களுக்கு போக்குக் காட்டிக் கொண்டிருக்கும் நிலையில், நானோ வருகையை எப்படிச் சமாளிக்கப் போகிறது காவல்துறை?

சென்னையின் மிக முக்கியமான சாலைகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, இவற்றுக்கு இணையான மாற்றுச் சாலைகள் இல்லை என்பது பெரிய குறை. பெரிய சாலைகளில் வரும் வாகனங்கள், சிறிய சாலைகளில் நுழையும் இடங்களில் ஏற்படும் 'பாட்டில் நெக்' நெரிசலைச் சமாளிக்க ஒரு வழிப்பாதைகளை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். மாநகரப் போக்குவரத்தையும், மெட்ரோ ரயிலையும் மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும்போது, போக்குவரத்து நிச்சயம் சீர்படும்'' என்கிறார் சென்னை மாநகர கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) சுனில் குமார் ஐ.பி.எஸ்.

ஆனால், நானோ வருகையால் பொதுப் போக்குவரத்துப் பயன்பாடு குறையுமே யொழிய அதிகரிக்காது! ஆகவே சாலைகளில் நெரிசல் அதிகமாகும்.

சென்னை என்றில்லை நானோவின் எழுச்சியால் ஆசியாவிலேயே போக்கு

வரத்து நெரிசல் மிகுந்த நகரமாகக் கருதப்படும் பெங்களூருவில் கடும் நெருக்கடி ஏற்படும் என்று அஞ்சுகிறார்கள் பெங்களூருவாசிகள்.

'ஆண்டுக்கு இரண்டரை லட்சம் நானோ கார்கள் உற்பத்தி செய்யப்படும். விலை குறைவு என்பதால் ஏராளமானவர்கள் கார் வாங்குவார்கள். அதனால் சுற்றுச்சூழல் பெருமளவு பாதிக்கும்' என்பது சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கவலை. ஆனால், இதற்கு



ரகசியம்!

விளக்கமளிக்கும் விதமாக, 'நானோ காரினால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பு, ஒரு மோட்டார் சைக்கிளால் விளையும் பாதிப்பைவிட அதிகமாக இருக்காது' என்கிறார் ரத்தன் டாடா. இது குறித்து நாம் வாகனப் பொறியாளரான பாலாஜியிடம் பேசினோம்.

''மலிவு விலை கார் வாகனங்கள் வெளிப்படுத்தும் கார்பன் மோனாக்ஸைடு மற்றும் நச்சுப் பொருட்கள் கலந்த புகை உடல் நலத்துக்குக் கேடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த விஷயத்தில் கார் உற்பத்தியாளர்களின் பங்களிப்பு 30, 40 சதவிகிதம்தான். நுகர்வோரின் பொறுப்பும், அரசின் பொறுப்பும் அதிகம். நுகர்வோர், கார்களை அடிக்கடி சர்வீஸுக்கு விட்டு நல்ல நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இன்ஜின் அதிகப் புகை வெளியிடாது.

பெட்ரோல், சல்ஃபர் தன்மை மிகக் குறைவாக இருக்கும் வகையில் உற்பத்தி இருக்க வேண்டும். இதற்கு ரிபைனரிகள் நவீனப்படுத்தப்பட வேண்டும். தவிர, பெட்ரோல் பங்க்குகளில் மண்ணெண்ணெய் கலப்படம் இல்லாமல் பெட்ரோல் கிடைக்க வேண்டும். அரசு வழிகாட்டுதல்படி கார் வெளியிடும் புகையில் எட்டு முதல் பத்து பி.பி.எம். நச்சுப் பொருட்கள் இருப்பது ஆபத்தில்லாதது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கடைபிடிப்பது உற்பத்தியாளருக்குச் சுலபமே'' என்றார் பாலாஜி.

'உதிரி பாகங்களின் விலை கணிசமாக ஏறிவிட்டபடியால், சில வசதிகள் இல்லாமல் நானோ கார் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இருந்தாலும், ஒரு லட்சத்தில் என்ன அதிக அளவு வசதிகள் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்திருக்கிறார்கள். பாதுகாப்பு அம்சங்களில் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டிருக்கிறது. முழுவதும் மெட்டல் பாடி. 623 குதிரை சக்திகொண்ட இன்ஜினுக்கும், கார் எடைக்கும் உள்ள விகிதாச்சாரத்தைப் பார்க்கும்போது நகரங்களில் 50 முதல் 60 கி.மீ. ஓட்டுமளவுக்கு நல்ல பிக் அப் இருக்கும். வெளி அமைப்பு மெட்டலாக இருந்தாலும், உள்கட்டமைப்பில் பிளாஸ்டிக் கணிசமாகப் பயன்படுத்தப்பட்டு எடை குறைக்கப்பட்டிருக்கிறது. விபத்து ஏற்பட்டால், காருக்குள் இருப்பவர்களுக்கு அடிபடாத வண்ணம், நொறுங்கும் தன்மைகொண்டது. பவர் ஸ்டியரிங் இல்லாதது ஓட்டுவதற்குச் சற்று அசௌகரியமே. இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். பெரும்பாலும் அலுவலகப் பயன்பாட்டுக்கு வாங்குவார்கள் என்பதால், சாமான்கள் வைக்கப் போதுமான இட

மில்லை. டியூப் இல்லாத டயர் சக்கரம் என்று சொல்கிறார்கள். இதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகம். ஏனென்றால், மிக அதிக விலையுள்ள கார்களில்தான் தற்போது இதுபோன்று இருக்கிறது. டியூப் இல்லாத டயர் சக்கரம் போட்டார்கள் என்றால் நிச்சயம் ஒட்டம் இலகுவாக இருக்கும். பஞ்சர் பிரச்னை இல்லை. நுகர்வோர் பெரிதும் குறியாக இருக்கிற மைலேஜ், நானோவில் லிட்டருக்கு 20 கி.மீ. என்கிறார்கள். ஆனால்; நமது சாலைகள் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால் நிச்சயம் 17, 18 கி.மீட்டருக்குக் குறைவிருக்காது என்று நம்பலாம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். டாடாவால் நீண்ட காலத்துக்கு ஒரு லட்ச ரூபாயில் காரை விற்க முடியாது''என்றார்.

''ஒரு லட்சமோ ஒன்றரை லட்சமோ திரட்டிக் கொடுத்து வாங்கிவிட்டாலும் காரை நிறுத்த இடம் வேண்டும்; பராமரிக்கவும் பெட்ரோல் போடவும் தொடர்ந்து பணம் இருக்க வேண்டும். ஆகவே நானோ, எளியவர்கள் கார் என்று சொல்வது சரியாகாது'' என தொழில்நுட்ப ரீதியிலும் அவர் அலசினார்.

''இந்தியாவில் ஆயிரம் பேருக்கு எட்டுப் பேர் கார் வைத்திருக்கிறார்கள். சீனாவில் உற்பதி சார்ந்த வளர்ச்சியும் இந்தியாவில் அறிவு சார்ந்த வளர்ச்சியும் நடந்து வருகின்றன. ஆனால் டாடாவின் இந்த 'நானோ' லட்ச ரூபாய் கார் மூலம் உற்பத்தி சார்ந்த வளர்ச்சியிலும் நாம் குறைந்தவர்களல்ல என்று நிரூபிக்கப்பட்டு விட்டது'' என்கிறார் பாலாஜி.

– எஸ். சந்திரமௌலி, ப்ரியன்

அட்டை ஓவியம்: **பிள்ளை**

'நானோ' பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?



✱ கே.எம்.சாமி

கே.எம்.சாமி (தனியார் நிறுவன ஊழியர்):

''டாடாவோட இந்த லட்ச ரூபாய் கார் என்னைப் போன்ற நடுத்தர வர்க்கத்து மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். நான் இப்போதான் மோட்டார் சைக்கிள் அறுபதாயிரம் கொடுத்து வாங்கினேன். கூட இன்னும் நாற்பதாயிரம் புரட்டியோ அல்லது லோன் போட்டோ லட்ச ரூபாய் கார் வாங்கறது ஒண்ணும் பெரிய விஷயமில்ல. சிடிக்குள்ள ஸ்டேட்டஸ் மெயின்டெய்ன் பண்ற பட்சத்துல இதுவும் கூட உறுத்தப் போறதில்ல.''



✱ சையது

சையது (டிரைவர்):

''டிரைவரா இருக்கற எனக்கு இந்த கார் செய்தி சுகமா இருக்கு. ரெண்டு, மூணு வாங்கிப் போட்டு, ஏன் தனியா தொழில் தொடங்கக் கூடாதுன்னு யோசிக்கிறேன். கார்ல போற மக்கள் இன்னைக்கு அதிகமாயிட்டாங்க. தொழிலுக்குத் தொழிலுமாச்சு. இப்பவே என் வீட்ல வாங்கச் சொல்லி நச்சரிக்கறாங்க.''



✱ மணிமேகலை

மணிமேகலை (கல்லூரி மாணவி):

''நானோதான் இப்ப டாக் ஆஃப் த காலேஜ். பல ஸ்டூடண்ட்ஸ், பேரண்ட்ஸ் கிட்ட இப்பவே அடிபோட்டுட்டாங்க. நானும் எங்க வீட்ல, நல்லா படிச்சா வாங்கித்தரச் சொல்லிக் கேட்டிருக்கேன். நானோவ வச்சுக்கறது இப்ப ஸ்டேட்டஸ் ஆயிடுச்சு. பைக் வச்சிட்டிருக்கற ஸ்டூடண்ட்ஸ் மெல்ல அப்படியே காருக்கு மாறப் போறாங்க பாருங்க. இந்தப் புரட்சிக்கு வித்திட்டது நானோதான். பட், இதனால பொல்யூஷன், டிராஃபிக் பிரச்னை எல்லாம் வரும்னு சொல்றாங்க. இதெல்லாம் கவனத்துல கொள்ளணும்.''

– மது



● நீக்கமும் நோக்கமும்



● மதுவிலக்கும் மிரட்டலும்



● கோயிலும் எதிர்ப்பும்

● செ.நா.சிவகுமாரி, சென்னை - 33

? சென்னையில் மோடி...?

! அபாயகரமான, ஆக்ரோஷமான எதிர்ப்பைச் சமாளித்து பாதுகாப்பு அளித்த காவல் துறைக்கு வாழ்த்துக்கள்.

● **ஜி.ஜெயராமன், கூத்தனூர்**

? தமிழர்களின் புத்தாண்டு தை முதல் தேதி என விரைவில் அறிவிப்பதாகச் சொல்கிறாரே முதல்வர்?

! எல்லாம் கிடக்க கிழவியை மணையில் அமர்த்திய கதைதான்!

● **எம்.சிவகுரு நாதன், தஞ்சாவூர்**

? அரசு அலுவலக வளாகங்களில் கோயில்கள் எழுப்புவதற்கு தி.க. தலைவர் வீரமணி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறாரே...?

! இதை வீரமணி சொல்லக்கூடாது; அவர் நாத்திகர் என்பதால். ராமகோபாலன் சொல்ல வேண்டும் - கோயில்களோ, மசூதிகளோ, சர்ச்சுகளோ - எதுவானாலும், ஆக்கிரமிப்பு நிலத்திலன்றி, அதற்குச் சொந்தமான இடத்தில், உரிய அனுமதி பெற்று முறைப்படி உருவாவதே நல்லது.

● பொன்விழி, அன்னூர்

? ஆஸ்திரேலியா என்றால் நினைவுக்கு வருவது எது...?

! பெருகி வரும் கங்காரு எண்ணிக்கையைச் சமாளிக்க முடியாமல் குட்டிகளைக் கொலை செய்யும் கொடுமை.

● **சி.மகேஷ், திருச்சி - 17**

? "பா.ம.க.வினர் மது அருந்துகிறார்களா என கண்காணிக்கப்படுவர்" என்று ராமதாஸ் சொல்கிறாரே?

! கண்காணிப்பு என்பது மிரட்டலாக மாறிவிடக் கூடாது. அப்படி நடந்தால், பலர் கட்சியை விட்டே ஓடிவிடுவார்கள். கண்காணிப்பு என்பது, மதுவை விலக்குவதற்கான மனோநிலையை வளர்க்கும் அன்பான அணுகுமுறையாக இருக்க வேண்டும். பூரண மதுவிலக்கு மூலம் அடுத்த தலைமுறையைக் காப்பாற்றினாலே மிகப் பெரிய நன்மைதான்.

● **வீ.முத்தையா, திருநெல்வேலி**

? நூல் வெளியீட்டு விழாவில் குஷ்பு தமது காங்கிரசக் கோபத்தை வெளிப்படுத்

பக்னரை நீக்கினாலும்



* பயணமும் பாதுகாப்பும்



* கிழவியும் மணமாயும்!



* விருதும் வக்காலத்தும்

இடிவது சரிதானா?

! ம்ஹூம்! அது தார்மிகக் கோபமா தெரியலை; சேர்த்து வெச்ச எரிச்சல் மாதிரில்ல இருந்தது.

● வீ.சிவசங்கர், கள்ளக்குறிச்சி

? கலைஞர்கள் பெரும்பாலும் சோம்பேறிகளாமே உண்மையா?

! இல்லை... உண்மைக் கலைஞன் எளிதில் திருப்தி அடையமாட்டான். ஒரு கலைப் படைப்பை முடிக்க ரொம்ப அவகாசம் எடுத்துக்கொள்வான். இதனால் சோம்பேறிபோல் தோன்றும்; அவ்வளவுதான். ஒரு பக்கக் கதையை ஒரு மணி நேரத்திலும் எழுதலாம்; ஒன்பது மணி நேரத்திலும் அடித்து, திருத்தி, மெருகேற்றி எழுதலாம் அல்லவா!

● ஏ.எஸ்.பிரவீன், திருச்சி - 16 ★

? ஹர்பஜனை சேர்த்தாலும், பக்னரை நீக்கினாலும் தொடரை இந்தியா இனி வெல்ல முடியாதே...?

! யார் இத்தொடரை வெல்வது என்பதே பிரச்னை அல்ல. இனி வரும் காலங்களிலாவது இதுபோன்ற அஜாக்கிரதை தவறு கேலோ, கிரிக்கெட்டை ஒழுங்கீனங்களோ நடக்கக்கூடாது என்று உறுதி பூண்டால், அது விளையாட்டுக்குக் கிடைத்த வெற்றியாக அமையும்.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? வாஜ்பாய்க்கு பாரத ரத்னா விருது வழங்கும்படி பிரதமரைக் கோருகிறாரே அத்வானி.

! எந்த வேளையில் கேட்டாரோ; இன்று பாரத ரத்னாவுக்கு ஏகப்பட்ட போட்டி! கன்ஷிராம், முலாயம் சிங் யாதவ், ஜகஜீவன் ராம், ஜோதி பாசு, முகமது ரஃபி, ஜோதிபா ஃபுலே என்று லிஸ்ட் நீண்...டுகொண்டே போகிறது. நிலைமையைச் சமாளிக்க, 'யாருக்குமே இல்லை' என்று கை விரித்துவிட்டால் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

● அ.முரளிதரன், மதுரை

? பெட்ரோல் விலை கூடுமாமே?

! கூடும். மாற்று எரிசக்தி என்பது சோதனை அளவிலேயே தொடர்ந்து இருக்கும்வரை தொடர்ந்து கூடிக்கொண்டேதான் போகும்.

பயனில்லையே?

நீங்கள் கேட்டவை தராசு

சட்டபூர்வமான பாதுகாப்பும் இருதரப்புக்கும் கிடையாது. இதுபோன்ற விஷயங்களில் தலைவர்கள் முன் மாதிரியாக நடந்துகொள்வது அவசியம்.



● மனமும் மன்னிப்பும்!

● எம்.அசோக் ராஜா, திருச்சி - 15

? 'கோஷ்டிப் பூசல் கூடாது; ஒற்றுமையாகச் செயல்படவேண்டும்' என்று கூறிவிட்டு; ப.சிதம்பரம் வருவதற்குள் தம் கோஷ்டியுடன் வாசன் வெளியேறிவிட்டது எதைக் காட்டுகிறது?

! தமிழ்நாடு காங்கிரஸுக்கு கதி மோட்சமே கிடையாது என்பதை.

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு ❒

? இலங்கைப் பயணம் ரத்து?

! பாதுகாப்பு மற்றும் வேறு பணிகள் எனக் காரணங்கள் வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலும், புலிகள் ஆதரவு கட்சிக்காரர்களின் ஆட்சேபணையைத் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டிருப்பது, பிரதமரின் கௌரவத்துக்கு இழுக்குச் சேர்ப்பதாக இருக்கிறது. இந்த ஆட்சேபணைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அப்பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 'இலங்கைத் தமிழர்கள் துயர் தீர என்ன செய்யலாம்?' என இலங்கை அரசிடம் பிரதமர் பேசியிருக்க வேண்டும்.

> ❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
> **கருப்பம்புலம் சித்திரவேலு**, நெய்விளக்கு
>
> ★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
> **ஏ.எஸ். பிரவீன்**, திருச்சி - 16

● என்.சண்முகம், சேலம்

? தமது காதலியோடு வருகை தரும் பிரான்ஸ் ஜனாதிபதி சார்கோசியால் பல நாடுகளில் பிரச்னை வரும்போல் உள்ளதே - அவர் தமது காதலியுடன்தான் பயணம் செய்ய வேண்டுமா?

! மேல்நாடுகளில் திருமணம் இன்றியே சேர்ந்து வாழ்வது என்பது சகஜமாகி வருகிறது. ஆனால், இது உடலுக்கும் சரி, உள்ளத்துக்கும் சரி, ஆரோக்கியமானது அல்ல.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'ராமரைப் பற்றி அவதூறாகப் பேசியது தவறு' என்று மக்கள் மன்றத்தில் கூப்பிய கரங்களுடன் கருணாநிதி மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று, சோனியா அவருக்கு அறிவுரை கூறவேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமி கூறியிருக்கிறாரே?

! சுப்பிரமணிய சுவாமி சொன்னதற்காக சோனியா சொல்லி, கருணாநிதியும் மன்னிப்புக் கேட்டார் என்றே ஒரு பேச்சுக்கு வைத்துக்கொள்வோம். அது உண்மையாக மன்னிப்புக் கேட்டதாகவா இருக்கும்? மன்னிப்புக் கேட்பது மனப்பூர்வமாக இருக்க வேண்டும் சுவாமி!

● பத்மா சுப்பிரமணி, சென்னை-11

? ஜல்லிக்கட்டு நடத்த உச்சநீதி மன்றம் தடைவிதித்தது பற்றி?

! மனிதனுக்கு ஆபத்து; மிருகத்துக்குச் சித்ரவதை என்பதால் வரவேற்கப்பட வேண்டிய தடையே. தடையை நீக்கக் கோரிய தமிழக அரசின் முறையீடு தவறானது. உச்சநீதிமன்றத் தீர்ப்புகளைக்கூட அரசியல் தலைவர்கள் கண்டனம் செய்கிறார்கள்; புறக்கணித்துவிட்டு யதேச்சாதிகாரமாக நடந்துகொள்கிறார்கள். இந்த மோசமான முன்னுதாரணம் காரணமாக, மக்களும் உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கண்டனம் செய்து மறியல், ஆர்ப்பாட்டம் என்று இறங்குகிறார்கள். இப்படியே போனால் நாட்டில் அராஜகம்தான் நிலவும்! மேல் முறையீடின் விளைவாக தடை நீக்கப்பட, மக்கள் படுகாயம், பலி...!



தயாராகிவிட்டது!
ஆண்டு மலர்
புது வரவுகள்!
கதை
கலை
மருத்துவம்
வரலாறு
அறிவியல்
புதுமையான போட்டி-பரிசுப் பெட்டிகள்!
கோகுலம்



பழனி

அக்கா-தம்பி பாசத்தை அடிதடியில் குழைத்துத் தந்திருக்கிறார் பேரரசு. பன்ச் டயலாக், குத்துப்பாட்டு, அதிரடி திருப்பங்கள் என்று கலந்துகட்டி அடித்திருக்கிறார்.

பழனியாக பரத் ஆக்‌ஷனில் பட்டைக் கிளப்பியிருக்கிறார்.

அடி ஒவ்வொன்றும் இடி மாதிரி இறங்குகிறது. அக்காவின் வாழ்வுக்காக அவர் நடத்தும் பாசப் போராட்டங்கள் சுவாரஸ்யம் மிகுந்த ரவுசு ராக்கெட்டுகள். கிண்டலும் காமெடியும் பொங்கித் தளும்புகிறது பரத் நடிப்பில். பெண் பார்க்க நடத்தும் நாடகம், மாமாவைப் போலீஸிடம் மாட்ட வைத்து நக்கலடிப்பது, ஐஸ்வர்யா திட்டம்தீட்டிக் கதிகலக்குவது என்று படம் முழுக்க பரத்தின் அதிர்வேட்டு முழக்கம்.

✱ காஜல் அகர்வால் தமிழுக்குப் புது வரவு. ஆடுகிறார், பாடுகிறார், அடி வாங்குகிறார், காணாமல் போய்விடுகிறார். என்றாலும், அந்தக் கண்களில் துடிப்பு அதிகம். குஷ்பு ஒரு சாந்தப் புறா. புருஷன், கண்ணெதிரில் இன்னொரு பெண்ணுக்குத் தாலிகட்ட முனைந்தாலும் ஜஸ்ட் லைக் தட் சோகமாய்ப் பார்த்துவிட்டுப் போகிறார்! கடைசியில் அவருடன் சேர வேண்டுமென்பதற்காகவே பேரரசு சொல்லிக்கொடுத்தது போல் அமைதி தவழ வாழ்கிறார். என்றாலும், அடக்கத்தையும் மீறி அங்கங்கே பளிச்சிடுகிறது நடிப்பு.

✱ பிஜுமேனன், ரவிமரியா, ராஜ் கபூர் என்று மூன்று வில்லன்கள் போதாதென்று, ஐஸ்வர்யாவை வேறு வில்லியாக உலாவ விட்டிருக்கிறார்கள். எல்லோரையும் தூக்கிச் சாப்பிட்டுச் சுலபமாக முன்னணிக்கு வந்து விடுகிறார் ஐஸ்வர்யா.

✱ ஸ்ரீகாந்த் தேவா இசையில் 'திருவாரூர் தேரே' ரசிக்க வைக்கிறது. பாத்தின் பில்டப்புக்காகத் தரப்பட்ட 'பழம் நீயப்பா' பக்கா! ஆளாளுக்குப் படம் முழுக்க பன்ச் டயலாக் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். போதாக்குறைக்கு பேரரசு வேறு! துணுக்குத் தோரணங்களாக இருந்தாலும், ரசிகர்களின் நாடி பிடித்துப் பார்த்து எழுதப்பட்டிருக்கின்றன ரவி மரியாவின் வசனங்கள். விஜய் மில்டன் கேமரா, வித்தை காட்டுகிறது.

✱ நடித்திருப்பதுடன் பாடல்களும் எழுதி, இயக்கியிருக்கிறார் பேரரசு. திரைக்கதை செம ஸ்பீடு ஃப்ளாஷ்பேக் காட்சிகள் அத்தனை அழுத்தமாக இல்லை. திடீர் திடீரென்று முளைக்கும் பரபர திருப்பங்கள் படம் நெடுகத் தொடர்ந்து நம்மை சோர்வடையாமல் பார்த்துக் கொள்கின்றன. இந்தப் பொங்கலின் கமர்ஷியல் பஞ்சாமிர்தம் பழனி.

– ரேவதி

சாதாரண காதல் கதை. லாரி புக்கிங் ஆபீஸில் வேலை செய்யும் நாயகனுக்கு, கல்லூரி மாணவி மேல் வரும் யதார்த்த மான அன்பை, முலாம் பூசாமல், பூசி மெழுகாமல், உள்ளது உள்ளபடி பதிவு செய்திருக்கிறார்கள்.

அசோக்குமாரா இது? ஆள் ரொம்ப வே தேறிவிட்டார். லாரி ஆபீஸில் வேலை செய்யும் டைபனை அப்படியே பிரதிபலிக்கிறார். தேர்ந்த நடிப்பு கைவந் திருக்கிறது. ஊர் விட்டு ஊர் போய் அவர் படும் அவஸ்தைகள் படத்தின் உயிர் நாடி. பசியைக்கூட புறக்கணித்துவிட்டுத் தெருத்தெருவாக அலையும்போது கண் களைக் குளமாக்கி விடுகிறார்.

● யார் அந்த விசாகா? ஒன்றுமே தெரி யாதவர் மாதிரி இருந்துவிட்டு, காதல் புகுந்ததும் அவர் காட்டும் களேபரங்கள் 'அட' போட வைக்கின்றன. கண்களி லேயே தவிப்பை உணர்த்தும் வித்தை வெகுவாகக் கைவந்திருக் கிறது விசாகாவுக்கு.

● சம்பத்ராஜ் மிரட்டல் அப்பா! மகளின் மனத்தைப் புரிந்துகொள் ளவே முடியாத பாத்திரத்தைப் பக்கா வாகச் செய்திருக்கிறார். அவருக்கு ஈடு கொடுத்து நடித்திருக்கும் சரண்யா எடுக்கும் முடிவு எதிர் பாராதது.

● கஞ்சாகருப்பு படம் முழுக்க வந்து அலட்டாறை செய்கிறார். அவ ரது பாடி லேங்குவேஜும் டயலாக் டெலிவரியும் ரொம்பவே முன் னேறியிருக்கின்றன. பசி தாளாமல் ரயிலேற வந்த குடும்பத்தைத் தாஜா செய்து சாப்பிடுவது ரசிக்க வைக்கிறது.

● அறிமுக இசையமைப்பாளர் மனு ரமேசனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. பின்னணி இசை பிரமிக்க வைக்க, பாடல் கள் நம்மை சுகமாய்த் தாலாட்டுகின்றன.

● ராமேஸ்வரன் ஒளிப்பதிவில் மகா ராஷ்டிராவின் மேன்ஷன் வாழ்க்கையின் அவலம் கன்னத்தில் அறைகிறது. இண்டு இடுக்குகளைக்கூட விடாமல் சுழன்றடித் திருக்கும் கேமரா, இயக்குநருக்கு மிகப் பெரிய ப்ளஸ்.

● கனகுவுக்கு இது முதல் படம். அழுத்த மான திரைக்கதை அனைத்தையும் தூக் கிச் சாப்பிட்டு விடுகிறது. நெஞ்சில் பார மேற்றும் விதமாகச் சொல்லப்பட்டு வள ரும் திரைக்கதையின் உணர்ச்சிக்குவியல் கிளைமேக்ஸில் காணாமல் போகிறது. இந்தக் குறை மட்டும் இல்லாதிருந்தால் இது இன்னொரு 'காதல்'.

– மதுமிதா

பிடிச்சிருக்கு





கல்கி



2008 ஜனவரி 27
சர்வஜித் தை 13
மலர் : 66
இதழ் : 26

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
— பாரதியார்

ஊழல் உத்தரவாத திட்டம்!


"ஆட்சியில் இருப்பவர்கள், அடுத்த தேர்தலில் எப்படி ஜெயிப்பது என்று திட்டமிடுவதற்குப் பதிலாக, மக்களின் மனங்களை எப்படி வெல்வது என்று சிந்திக்கட்டும்!" - சமீபத்தில் சென்னை வந்திருந்த குஜராத் முதல்வர் மோடி விடுத்த அறிவுரை இது! அடுத்தடுத்து தேர்தல்களில் வெற்றி பெற்ற தார்மிக பலத்துடன் மோடி பேசியிருக்கிற இந்த வார்த்தைகள் அர்த்தமுள்ளவை. ஹிந்துத்வா குறித்து மோடியிடம் மாறுபடுவோர்கூட, வளர்ச்சிப் பணிகள் பற்றிய அவரது கருத்துகளுடன் முரண்பட முடியாது.

"வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் சராசரி மக்களை உள்ளடக்கியவையாக, அவர்களது முன்னேற்றத்தை உறுதி செய்பவையாக இருக்க வேண்டும். மிக ஏழ்மையில் உள்ளோர் கூட, அபிவிருத்திப் பணிகளின் ஓர் அங்கமாகி பயனடைய வேண்டும்" என்று கூறியுள்ளார் மோடி.

ஆனால், தற்போது நாட்டில் நடப்பவை இதற்கு நேர்மாறாக இருக்கின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் தனியார் நிறுவனங்களுக்கு ஏராளமான சலுகைகளும் கொள்ளை மலிவான விலைக்கு நிலமும் தரப்படுகின்றன. அந்த நில ஆர்ஜிதத்துக்காக, எளிய மக்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்தும் பணியிடங்களிலிருந்தும் அகற்றப்பட்டு, வீடும் வேலை வாய்ப்புமின்றித் திண்டாடுகிறார்கள்!

இன்னொரு புறம் வேலையில்லாத மக்களுக்கு வேலை உறுதி செய்யும் திட்டத்தை மத்திய அரசு தீட்டுகிறது. பல்லாயிரம் கோடி நிதி ஒதுக்கி, வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அங்கங்கே





தற்காலிகமாக கிராமப்புறப் பணிகளை ஒதுக்கித் தந்து, அதற்கு ஊதியமும் தரத் திட்டம் வகுக்கப்படுகிறது. இந்த கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தில் கணக்கில்லாத ஊழலும் லஞ்ச லாவண்யமும் தலைவிரித்தாடியிருக்கின்றன. மத்திய தணிக்கை அதிகாரி தமது அறிக்கையில் இதனைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசையும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சுணக்கமும் அசிரத்தையும் காட்டிய மாநில அரசுகளையும் கடும் கண்டனத்துக்கு உட்படுத்தியிருக்கிறார்.

ஆண்டொன்றுக்கு 1200 கோடி ரூபாய் ஒதுக்கி, 330 மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்த மத்திய அரசு, வேலை இல்லாத குடும்பங்களுக்கு, ஓர் ஆண்டில் நூறு நாட்களாவது வேலையும் அதன் மூலமாக குறைந்தபட்சம் எட்டாயிரம் ரூபாய் ஊதியமும் கிடைக்கச் செய்யத் திட்டமிட்டது.

ஆனால், பெரும்பாலான மாநிலங்கள் இந்தக் குறியீட்டை நெருங்கவே இல்லை. சராசரியாக 18 நாட்களே வேலை வாய்ப்பு தரப்பட்டு, குடும்பம் ஒன்றுக்கு 1500 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடத்தப்படும் இத்திட்டத்தில், முறைகேடுகள் ஏராளமாக நிகழ்ந்துள்ளன. முறையான ரசீதுகளின்றி பணம் செலவிடப்பட்டிருக்கிறது. அதிலும் காங்கிரஸ் ஆட்சி நடந்த அல்லது நடக்கிற மாநிலங்களில்தான் முறைகேடுகள் அதிகம்!

மக்களுக்கு இலவசங்களை அள்ளித் தருவதும் தற்காலிகமாக பசி தீர்க்கத் திட்டம் தீட்டுவதும் வளர்ச்சிப் பணிகள் ஆக மாட்டா. நியாயமான ஊதியத்துக்கு மக்களுடைய உடலுழைப்பைப் பெற்றுப் பயன்படுத்தும் பணிகளை உருவாக்கித் தருவதும், அந்தப் பணிகளையும் பணியாளர்களையும் கொண்டே கிராமப்புற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதும், அதன் மூலம் விவசாயம் சார்ந்த தொழில்கள் உருவாக வழிவகுப்பதும்தான் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்க முடியும்.

மமதா பானர்ஜி சுட்டிக் காட்டியிருப்பதுபோல், ஒரு தனியார் நிறுவனம் ஒரு இலட்ச ரூபாய்க்கு கார் உற்பத்தி செய்து விற்க, ஓராயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள விவசாய நிலம் கையகப்படுத்தப்பட்டு, இலவசமாக அந்தத் தொழில் நிறுவனத்துக்கு வழங்கப்படுமேயானால், அது வளர்ச்சி அல்ல; ஓர வஞ்சனை!



* விழா மேடையில்...

"ரகு வம்சத்துக்கு ஒரு ராமன்... மிருதங்க வம்சத்துக்கு ஒரு ரகு!" என்று மெச்சி, வாழ்த்தினார் பாலமுரளி கிருஷ்ணா. குதிரை பூட்டிய சாரட்டு வண்டியில் ஊர்வலம்; யானையைக் கொண்டு மாலையிடச் செய்து வரவேற்பு! இசையுலகின் நட்சத்திரக் கலைஞர்களும் நிர்வாகிகளும் பங்கேற்க ஒரு விழா - சங்கீத கலாநிதி பாலக்காடு ரகுவுக்கு எண்பது வயது நிறைந்ததை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்திய கலாசார கவுன்சில் தலைவர் லலித் மான்சிங் (அமெரிக்கத் தூதராக இருந்து ஓய்வு பெற்றவர்), ஹிந்து ராம் உள்பட ஏராளமானவர்கள் வாழ்த்திப் பேச, விழா நாயகரைப் பற்றிய குறும் படம், இணையதளம் திறப்பு, முன்னணி கலைஞர்களின் தாள வாத்திய நிகழ்ச்சி என்று நவீன கொண்டாட்டங்களையும் விட்டு வைக்கவில்லை விழாக் குழுவினர்!

நவீனமும் பாரம்பரியமும் கலந்தமைந்த விழாவைப் போன்றதுதான் பாலக்காடு ரகுவின் வாசிப்பும்! மாமேதையான பாலக்காடு மணி அய்யரிடம் பயின்று, புதுக்கோட்டை பாணி மிருதங்க வாசிப்பில் மன்னரான பழனி சுப்ரமணிய பிள்ளையின் நுணுக்கங்களையும் கிரஹித்துக்கொண்டு, புத்துணர்ச்சி மிக்கதொரு பாணியை உருவாக்கியவர் பாலக்காடு ரகு. மணி அய்யரின் நாதமும் பழனியின் கும்கிகளும் இழையும் அந்தப் பாணியை, நிறைய சிஷ்யர்களுக்கும் கற்றுத் தந்து நிலைப்படுத்தியிருக்கிறார்.

கனமும் நிதானமும் மிக்க கீர்த்தனைகளுக்குக் கம்பீரமாக நடையை 'அமர்த்தி' வாசிப்பது ரகுவுடைய டிரேட் மார்க். வித்வான் இரண்டு களை கீர்த்தனையை ஆரம்பித்தால், கும்மென்று களைகட்ட வைப்பார். கீர்த்தனைகள் தெரிந்து, சங்கதிகளை அனுசரித்து வாசிப்பதிலும் வல்லவர். 'கணக்கு - வழக்கு' பண்ணி கச்சேரியைப் பிரகாசிக்கச் செய்வதிலும் நிபுணர். இத்தனை பண்புகளும் ஒருங்கிணைந்து அவருக்குச் சர்வதேச அங்கிகாரத்தையும் மரியாதையையும் பெற்றுத் தந்துள்ளன.

தம்மைக்காட்டிலும் மிகவும் ஜூனியரான கலைஞர்களின் கச்சேரிகளுக்குப் போய் அமைதியாக உட்கார்ந்து கேட்டுவிட்டு வருவார். அவர்களுக்கு விரும்பி வாசிக்க நேர்ந்தால், 'ஊக்குவிப்பதற்காக வாசித்தேன்' என்று பெருமையடித்துக் கொள்ளமாட்டார். தகுதியுடையவருக்கு வாசிப்பதாகக் கருதியே ஆர்வம் காட்டுவார்.

'மிகத் தாமதமாகவே மியூசிக் அகாடமியின் சங்கீத கலாநிதி விருது வழங்கப்பட்டது (2007 - 08) ரகுவுக்கு' என்றொரு விமர்சனம் எழுந்தபோதிலும், எந்தச் சர்ச்சையிலும் சிக்காமல் தாளமே மூச்சாக, நாதமே பேச்சாகத் தமது வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்.

அதிகம் பேசமாட்டார் பாலக்காடு ரகு - அதனாலென்ன, அவர் விரல்கள் அர்த்தமுள்ள 'சொல்' பேசி, சாதித்துவிட்டன.

- சாருகேசி



* பாலக்காடு ரகு


மிருதங்க வம்சத்து மன்னர்!

பாகம் – 2

வாரம் ஒரு பாசுரம்

போகாத ஊரில்லை

சுஜாதா



6

திருமங்கை ஆழ்வார் வைணவத் திருப்பதிகள் அனைத்துக்கும் சென்று பாடியவர். வடக்கே நைமிசாரண்யம் வரை அவர் சென்றிருக்கிறார். பத்ரிகாசிரமத்துக்குப் போயிருக்கிறார். பிரயாணம் என்பது இருப்புப் பாதைகள் இல்லாத அந்தக் காலத்தில் மிகவும் கஷ்டமான காரியம்.

அதனால், அந்தந்தத் தலங்களுக்கு வந்து சேர்ந்ததே பெரிய காரியம் என்பதுபோல ஆழ்வார் பாடியிருப்பதில் ஆச்சரியமில்லை. இந்த நைமிசாரண்யப் பாடலில் மனித உடலின் அழிவைச் சொல்கிறார்.

'ஊன் இடைச் சுவர் வைத்து, என்பு
தூண் நாட்டி
உரோமம் வேய்ந்து, ஒன்பதுவாசல் -
தான் உடைக் குரம்பை பிரியும்போது,
உன் தன்
சரணமே சரணம் என்று இருந்தேன்;
தேன் உடைக் கமலத் திருவினுக்கு
அரசே!
திரை கொள் மா நெடுங்கடல்
கிடந்தாய்!
நான் உடைத் தவத்தால் திருவடி
அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்!'

சருமம் என்னும் இடைச்சுவர் வைத்து, எலும்பு என்னும் தூண் அமைத்து, உரோமம் வேய்ந்து, ஒன்பது வாசல் கொண்ட, உடல் இறக்கும்போது உனது சரணமே சரணம் என்று இருந்தேன். இலக்குமி மணாளனே! பாற்கடலில் படுத்திருப்பவனே! தவம் செய்து உன் திருவடியை அடைந்தேன். நைமிசாரண்யத்தில் எழுந்தருளியிருப்பவனே!

சாளிக்கிராமம் என்பது நேபாளத் தேசத்தில் இருக்கிறது. இப்போதும் அங்கே சென்று வைணவர்கள் கல்லெடுத்து வந்து அதைப் பூஜிக்கிறார்கள். 'சாளிக்கிராமத்தில் சரணடைவாய் நெஞ்சே' என்று பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

திருமங்கை ஆழ்வார் போகாத வைணவத் தலம் எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

(படிக்கலாம்)

மகாத்மா காந்தி, பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பி, பம்பாயில் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்திருந்த நேரம். மமிபாய் என்பவரின் சிறிய சட்டப் பிரச்னைக்காக, அவரது வழக்கறிஞராக நீதிமன்றம் சென்று வாதாட ஒப்புக்கொண்டு, அதற்காக முப்பது ரூபாய் தொகையையும் பெற்றுக்கொண்டார். முதன்முதல் நீதிமன்றப் படியேறி உள்ளே போனதும், காந்திஜிக்குத் தைரியம் குறைந்தது. அன்று எதிர்க்கட்சி சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டும். நீதிபதி வந்து அமர்ந்து விட்டார். சாட்சியும் கூண்டில் ஏறிவிட்டார். ஆனால், காந்திஜிக்கு வாயில் வார்த்தையே வரவில்லை. யோசித்து வைத்திருந்த குறுக்குவிசாரணைக் கேள்விகளெல்லாம் ஒரு நொடியில் மறந்து போய்விட்டன; தலைசுற்றியது. மமிபாயை அழைத்து, தம்மால் வழக்கை நடத்தமுடியாது என்பதை ஒப்புக்கொண்டு, உடனே படேல் என்ற வேறு ஒரு நல்ல வழக்கறிஞரை ஏற்பாடு செய்து கொடுத்தார். கூடவே, தாம் வாங்கிய கட்டணத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரும் மீண்டும் நீதிமன்றப் படியேறி, உள்ளே போய்ப் பேசுவதற்கு, காந்திஜிக்குத் தைரியம் வரவேயில்லை. பின்னர், தென்னாப்பிரிக்காவுக்கு வழக்கறிஞராகப் பணியாற்றப் போய், அங்கே பிரசித்திபெற்ற வழக்கறிஞராகி, மிகவும் பிரபலமான மனிதராக இந்தியா திரும்பினார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. எனவே, காந்திஜி இந்திய நீதிமன்றங்களில் உள்ளே போய் ஒரு வார்த்தை கூட கடைசிவரையில் வழக்கறிஞர் என்ற முறையில் பேசியது இல்லை. பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டு, கோர்ட்டில்



ஆஜர் செய்யப்பட்டபோது, நீதிபதியே எழுந்து நின்றார். இன்றும் எல்லா இந்திய நீதிமன்றங்களிலும், நீதிபதியின் தலைக்கு மேலே காந்திஜியின் படம்தான் மாட்டி யிருக்கிறார்கள்!

மகாகவி பாரதி ஒரு கவிதைப் போட்டியில் கலந்து கொண்டார். அவருக்கு இரண்டாம் பரிசுதான் கிடைத்தது. அந்தக் கவிதை தான் இன்றும் பிரபலமாக இசைக்கப் படும் 'செந்தமிழ் நாடெனும் போதி னிலே...' என்ற பாடல். முதல் பரிசு பெற்ற கவிதை எது? அதை எழுதிய கவிஞர் யார்? மகாகவியைவிட நன்றாக எழுதிய அந்தக் கவிஞர் பின்னாளில் என்ன ஆனார்? தெரியவேயில்லை!

சுவாமி விவேகானந்தர், அமெ ரிக்காவில் நடைபெற்ற சர்வ மத மகாநாட்டில் கலந்துகொள்ள வேண் டும் என்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோது, அந்த மகா நாட்டில் கலந்துகொள்ள அறிமுகக் கடிதம் யாராவது வழங்கவேண்டும் என்ற பிரச்னை எழுந்தது. பலரைச் சந்தித்து அறிமுகக் கடிதம் பெற முயற்சித்தும் கடைசிவரை கிடைக்கவில்லை. இருந்தாலும், எந்த அறிமுகக் கடிதமும் இல்லாமல், நிச்சயமாக இது நடக்கும் என்ற உறுதி யுடன் அமெரிக்கா சென்றுவிட்டார். இறுதி யில் அந்த மாநாட்டின் தலைவரே, சுவாமிஜியிடம் அறிமுகக் கடிதம் கேட்ட தைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'சூரிய னைப்போய், பிரகாசிக்கத் தகுதி இருக்கிறதா? என்று கேட்பதைப் போல் கேட்டுவிட் டேன்' என்றார்.

தோல்விகளை நேசி!

எல்லோருக்கும் வாழ்க்கையில் பல தடைகள், தடங்கல்கள், தோல்விகள் ஏற்படுவது சகஜம்தான். ஒரே சீரான வாழ்க்கை என்று எந்தப் பெரிய தலைவருக்கும் சரி, சாதாரண மனிதர்களுக்கும் சரி இருந்ததே இல்லை. இந்தத் தோல்விகளை நாம் எப்படிச் சமாளிக் கிறோம் என்பதில்தான் நமது தலைமைப் பண்பு வெளிப்பட வேண்டும். 'தோல்வி யில் கலங்கேல்' என்ற பாரதியின் வாக்கு தான் இன்று 'Crisis Management' என்று பேசப்படுகின்றது.

பிரச்னை வந்தால் என்ன செய்யவேண்டும் என்பதை, முன்கூட்டியே யோசித்து திட்டம் போட்டு வைப்பதுதான் சிறந்த மேலாண்மை பண்பு.

எதையும் வந்த பின்பு சமாளிப்பது என்பது 'நடவடிக்கை எடுப்பது' என்ற ரகம். ஆனால், என்ன பிரச்னை வரும் என் பதை முன்கூட்டியே யோசித்து வைத்து,

வந்தால் என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு வைப்பது, மேலாண்மை பண்பு; தலைமை பண்பு. எனவே, எதிர்பாராத தோல்விகளை எதிர்பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும். இது போன்ற பிரச்னைகளை அதன் தீவிரத்தைப் பொறுத்து தரம்பிரித்து வைத்துக்கொள்ளலாம்.

உதாரணமாக, பூகம்பம் வந்தால் என்ன செய்வது? சில பிரதேசங்கள் பூகம்பத்துக்குப் 'பெயர் போனவை!' ஜப்பான் போன்ற நாடுகளில், கட்டடம் கட்டும்போதே பூகம்பத்தை மனத்தில் வைத்து அதற்கு ஏற்றாற்போல் அதிகம் செலவுசெய்து கட்டுவார்கள். நம் நாட்டில் அதற்கான சாத்தியக்கூறு குறைவு என்பதால், அந்த அளவு நமக்கு அவசியம் இல்லை.

எந்தச் செயலையும் செய்ய ஆரம்பிக்கும் போது, இதில் என்ன பிரச்னைகள் வரக் கூடும் என்று ஆராய்ந்து, அதை வகைப் படுத்தி, என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திட்டம் போட்டு வைத்துக்கொள்வதுதான், நம்மைத் தோல்வியில் கலங்காமல் எந்த நிலையையும் ஏற்றுக் கொள்ள வழி செய்யும்.



இன்றைய நவீன திட்டமிடும் திறமையுடன், நம் நாட்டின் பாரம்பரிய மனவலிமை தரும் எண்ணங்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.


'அண்டம் சிதறினால் அஞ்ச மாட்டோம்; கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்' என்றும், 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை; அச்சமில்லை; அச்சமென்பதில்லையே' என்றும் பாரதி சொன்ன வார்த்தைகள் நினைவில் இருந்தால், எந்தத் தோல்விகளும், தடைகளும், தடங்கல்களும் நம்மை ஒன்றும் செய்யாது. மனவலிமையே இவற்றைச் சமாளிக்க முக்கியமான மாற்று மருந்து.

(சுவாசிப்போம்)



புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மகிழ்வித்து மகிழுங்கள்.



ஆதரவற்ற பெண் குழந்தைகளின் புகலிடம்

வேதாரண்யம்

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்

வேண்டுகோள்

பேரன்புடையீர்;

கல்வியயிலும் ஏழை, எளிய, ஏதிலிச் சிறுமியருக்கு உதவுங்கள்.

கடை கோடி கிராமப்புறத்தில் காந்தியச் செம்மல் வேதாரண்யம் உப்பு சத்யாகிரஹ தியாகி சர்தார் வேதரத்னம் அவர்களும் அவர்தம் ஒரே மைந்தர் பத்மஸ்ரீ வே. அப்பாகுட்டி அவர்களும் இந்திய சுதந்திரத்திற்கு முன்பே (1946) காந்தி அடிகளின் ஆசியுடன் தொடங்கிய மகளிர் தொண்டு நிறுவனமான கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் என்ற எளிய சமுதாயத்தில் வாழும் சுமார் 3,000 பெண் குழந்தைகள் சார்பில் இந்த வேண்டுகோளை வைக்கிறோம்.

பெருந்தலைவர்களான, பூஜ்ய விநோபாபாவே தொடங்கி வைத்த கோசாலை,பாரத ரத்தினங்கள் ராஜாஜி தொடங்கி வைத்த அன்னபூர்ணாலயம், முதல் பார்லிமெண்ட் சபாநாயகர் ஜி.வி. மாவ்லங்கர் தொடங்கி வைத்த கலைமகள் நிலையம், சி.சுப்ரமண்யம் அவர்கள் தொடங்கி வைத்த நசிகேத நிவாஸ், காமராஜ், ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் தொடங்கி வைத்த குடிநீர் திட்டம், மஹாத்மாவின் பேரன் துஷார் காந்தி, மத்ய அமைச்சர்கள் ப.சிதம்பரம், EVKS இளங்கோவன், G.K. வாசன், இராஜாஜியின் பேரன் C.R. கேசவன் ஆகியோர் தொடங்கிய பேக்கரி, மருத்துவமனை ஆகியவற்றை பெற்று அவர்கள் நல் ஆசியுடன் காந்திய வழியில் வாழ பயிற்சி எடுக்கிறோம்.

கிராமப்புற ஏழை எளிய ஏதிலி அகதிப் பெண் குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருப்பிட வசதி, கல்வி, தொழிற்கல்வி, (ஆஃப்செட் அச்சுப்பள்ளி, தொலைக்காட்சி கட்ட - பழுது நீக்க, கம்யூட்டர் கட்ட - பழுதுநீக்க, மின்னணு சாதனங்கள் செய்ய, சிவில் ட்ராப்ட்ஸ்மன், ரேடியோ டிவி, ஆடை தயாரித்தல், பசு பராமரித்தல், சித்தவைத்யம், ஊதுவத்தி, செவிலியர், பேக்கரி, அலுவலக நிர்வாகம் போன்ற பயிற்சிகள்) ஆகியன அளித்து 61 ஆண்டுகளாக ஆதரிக்கும் குருகுலம் மகளிர் தொண்டு நிறுவனத்திற்கு ஆதரவு தாருங்கள்.

ஆதரவற்ற பெண்களின் வாழ்வில் மகிழ்ச்சி, மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித்தர உங்களுடைய, தங்கள் அன்பர்களுடைய அன்பளிப்புகளை, நன்கொடைகளைப் பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். ஆதரியுங்கள். மகிழுங்கள்.



நிறுவனர்
அமரர்.
சர்தார்.
வேதரத்னம்
தபால்தலை

முகவரி: கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் தேசிய விருது பெற்ற மகளிர் தொண்டு நிறுவனம் த.பெ.எண்.2. வேதாரண்யம் - 614 810. நாகப்பட்டினம் மாவட்டம் போன்:(04369)250227, 250027,250011

தந்தி - GURUKULAM, VEDARANIAM -614 810.

www.gurukulam.org E mail: gurukulam vdm @ g mail.com

அரசு சலுகை: உள்ளாட்சி, கதர், அரசு நிறுவனங்கள், திருக்கோயில்கள், கல்வி நிலையங்கள், விலைப்புள்ளி கோராமல் குருகுல அச்சகத்திற்கும், குருகுல எலக்ட்ரானிக்ஸ்க்கும், வேலை கொடுக்கலாம். விற்பனை வரி கிடையாது

Govt.of India வெளிநாட்டு உதவி பெற அனுமதி. FCRA No. 075960069

கொடுத்தால் வரும்

மேஷம்: பணக் கஷ்டம் இருக்காது. கல்வி வளம் மேல்லோங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வீடு / மனை வாங்க ஏற்ற தருணம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ராகு / கேது வழிபாடு செய்து வர, நற்பலன் அதிகரிக்கும்.

ரிஷபம்: உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வேலை மாற்றம் ஏற்படும். தொழில் துறையில் சற்று மந்தநிலை காணப்படும். பொருளாதாரச் சிரமம் இருக்கும். தாயின் உடல்நிலை சற்று பாதிக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

நடக்குமென்பார்; நடக்கும்

மிதுனம்: திருமணக் காரியம் கைகூடும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வேலையில் நற்பெயர் கிட்டும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும். சத்ரு தொல்லை விலகும். புதிய வீடு / மனை வாங்க நேரிடும். வெளிநாடு அழைப்பு வந்து சேரும். பரிகாரம் தேவையில்லை.

கடகம்: எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. படிப்பில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. குடும்ப வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. சக ஊழியர்களிடம் அனுசரித்துப் போவது நல்லது. பணக் கஷ்டம் இருக்காது. திருமணக் காரியம் கைகூடும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர, கஷ்டங்கள் விலகும்.

சிம்மம்: எதிலும் நிதானித்துச் செயல்பட்டு, வெற்றிவாகை சூடுவீர்கள். மனக் குழப்பம் தீரும். திருமணக் காரியம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். கடன் தொல்லை தீரும். எதிர்ப்புகள் விலகும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வழக்கு வெற்றி பெறும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

கன்னி: இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். கடன் தொல்லை தீரும். திருமண முயற்சி பலன் அளிக்கும். வேலையில் நற்பெயர் உண்டாகும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குரு / சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

துலாம்: பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வீடு / மனை மூலம் ஆதாயம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். சத்ரு தொல்லை விலகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: திருமணம் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும்.

வேலை மாற்றம் ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். புதிய வீடு / மனை வாங்க நல்ல நேரம். கடன் தொல்லை தீரும். உண்டாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

தனுசு: மனத்தில் சந்தோஷம் மிகுந்து காணப்படும். இல்லற வாழ்வு மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீண்டகாலம் முடிவு பெறாத வழக்குகள் வெற்றி பெறும். தெய்வ தரிசனம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். சுபநிகழ்ச்சி கைகூடும். தடை விலகித் திருமணம் நடக்கும். குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண் டாகும்.

மகரம்: யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கல்வியில் அதிக அக்கறை எடுத்துப் படித்தல் நலம். வாகனத்தில் செல்லும்போது உஷார். திருமணம் கைகூடும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

கும்பம்: பணக் கஷ்டம் இருக்காது. கடன் தொல்லை தீரும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்ப்புத் தொல்லை விலகும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வரவும்.

மீனம்: பொருளாதார சிரமம் இருக்காது. கடன் தொல்லை தீரும். நண்பர், உறவினர்கள் மூலம் அனுகூலம் உண்டாகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சத்ரு தொல்லை நீங்கும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். வாகன சுகம் ஏற்படும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வீடு / மனை வாங்க நல்ல நேரம். வியாபாரத்தில் நல்ல அனுகூலம் ஏற்படும். குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டா கும்.



ஜனவரி 30 - காந்திஜி நினைவு நாள்

அன்பின் செயல் வீரியம்!

—மார்டின் லூதர் கிங்


ஒரு ஞாயிறு பிற்பகல், ஹோவர்டு பல்கலைக்கழகத் தலைவர் டாக்டர் மார்டெகாய் ஜான்சனின் சொற்பொழிவைக் கேட்பதற்காக ஃபிலடெல் ஃபியாவுக்குப் போனேன். டாக்டர் ஜான்சன், அப்போதுதான் இந்தியாவுக்குப் பயணம் போய்விட்டுத் திரும்பியிருந்தார். குறிப்பாக, காந்திஜியைப் பற்றியும் அவர் வாழ்க்கை மற்றும் அறிவுரைகள் குறித்தும் பேசியதுதான் என் ஆர்வத்தைத் தூண்டியது. கூட்டம் முடிந்து வெளியே வந்ததும் காந்திஜியைப் பற்றி அரை டஜன் புத்தகங்களை வாங்கிவிட்டேன். அதைப் படிக்கப் படிக்க, அவருடைய வன்முறையற்ற சத்தியாக்கிரக வழிமுறைகள் என்னைக் கவர்ந்தன. சத்தியாக்கிரகம் என்ற வழிமுறையே எனக்கு மிகவும் முக்கியமானதாகப்பட்டது. சத்தியாக்கிரகத்தில் அன்பே ஆயுதம். காந்திஜியின் கருத்துக்களில் நான் ஆழ்ந்து பார்த்தபோது, சமுதாய மாற்றத்தில் அன்பின் செயல் வீரியத்தை முதன்முதலாக உணரத் தொடங்கினேன்.

இயேசுநாதருக்குப் பிறகு, தனிநபர்களின் உரசல்களையும் தாண்டி, மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாக அன்பு தத்துவத்தை, சமுதாய அளவில் பெரிதாகப் பயன்படுத்திய முதல் மனிதர் காந்திஜிதான். அவருக்கு, ஒட்டுமொத்த சமூக மாற்றத்துக்கான சக்திமிக்க கருவியாக அன்பு இருந்திருக்கிறது. நான் விரும்பும் சமுதாய மாற்றத்துக்கு, காந்திஜியின் இவ்வகை அன்பு மற்றும் வன்முறையற்ற வழிமுறையே சிறந்தது என்றும் கண்டுகொண்டேன். மற்ற தத்துவங்கள் தராத மனவெழுச்சியை காந்திஜி எனக்குத் தந்தார். கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தில், கிறிஸ்துவத்தின் அன்புவழி, வன்முறையற்ற காந்தியத்தின் கொள்கை மூலம் மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகப் பயன்படும் என்பதை நான் ஆரம்பத்திலேயே உணரத் தொடங்கினேன். வேறு வகையில் சொல்வதானால், ஏசு கிறிஸ்து போதனையின் மூலம் உணர்வையும், உத்வேகத்தையும் தந்தாரென்றால், காந்திஜியின் அகிம்சை,



போராட்டத்துக்கான வழிமுறையை வகுத்துக் கொடுத்தது.

தண்டி யாத்திரையை எட்டு நபர்களுடன் தொடங்கிய காந்திஜியுடன் மெல்ல மெல்ல லட்சக்கணக்கானவர்கள் சேர்ந்து கொண்டனர். காந்திஜி கடற்கரையை அடைந்து தம் கரங்களால் ஒரு பிடி உப்பை அள்ளி, தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியை, அந்தச் சட்டத்துக்குக் காண்பிக்கும் எதிர்ப்பாக வெளிப்படுத்தினார். அப்போது அவர், தம் மக்களிடம், ''நீங்கள் தாக்கப்பட்டால், திருப்பித் தாக்காதீர்கள். உங்களை நோக்கிச் சுட்டால்கூட நீங்கள் திருப்பிச் சுடாதீர்கள். உங்கள் மீது வசை மாரிப் பொழிந்தால் நீங்களும் அப்படியே செய்யவேண்டாம். நீங்கள் பாட்டுக்கு நகர்ந்துகொண்டே இருங்கள். அப்படிச் செல்லும்போது, நம்மில் சிலர் இறக்க நேரிடலாம், சிறையில் அடைக்கப்படலாம். ஆனால், போய்க்கொண்டே இருங்கள்'' என்றார்.



● மார்ட்டின் லூதர் கிங்

இந்த உலகில், வேறு எவரையும் விட, காந்திஜிதான் தம் வாழ்நாளில் அதிக மக்களைத் திரட்டி ஒன்றாக இணைத்தார். அதன் மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முதுகெலும்பையே உடைத்தார். இதுவே உலக சரித்திரத்தில், நடந்த குறிப்பிடத்தகுந்த நிகழ்வாக நான் கருதுகிறேன். முப்பத்தொன்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் அதனால் தங்கள் விடுதலையை அடைந்தார்கள். இத்தனைக்கும் துளியும் வன்முறை எதும் இல்லாமல்.

ஆனால், இந்த உலகம் காந்திஜியைப் போன்ற ஒருவரை விரும்புவதில்லை. இது வேடிக்கையாக இல்லை? உலகினர் கிறிஸ்துவை விரும்புவதில்லை; ஆபிரஹாம் லிங்கன் போன்றவர்களை விரும்புவதில்லை. அவரைச் சுட்டுக் கொன்றார்கள். இந்தியாவுக்காக அத்தனை செய்தவரை, சுமார் நாற்பது கோடி மக்களை ஒன்றாக இணைத்தவரை, இணைத்து விடுதலை பெற்றுத் தந்தவரைக் கொன்றார்கள். முஸ்லிம்களுக்கு மட்டும் ஆதரவாக அவர் இருந்ததாக, ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் கருதினர். அதனால் வன்முறையை விரும்பாத அவர், வெறுப்பாளர் ஒருவரின் கைகளால் மாண்டார். இதுதான் சரித்திரம் போலும்! கிறிஸ்து மறைந்த கிழமையிலேயே அவரும் மறைந்தது குறிப்பிடத்தக்கது அல்லவா? அன்று வெள்ளிக் கிழமை. காந்திஜியைச் சுட்டவன், அவரை மனித குலத்தின் இதயத்தில் இருத்திவிட்டான். பிளவுபட்டிருந்த தேசத்தின் காயத்துக்கு மருந்திட்டுக் குணமாக்க முயன்ற காரணத்துக்காக, மகாத்மா காந்தி சுடப்பட்டார். அதே போன்ற காரணத்துக்காகத்தான் ஆபிரகாம் லிங்கனும் சுடப்பட்டார். அவர் சுடப்பட்டபோது, அருகிலிருந்த செயலர் ஸ்டான்ட்டன் எழுந்து, ''இப்போது இவர் சரித்திரப் புருஷர் ஆகிவிட்டார்'' என்றார். இனி மகாத்மா காந்தியைப் பற்றியும் அப்படியே கூறலாம்.

(அமெரிக்காவில் கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங், காந்திஜியைப் பற்றித் தமது சுயசரிதையில் குறிப்பிட்டவை)

நன்றி : **சர்வோதயா டாலிஸ்மேன்**
நவ-டிசம்பர் 2007
தமிழில் : **சாருகேசி**



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் அந்தந்த பள்ளியைச் சார்ந்த முதல்வர்கள் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 5 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்து விளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 15 பேர் கொண்ட பெயர் பட்டியலை அடியிற்கண்ட முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் 20 தினங்களுக்குள் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும். 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரை இவ்விருதுக்கு அனுப்பி வைக்கும் பள்ளிக்கு சிறப்புக் கேடயம் வழங்கப்படும்.

நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-625 016.

செல் 94439-30815, 94426 30815.

யுவஸ்ரீ கலா பாரதி விருதுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களும் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளுடன், ரூ 10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் இத்துடன் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தனியாகவும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இசை, பரத நாட்டிய ஆசிரியைகள், ஓவியம், கராத்தே, யோகா மற்றும் UC MAS, ABACUS, HINDI மாஸ்டர்களும் தங்களிடம் பயிலும் சிறப்பானவர்களின் பெயர் பட்டியலையும் அனுப்பலாம்.

கவிதை தொகுப்பு நூல்

பாரதி யுவ கேந்திரா சார்பில் 200 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பு நூல் பிப்ரவரியில் வெளியிட உள்ளோம். இந்நூலுக்கு கவிஞர்கள் 24 வரிகளுக்குள் மரபு அல்லது புதுக்கவிதை ஒன்று எழுதி எமது மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். அத்தோடு ரூபாய் 250/- M.O. மூலம் அனுப்பவும். ஒவ்வொருவருக்கும் 5 புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும்.



பாரதி யுவ கேந்திரா ட்ரஸ்ட்

(Regd.)

G28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை - 625 016.
Cell : 94439-30815, 94426-30815.

"யுவஸ்ரீ கலா பாரதி விருது - 2007"

பெயர் :

தந்தை பெயர் :

வகுப்பு :

தற்பொழுது பயிலும் பள்ளி - கல்லூரி பெயர் :

வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி எண் :

அதிகமாக பரிசு பெற்ற போட்டி (ஏதேனும் ஒரு துறையைக் குறிப்பிடவும்) :

தங்களின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இங்கு ஒட்டவும்

விருது பெறுபவர் கையொப்பம்

தேதி :

மறுத்த மன்னிப்பும் கேட்ட மன்னிப்பும்!

சிலர் லவுட் ஸ்பீக்கர் வைத்துப் பேசினாலும் யார் காதிலும் விழாது. ஆனால், குஷ்பு போன்றவர்கள் கொஞ்சம் வேகமாக மூச்சுவிட்டாலே பூகம்பம் கிளம்பிவிடும். இப்போதுகூட திருமாவளவனுடன் ஒரு புத்தக வெளியீட்டு விழா மேடையிலேயே வாக்குவாதத்தில் ஈடுபட்டுச் சூட்டைக் கிளப்பியிருக்கிறார். இன்னமும்கூட அந்த உஷ்ணம் அடங்கவில்லை. இதுபோன்ற பூகம்பத் தருணங்கள் குஷ்புவுக்கு மாத்திரம் பலமுறை வந்து, அவரைப் பரபரப்பிலேயே வைத்திருக்கிறது. ஒவ்வொரு தருணமாகப் பார்க்கலாம்.

முதல் வினை, தங்கர்பச்சான் விவகாரம்.

சர்ச்சைத் தீக்கு நெருப்பு வைத்தவர் இயக்குநர் தங்கர்பச்சான். தம்முடைய 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்துக்கான ஷூட்டிங்கின்போது சில பல பிரச்னைகள் எழுந்தன. அதனால் மனரீதியாகக் காயம்பட்ட அவர், ஆற்றாமை காரணமாகப் பத்திரிகை ஒன்றில், பணத்தை மட்டுமே குறிவைத்து நடிக்கும் நடிகைகள் பாலியல் தொழிலாளிகள் என்கிற அர்த்தம் வரும் வகையில் சொன்னதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது நடிகைகள் மத்தியில் பலத்த உஷ்ணத்தைக் கிளப்பிவிட்டது. தங்கர்பச்சான் உடனடியாக மன்னிப்புக் கேட்கவேண்டுமென கோரிக்கையும் எழுந்தது.

ஒரு சுபயோக சுபதினத்தில் தங்கர்பச்சான் மன்னிப்புக் கேட்கத் தயாரானார். அன்றைய தினம் நடிகர் சங்கக் கட்டடத்தில் இருக்கும் சின்னப்பா தேவர் நினைவரங்கம் நடிகர், நடிகைகளால் நிரம்பியிருந்தது. சரியாக மதியம் 1.30 மணிக்கு அங்கே வந்தார் தங்கர். அதற்குள் எல்லா நடிகர், நடிகைகளும் குழுமியிருந்தனர். அவர்கள் முன் பேசிய தங்கர், 'தாம் அப்படிச் சொல்லவில்லை. இருந்தாலும் பேட்டியில் அப்படிப் பிரசுரமாகிவிட்டது. இதனால் மனவருத்தம் அடைந்த நடிகைகள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்' என்று சொல்லி, கைகூப்பிவிட்டுக் கிளம்பினார்.

'அப்பாடா, பிரச்னை முடிந்தது' என்று நடிகர் சங்கத் தலைவராக இருந்த விஜயகாந்த் பெருமூச்சுவிடுவதற்குள், அதிரடியாகக் களத்தில் குதித்தார் குஷ்பு. கூடவே, சில நடிகைகள். 'யார் இந்த தங்கர்?' என்று ஆங்கிலத்தில் கேட்ட குஷ்பு, 'அவர் எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும், அவரை நாங்கள் மன்னிக்கப் போவதில்லை. நாங்களும் அவரைப் பற்றிப் பத்திரிகைகளில் பேசுவோம்' என்று ஆவேசப்பட்டார்.

இதனால் பிரச்னை மேலும் விபரீதம் அடைந்தது. 'மன்னிப்புக் கேட்டதும் முடிந்துபோக வேண்டிய விவகாரத்தை குஷ்பு வேண்டுமென்றே பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்' என்று பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவேசப்பட்டனர். நிற்க.

இப்போது வேறொரு சூழ்நிலை. வேறொரு காட்சி.

சோகமே உருவாக அமர்ந்திருந்தார் குஷ்பு. எதிரே செய்தியாளர்கள். அப்போது அவருடைய கண்களில் நீர்

தளும்பிக் கொண்டிருந்தது.

'தமிழ்ப் பெண்களின் மீது அவதூறு கற்பிக்க ஒருபோதும் நான் நினைத்ததில்லை. ஒரு கருத்துக்கணிப்பின் அடிப்படையில் அதுகுறித்து நான் வேதனையுடன் தெரிவித்த கருத்துகள் பத்திரிகையில் தவறாக வந்துவிட்டன. யாரையும் புண்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் நான் அப்படிப் பேசவில்லை. நான் பேசியது தமிழ்ப் பெண்களின் மனத்தைப் புண்படுத்தியிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன். பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.'

தங்கர்பச்சான் மன்னிப்புக் கேட்ட சில மாதங்கள் கழித்து நடந்த சம்பவம் தான் மேலே இருப்பது. தமிழ்நாட்டுப் பெண்களைக் கேவலப்படுத்திவிட்டார் என்று கூறி, தென்னிந்திய நடிகர் சங்க அலுவலகம் முன்பு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. 'குஷ்புவை தமிழ் நாட்டில் இருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்' என்று ஏராளமான பெண்கள் கோஷமிட்டனர்.

குஷ்பு உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்றும், அவருடைய கருத்துகளுக்குத் தார்மிகப் பொறுப்பேற்று விஜயகாந்த் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்! கையில் துடைப்பத்துடன் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, எல்லோருக்குமே திருச்சி மாவட்டம் ஆத்தூரில் இருக்கும் குஷ்பு கோயில் நினைவுக்கு வந்திருக்கும்.

சரி... தங்கர்பச்சான் விவகாரத்தில் ஆவேசமாக மன்னிப்பை மறுதலித்த குஷ்பு, திடீரென கண்ணீரும் கம்பலையுமாக மன்னிப்புக் கேட்டதற்கு என்ன காரணம்? அப்படி என்னதான் குஷ்பு சொன்னார்?

(தொடர்வோம்)



புள்ளிகள்... கோலங்கள்...

பருதுலம் சுகுமாரன்

பொன்ராஜ் மனத்தில் லேசர் வீச்சாய்ப் பதற்றம் பரவியது.

வீட்டுக்கு ஃபோன் போட்டார்.

''பார்வதி...''

''என்னங்க... மணி பத்தாகப் போகுது. சாப்பிட வராம ஆபீஸ்ல என்ன பண்ணிக்கிட்டிருக்கிங்க.''

''பொண்ணு என்ன பண்ணிக்கிட்டிருக்காள்?''

''சுலேகா அவ ரூம்ல படிச்சுக்கிட்டிருக்கா. பேசணுமா...?

''வேணாம்.''

''நீங்க எப்ப வர்றீங்க...?''

''லேட்டாகும். எல்லோரும் சாப்டுட்டுப் படுங்க.''

ஃபோனை ஆஃப் பண்ணி, வேறு சில எண்களை ஒற்றினார். லைன் கிடைத்ததும்,

''ஏ.சி. சார், பொன்ராஜ் பேசறேன். வேற ஒண்ணுமில்லை. நாளைக்கு என் மகளைப் பெண் பார்க்க வர்றாங்க. மாப்பிள்ளை யு.எஸ்.ல வேலை பார்க்கறவர். உறவுக்காரக் குடும்பம்தான். நோ... நோ... அவங்க பேர்ல எந்தச் சந்தேகமுமில்லை. நல்லவங்கதான். அஞ்சு நிமிஷம் முன்பு ஒரு கால் வந்தது. என் மகள் சுலேகாவைப் பத்திப் பேசணும். அண்ணா சதுக்கம் பக்கம் நேப்பியார் பாலம் கிட்ட அடுத்த ஒரு மணி நேரத்துல வரச் சொல்லி... ஆமாம், என்னைத்தான். குரல் கரகரப்பா இருந்தது. மிரட்டல்னு சொல்ல முடியாது. காலர் ஐ.டி.ல. அவன் நம்பர் பதிவாகியிருக்கு. சரி சார். அப்படியே செய்யறேன்.''

- என்று பேசி முடித்து 'செல்'லை பாக்கெட்டில் போட்டார்.

யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது.

''கந்தசாமி..'' ப்யூனை அழைத்தார்.

பதில் வரவில்லை.

'எங்கே போனான்...?'

தன் அறைக்குள் திரும்பி, ஜன்னல் ஸ்க்ரீனை விலக்கி வெளியில் பார்வை யோட்டினார். போர்டிகோவில் கார் காத்துக்கொண்டிருந்தது. டிரைவர், தொப்பியைக் கழற்றி காரின் தலையில் வைத்துவிட்டு முதுகு காட்டிப் புகைத்துக் கொண்டிருந்தான்.

காம்பவுண்ட் அருகில் செக்யூரிட்டி கேபினில், நேபாளத்துக் காவலாளி துப்பாக்கியுடன் நின்றான்.

கேட் மூடியிருந்தது.

வளாகத்தில் வேறு வாகனங்கள் இல்லை. மணி பார்த்தார்.

10:30:41... காட்டியது டிஜிட்டல் கடிகாரம்.

புறப்பட வேண்டிய நேரம். திரும்பினார். மீண்டும், அந்தக் காலடி சத்தம்.

(தொடரும்)





Enjoy Ponmani & PRADOSAM AT KAILASH MANASAROVER

திருக்கயிலாயம் • மானஸரோவர்

மே முதல் செப்டம்பர் மாதம் ஒரு குழு புரப்படுகிறது

காட்மாண்டிலிருந்து டயோட்டா கார் மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து காட்மாண்டு வருவதற்கு 16 நாட்கள் ஆகும் ரூ. 50,000/- / ரூ.55,004/-

ஏப்ரல் மே	12 நாட்கள் சிம்லா, குல்லூ, மனாலி, டெல்லி, ஆக்ரா, சண்டிகர், மதுரா
ஏப்ரல் மே	12 நாட்கள் காட்மாண்டு முக்திநாத் காசி அலகாபாத், போக்ரா, லும்பினி
ஏப்ரல் மே	கேங்டாக், டார்ஜிலிங், கொல்கத்தா, பூரி, புவனேஷ்வர் 12 நாட்கள்
மே, ஜுன்	12 நாட்கள் - கேதர்நாத், பத்ரிநாத், ஹரித்வார், ரிஷிகேஷ்
ஜுன்,ஜீலை	15 நாட்கள் அமர்நாத் யாத்திரை (ஹெலிகாப்டர் வசதி உண்டு)
பிரதி மாதம்	அந்தமான் டூர் - 8 நாட்கள்/5 நாட்கள் விமானம் / கப்பல்
பிரதி மாதம்	10 நாட்கள் பூரி, கொனார்க், கயா,காசி, அலகாபாத், புவனேஷ்வர்

மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, துபாய், சீனா, மொரிசியஸ் சுற்றுலாக்களுக்கு அணுகவும்

குழுவாக வருபவர்களுக்கு கட்டண சலுகை உண்டு. தனியாகவும் தாங்கள் விரும்பும் இடங்களுக்கு சுற்றுலா மற்றும் திருப்பயணம் நடத்தி தருகின்றோம்


பெங்களூர் - 080 22879745, ஹைதராபாத் 09989242299

Special Care for Senior Citizens

மனோகர் டிராவல்ஸ்
ஈரோடு 638 001
Ph :2269940 Cell :94433-80159
E.mail : Monohartravvels@packagetours4u.com



கைலாஷ் டிராவல்ஸ்
சென்னை 600 003
Ph :42053923 Cell:94433-80154
E.mail:kailashtravels@packagetours4u.com



உங்கள் குடும்பமே மகிழ்ச்சியாக வாழ வேண்டுமா

முனீஸ்வரர் அருள் வாக்கு சித்தரின் வாரிசு

Lion நல்லப்பன் ராஜநந்திவர்ம சிவா B.E., M.I.S.T.E, MBA, LLB

[illegible]

நெ. 32, மகாலட்சுமி தெரு, தி. நகர், சென்னை - 17.போன் : 044 - 24761913,செல் : 99620 76529

ஜாதகமே தேவையில்லை

[illegible]

ஒயிட் & ஒயிட் VVMB

Lion நல்லப்பன் நீல்கண்ட சிவா

அகில இந்திய அருள் வாக்கு சங்கத் தலைவர்



நெ. 32, மகாலட்சுமி தெரு, தி. நகர், சென்னை - 17.
போன் : 044-24761913,செல் : 98412 94932, 94444 16854

[illegible]

பிரதி மாதம் விஷயம்

[illegible]





வேப்ப மரங்கள் எத்தனை இருக்கு. அது எங்களுக்குள்ள எல்லாம் இருக்கு. இன்னாரோட மரம், இதெல்லாம் எங்களுக்கு அத்துப்படி. வேப்பமுத்தைப் பொறுக்கிக் கடையில் போட்டா நாம நெனைச்சதை வாங்கித் திங்கலாம். துரைப்பயல், முத்துச் சேர்த்து வச்சே புது டவுசரும் சட்டையும் வாங்கிட்டான். மாரியப்பன் வாங்குனது முப்பத்தஞ்சு ரூபாயுள்ள எலக்ட்ரானிக் வாட்ச். அதைப் பாத்துப் பாத்து 'டைமு அஞ்சு அம்பத்தி ஒம்போது, நாலு நாப்பத்தி நாலு, ரெண்டு இருவத்தி ரெண்டு' அப்படிம்பான்.

முத்துப் பொறுக்குறப்ப உதுந்து கிடக்கும் வேப்பம் பழத்தையும் சேத்துத்தான் பொறுக்குவோம். ஒவ்வொருத்தன் மரத்துமேல ஏறி வேப்பங்காய்களையும் புடுங்கிடுவாங்க. அதைக் கொண்டுட்டுப் போய் காய்களுக்குத் தக்கன ஒரு குப்பையைத் தோண்டி, அடுப்புச் சாம்பல விரவிப் பழுக்க வச்சிடுவாங்க. செத்த நாள் கழிச்சித் தோண்டி எடுத்தா காயெல்லாம் பழுத்திருக்கும். அந்த மஞ்சளுக்குத் தங்கமும் தோத்துப் போவும். பெறவு பழத்தைப் பிதுக்கி முத்துக்களைக் காயப்போட்டு எடுத்துக்கிடுவாங்க. இப்படித்தான் சண்முகய்யா காயைப் புதைச்சிட்டு மறந்துட்டான். மழை பெஞ்சு அத்தனையும் ஒண்ணு போல பசேல்னு குப்பைல முளைச்சிருச்சு. அதைப் பாக்கவே டக்கரா இருந்துச்சு.

பால் பவுடர்

எங்க ஊருக்குப் பக்கத்து ஊர்ல வேதக் கோயிலும் ஆர்.சி.நடுநிலைப் பள்ளியும் இருக்கு. அங்க 'அம்மாங்க' (சிஸ்டர்) இருக்காங்க. வேப்பமுத்துப் பொறுக்கித் தந்தா பால்பவுடர் தருவாங்க. அலைஞ்சி, தொலைஞ்சி, பொறுக்கி ஓர் உழக்கு குடுத்தா, மூணு கரண்டி பால்பவுடர தான்ல பொட்டணம் போட்டுத் தருவாங்க.

பால் பவுடர் இனிப்புன்னா இனிப்பு அப்பிடியொரு இனிப்பு. பொறந்ததி லிருந்து இன்னிக்கு வரைக்கும் இப்பேர்ப் பட்ட இனிப்பைத் தின்னதில்லை. பால் பவுடர் வந்ததுல இருந்து சின்னப் பயக கோலிக்காய் விளையாட்டையே நிப்பாட் டிட்டாங்க. எல்லாரும் பேய் பிடிச்சது போல முத்துப் பொறுக்குதாங்க. ஊர்ல கொலையே விழுந்தாலும் கோலிக்கா விளையாட்டு நிக்காது. அதே நிக்கி துன்னா பால்பவுடரோட முக்கியத்துவத் தைத் தெரிஞ்சுக்கிடலாம். பிறந்த உடனேயே சக்கரையத் தண்ணில கரைச்சி மாமா முறையுள்ளவங்க 'சேனை' வைப்பாங் களாம். அது எப்படியோ, இந்த மானிக்கு இனிப்பு எதுலயும் கிடையாது.

அன்னிக்கு ஒரு நா விடியக் கருக்கல் லயே மாரியப்பன் கொட்டாம்பெட்டிய எடுத்திட்டுப் புஞ்சைக்குப் போனான். அங்க ஒரு சரள் மேல் நல்ல வசமான மரம். ரெண்டு மைனாக்கள் வேற நின்னன. ஒரு கல்லெடுத்து மரத்துல எறிஞ்சி விரட்டினான். முத்துன்னா முத்து. ரொம்பக் கெடக்கு. எவனும் பாக்காத, பொறுக்காத மரம். கறுகறுப்பா பொறுக்கி பெட்டி நிமுந் திருச்சு. பெட்டி நிமுர நிமுர பால் பவுடருக்கு வாயூறியது.

ஆறு தெவங்கிட்டான். பையப் பைய நடந்து வீட்டுக்கு வந்தான். கால், கையைக் கழுவிட்டு வேப்பமுத்தை மஞ்சப் பையில் கொட்டி எடுத்துக் கிட்டான். வேதக் கோயில், பள்ளிக்கூடம் இருக்க ஊரு வீட்லருந்து ரெண்டு மைலு. மாரியப்பன் குறுக்குப் பாதையில் ஓட்டமா ஓடினான்.

ஒரு வயலுக்காரன் ''எங்கல போற? யார் மவம்ல? இன்னிக்கு ஞாயித்துக் கிழமை? பள்ளியோடம் கிடையா தேல''ன்னு கேட்டான். அவர்கிட்ட ''பால் பவுடர் வாங்கப் போறேன்''னு கத்திட்டுப் போனான்.

வேதக்கோயில் பங்களாவுக்கு மஞ்ச கலர் பெயின்ட் அடிச்சிருக்கும். சன்னல் வழியாகத்தான் பால்பவுடர் குடுப்பாங்க. மாரியப்பன் சன்னல்கிட்டப் போயி நின்னான். 'அம்மாங்க' 'அம்மாங்க'ன்னு சத்தம் குடுத்தான். யாரும் வரல. விட்டு விட்டு 'அம்மாங்க அம்மாங்க'ன்னு சொல்லி வாய் வலிச்சிருச்சு. ரொம்ப நேரம் போயி ஒரு சின்ன அம்மாங்க வந்தாங்க. அவுககிட்ட பையோட முத்தைக் குடுத் தான். சிஸ்டர் அதைச் சாக்குல கொட் டிட்டு, பிளாஸ்டிக் மஞ்ச கலரு கரண்டிக்கு அஞ்சு கரண்டி பவுடர் தந்தாங்க.

மாரியப்பனுக்குப் பொசுக்குனு போயி ருச்சு. ஒரு கரண்டிங்கிறது பால் ஊட்டும் சங்கு அளவுதான் இருக்கும். பொட் டணத்தைப் பிரிக்கும்போது கண்ணீர் பிதுங்கியது. பவுடரை வாயில் போட் டான். ரெண்டு வாய்க்கு வந்தது. தாளில் ஒட்டியிருந்ததை நக்கினான். வீட்டைப் பாத்து நடந்தான்.

வே. இராமசாமி

மறுநாள் திங்கள்கிழமை. எல்லாரும் பள்ளிக்கூடம் போனாக. போகும்போதே அவங்க அவங்க சனி, ஞாயிறுல பொறுக்குன வேப்பமுத்தைக் கொண்டாந்தாங்க. பைக்கெட்டைத் தோள்ல போட்டுருந்தாங்க.

எல்லாரும் பங்களாச் சன்னலில் வரிசைக்கா நின்னு முத்தைத் தந்து பவுடர் வாங்குனாங்க. ஆளுக்கு ஒவ்வொரு கரண்டி வந்தது. வாயில் போட்டவுடன் கரைந்தது. எல்லாரோட முகமும் இருண்டித்தது போலானது. அந்நேரத்தில் சந்தோஸ் பயல் ஓடிப்போய் சன்னல் பக்கம் சின்ன அம்மாங்ககிட்ட சிரிச்சு சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தான். அவன் எட்டாப்பு, மாரியப்பனுக்கு என்னமோ தவறுதலாப் பட்டது.

டப்பாவும் கரண்டியும் கிடைக்குன்னா அவன் ஒரு மூட்டை நிமிர வேப்ப முத்துக் குடுத்தாலும் கிடைக்காது. ''இதுல ஏதோ பெறட்டு இருக்கு. அந்த உருட்டுப் பெறட்டக் கண்டுபிடிக்கனும். அந்தப் பயல மொங்காங்குடுப்பு குடுக்கனும்''னு செனா முருகன்கிட்ட கத்திக் கத்திப் பேசினான்.

கிறிஸ்துமஸ் வந்துச்சு. நாங்கள்லாம் சாமி கும்பிடப் போனோம். அன்னிக்கு ஒரு கரண்டி பால்பவுடர் சும்மானாத்துக்கும் கிடைக்கும். சந்தோஸ் புதுச்சட்டையும் டவுசரும் போட்டிருந்தான். நாங்க மைதானத்தில் கபடி கட்டம் பக்கம் நின்னுட்டிருந்தோம். சந்தோஸ் ஒரு காகிதத்தை மடிச்சுப் பையில் வெச்சிட்டு, கடைத்தெருப் பக்கம் போனான். முருகனை அவம் பின்னாடியே அனுப்பி, என்ன செய்தாம்னு பாக்கச் சொன்னோம்.

சந்தோஸ் கடைத் தெருவில் பேப்பர் படிச்சிட்டிருந்த பெலிக்ஸ் அண்ணைங்கிட்டப் போய் நின்னான். காகிதத்தை நைசா யாருக்கும் தெரியாமல் அவர்ட்ட குடுத்திட்டு, அவரு குடுத்த காகிதத்தை வாங்கியாந்தான். பங்களாவுக்குள் போனான். வெளில வரும்போது பால் பவுடர் டப்பாவைக் கையில் வச்சிருந்தான்.

மாரியப்பனும் எட்டாப்புத்தான். பால் பவுடர் டப்பாவைச் சடக்குனு புடுங்கிட்டு ஓடினான். சந்தோஸ் அவனை விரட்டிக்கிட்டு ஓடினான். ஓடும்போது ''என் டப்பாவைக் குடுல, டப்பாவைக் குடுல''னு அழுதுக்கிட்டே வந்தான். நாங்க பின்னாலேயே ஓடினோம். மாரியப்பன் கரைமேல போய்த்தான் நின்னான். சந்தோஸும் அங்க வந்துட்டான். நாங்களும் போய்ட்டோம். செனா முருகன் ஓட முடியாம தொலைவில் வரப்புமேல வேகமா நடந்து வந்தான்.

கரைமேல்...

''டப்பாவைக் குடுத்திரு. இல்லைன்னா சின்ன அம்மாங்ககிட்ட சொல்லிருவேன்'' அப்படிங்கான் சந்தோஸ். ''அவனுக்கென்ன கொம்பால முளைச்சிருக்குன்னு'' செவிட்டில் ரெண்டு எக்கி எக்கி விட்டான் மாரியப்பன்.

நாங்க ஆளாளுக்கு சந்தோஸை அடிக் குளிப்பாட்டினோம்.

சந்தோஸ் அழுதிட்டே வயல் வரப்பில் அவங்க ஊரைப் பாத்துப் போனான். அப்ப வேதக்கோயில் ரேடியோல இருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. 'இயேசுகூட வருவார். எல்லாவித அற்புதமும் செய்வார். தந்தானே தந்தனத் தந்தானே. தந்தானே தந்தனத் தந்தானே...'

(மண்வாசம் வீசும்)



"Keyhole சர்ஜரி பண்ணிக்கப் போறதா சொன்னியே, இன்னும் ஏன் டிலே பண்றார் டாக்டர்....?"

''சரியான 'கீ' கிடைக்கலையாம்!''

- கோகிலா அம்பி



சூத்திரம்

இரகசியங்களும்
வினாக்களும்
தாழ்ப்பாளில் தொங்க
பூட்டிய கதவின்
அகமும் புறமுமாய் நாம்

வெளியேற வழியின்றி
அறைக்குள் வெக்கை
தழுவும் தென்றலுக்கு
உள்நுழையும் தாகம்
எது நிகழவேண்டினும்
கதவு திறந்தாக வேண்டும்

சாவிகள் சம்மதிக்க
தடுக்காது தாழ்ப்பாள்

ஆழ்மனப் புழுக்கம் விரட்டி
உன்னை நானும்
என்னை நீயும்
நுரையீரல் ஆழம் வரை
சுவாசித்தல் சுகம்

தாழ்ப்பாள்களுக்குள்
ஒளிந்துகிடக்கிறது
வாழ்வின் அசல் சூத்திரம்

மா. மீனாசுந்தர்

"உன் வாயில உள்ள 'புண்'ணு மட்டும் ஆறவே மாட்டேங்குதே... ஏன்?"

"என் மாமியார்தான் அடிக்கடி வாயைக் கிண்டுறாங்களே... பின்னை எப்படி ஆறும்?"

- வைகை ஆறுமுகம்



இது



"அவங்க ஆட்சிதான் கவிழ்ந் துடுச்சே! அப்புறம் ஏன் எதிர்க் கட்சியினர் ஆர்ப்பாட்டம் பண் றாங்க?"

"ஆட்சி கவிழ்வதை டி.வி.யில நேரடி ஒளிபரப்புப் பண்ணணுமாம்!"

- வே.முருகேசன்

"எல்லோரும் இந்தப் படம் ரொம்ப நல்லா இருக்குதுன்னு சொல்றாங்க. நீங்க மட்டும் நல்லா இல்லைன்னு சொல்றீங்களே... ஏன்?"

"நான் என் பொண்டாட்டியோடு பாத்தேனே!"

- என்.உஷாதேவி





"நீங்க கேட்கற வரதட்சணை யோடு என் பெண்ணைத் தர முடியாது."

"சரி, பெண் வேண்டாம்; வரதட்சணையை மட்டுமாவது கொடுங்க!"

- லீலாஜி



"தலைவர் சுமாரா எவ்வளவு நேரம் பேசுவாரு?"

"எவ்வளவு நேரம் பேசினாலும் சுமாராத்தான் பேசுவாரு...!"

- தஞ்சை தாமு

ரீமிக்ஸ் அத்தே!

"என் புள்ளைக்கு நான் போட்ட காஃபியை, நீ மாத்தி கொடுக்கறியே எதுக்கு?"

"இது 'ரீமிக்ஸ்' அத்தே."

- வெ. சீதாராமன்



"இந்த ஊரே காணாத வகையில் என் மகன் கல்யாணத்தை நடத்தணும்!"

"அப்படின்னா உங்க மகன் கல்யாணத்தைப் பக்கத்து ஊரில் வெச்சுக்கலாம் தலைவரே!"

- லீலாஜி



"உப்புமா, ரவாகேசரி ரெண்டும் நான் ரொம்ப நல்லா பண்ணுவேன்."

"அப்படியா...! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எனக்குக் கொடுத்தீங்களே... அது உப்புமாவா, கேசரியா...?"

- குட்டி பிரசன்னா



14. காளியின் சபதம்



பேச்சுக் குரல் நெருங்கி வருவதாகத் தோன்றவே, பொன்னன் விக்கிரமனை மண்டபத்துக்குள் ஒதுக்குப்புறமாக இருக்கச் சொல்லிவிட்டு எட்டிப் பார்த்தான். மண்டபத்தை நோக்கி இரண்டு பேர் வருவது தெரிந்தது. ஆனால், இருட்டில் முகம் ஒன்றும் தெரியவில்லை. அப்போது பளீரென்று ஒரு மின்னல் மின்னிற்று. மின்னலில் அந்த இருவருடைய முகத்தையும் பார்த்ததும், பொன்னனுடைய உடம்பெல்லாம் ஒரு தடவை பதறிற்று. வந்தவர்களில் ஒருவன் மாரப்ப பூபதி; இன்னொருவன்... ஆம், கபால ருத்ர பைரவன்தான்!

அவர்களை அவ்விதம் திடீரென்று பார்த்த பேரதிர்ச்சியை ஒருவாறு பொன்னன் சமாளித்துக்கொண்டு விக்கிரமன் இருந்த இடத்தின் அருகில் சென்று, அவரைத் தொட்டு மெல்லிய குரலில், ''மகா ராஜா...!'' என்றான்.

விக்கிரமன், ''இதென்ன, பொன்னா? ஏன் இப்படி நடுங்குகிறாய்?'' என்பதற்குள், பொன்னன் விக்கிரமனுடைய வாயைப் பொத்தி, ''இரைய வேண்டாம்! பெரிய அபாயம் வந்திருக்கிறது. எதற்கும் சித்தமாயிருங்கள்!'' என்று காதோடு சொன்னான்.

விக்கிரமன் இடுப்பைத் தடவிப் பார்த்து, ''ஐயோ! வாள் ஆற்றோடு போய் விட்டதே!'' என்று முணுமுணுத்தான்.

வந்தவர்கள் இருவரும், அந்த மண்டபத்தின் வாசல் திண்ணையில் வந்து மழைக்கு ஒதுங்கி நின்றார்கள். அவர்களுடைய பேச்சு உள்ளே இருந்தவர்களின் காதில் சில சமயம் தெளிவாகவும், சில சமயம் அரைகுறையாகவும் விழுந்தது.

அவர்களில் ஒருவனுடைய குரலைச் சட்டென்று விக்கிரமனும் தெரிந்து கொண்டான். திடுக்கிட்டு அவன் எழுந்திருக்கப் போனபோது, பொன்னன் அவனைப் பிடித்து உட்கார வைக்க வேண்டியிருந்தது.

''மகா பிரபோ! காளிமாதா எனக்கு இன்னும் என்ன ஆக்ஞாபித்திருக்கிறாள்? கிருபை கூர்ந்து சொல்ல வேண்டும்'' என்றது மாரப்பனின் குரல்.

இதற்குப் பதில் கூறிய குரலானது கேட்கும்போதே மயிர்க்கூச்சல் உண்டாக்கக் கூடியதாயிருந்தது. ஒருவேளை பேய் பிசாசுகள் பேசுமானால், இப்படித்தான் அவற்றின் குரல் இருக்கும் என்று எண்ணும்படியிருந்தது.

''மாதா உனக்கு இன்னும் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் கொடுக்கக் காத்திருக்கிறாள். உன்னிடம் இன்னும் பெரிய பெரிய காரியங்களையும் எதிர்பார்க்கிறாள். அன்னைக்கு ரொம்பவும் தாகமாயிருக்கிறதாம். ராஜ வம்சத்தின் இரத்தம் வேண்டுமென்கிறாள்...!''

''ஆயிரம் வருஷத்துப் பரம்பரை ராஜ வம்சத்தில் பிறந்த அரசிளங்குமரனை காளிக்கு அர்ப்பணம் செய்ய முயன்றேன். எப்படியோ காரியம் கெட்டுப்போய் விட்டதே...''

''உன்னாலேதான் கெட்டது. அந்த

அமரர் கல்கி

ராஜகுமாரனுக்காக நானே வந்திருந்தேன். நீ குறுக்கிட்டுக் கெடுத்துவிட்டாய்.''

''மன்னிக்க வேண்டும் பிரபோ... ஆனால், ராஜகுமாரன் வருகிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''மறுபடியும் அதே கேள்வியைக் கேட்கிறாயே? காளிமாதா சொல்லித்தான் தெரிந்தது. அருள்மொழி ராணியின் வாய் மொழியாக மாதா எனக்குத் தெரிவித்தாள். 'அதோ கப்பலில் வந்துகொண்டிருக்கிறான்! கரையை நெருங்கிக் கொண்டிருக்கிறான்!' என்று ராணி சொன்னாள். நான் வந்தேன்! அதற்குள்ளாக நீ நடுவில்

''இன்னும் மிகப்பெரிய பதவிகள் உனக்கு நிச்சயம் கிடைக்கும்.''

''பெரிய பதவிகள் என்றால்..''

''சோழ நாட்டின் சிம்மாசனம் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. மாதா கையில் கிரீடத்தை வைத்துக்கொண்டு உன் தலையில் சூட்டக் காத்திருக்கிறாள்.''

''அவ்வளவுதானா பிரபோ!''

''அதைவிடப் பெரிய பதவியும் அன்னை வைத்துக்கொண்டிருக்கிறாள்.''

''அது என்னவோ?''

''என்னவா? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனம்தான்!''

பார்த்திபன் கனவு

குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்துவிட்டாய்.''

''பிரபோ! க்ஷமிக்க வேண்டும்...''

''போனது போகட்டும். மாதா உன்னை க்ஷமித்துவிட்டாள். ஆனால், 'தாகம்' 'தாகம்' என்று கதறிக்கொண்டிருக்கிறாள்! ராஜகுல ரத்தம் வேண்டும் என்கிறாள்! இந்த அமாவாசை போய் விட்டது. துலா மாதப் பிறப்பிலாவது தாயின் தாகத்தைத் தணிக்க வேண்டும். அவனை நீ எப்படியாவது தேடிப் பிடித்துக் கொண்டு வர வேண்டும்.''

''கொண்டு வந்தால்...''

''கொண்டு வந்தால் உன் மனோரதம் நிறைவேறும். பூபதி! காளி மாதாவைச் சரணமாக அடைந்தவுடனே உனக்குச் சேனாபதிப் பதவி கிடைக்கவில்லையா? இன்னும்...''

''இன்னும் என்ன சுவாமி?''

''ஆ!'' என்றான் மாரப்ப பூபதி. சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது.

''ஆனால், அப்படிப்பட்ட மகத்தான பதவி இலேசில் கிடைத்து விடாது. அதற்குத் தகுந்த காணிக்கை காளி மாதாவுக்கு நீ சமர்ப்பிக்க வேண்டும்.''

''அடியேனிடம் மாதா என்ன எதிர்பார்க்கிறாள்?''

''முதலில் பார்த்திபன் மகனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வர வேண்டும்.''

''செய்கிறேன்; அப்புறம்?''

''வரும் துலா மாதப் பிறப்பன்று...''

''சொல்லுங்கள், பிரபோ!''

''காளி மாதா சந்நிதிக்கு நீ வர வேண்டும்...''

''வந்து...''

''உன்னுடைய தலையை உன்னுடைய கையினாலேயே ... வெட்டி

மாதாவுக்கு அளிக்க வேண்டும்!''

''ஐயோ!'' என்று மாரப்பன் அலறினான்.

''அளித்தால் அடுத்த ஜென்மத்தில் காஞ்சி சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகலாம், இல்லாவிட்டால்...''

''இல்லாவிட்டால், என்ன பிரபோ!''

''ஆத்ம பலிக்கு ஈடான இன்னொரு மகாபலி அளிக்க வேண்டும். அளித்தால் இந்த ஜென்மத்திலேயே சக்கரவர்த்தி பதவி கிட்டும்.''

''அது என்ன பலி, சுவாமி!''

''அந்த விபூதி ருத்திராட்சதாரியைப் பலிக்குக் கொண்டு வர வேண்டும்...''

''பிரபோ! ராஜ வம்சத்து இரத்தத்தை விரும்பும் காளி மாதா, கேவலம் ஒரு விபூதி ருத்திராட்சதாரியைப் பலிகொள்ள விரும்புவானேன்?'' என்று மாரப்பன் கேட்டான்.

''பூபதி! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்; அந்தப் போலி ருத்திராட்சதாரி - உண்மையில் யார் தெரியுமா உனக்கு?''

''யார் பிரபோ!'' என்று பூபதி வியப்புடன் கேட்டான்.

''பூபதி! அது மகா மர்மம் - யாரும் அறிய முடியாத இரகசியம் - இதோ அடிக்கும் இந்தக் காற்றின் காதிலேகூட விழக்கூடாது. அருகில் வா! காதோடு சொல்கிறேன்.''

சொல்ல முடியாத வியப்புடனும் பயத்துடனும் மேற்படி சம்பாஷணையின் பெரும் பகுதியைக் கேட்டுக்கொண்டு வந்த விக்கிரமனும் பொன்னனும் இப்போது செவிகளை மிகக் கூர்மையாக வைத்துக்கொண்டு கேட்டார்கள். ஆனால், ஒன்றும் காதில் விழவில்லை.

திடீரென மாரப்பன் இடி இடி என்று





சிரிக்கும் சப்தம் கேட்டது.

''பூபதி! ஏன் சிரிக்கிறாய்? மாதாவின் வார்த்தையில் உனக்கு அவநம்பிக்கையா?'' என்று கபால பைரவர் கோபக் குரலில் கேட்டார்.

''இல்லை பிரபோ! இல்லை!'' என்றான் மாரப்பன்.

''பின்னர், ஏன் சிரித்தாய்?''

''அந்த சிவனடியாரைக் கைப்பற்றிக் கொண்டு வரும்படி இன்னொரு தேவியிடமிருந்தும் எனக்குக் கட்டளை பிறந்திருக்கிறது. அந்தத் தேவி யார் தெரியுமா?''

''யார்?''

''தர்ம ராஜாதி ராஜ மாமல்ல நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் திருக்குமாரி குந்தவி தேவிதான்!''

''ரொம்ப நல்லது. காளி மாதா தன் விருப்பத்தைப் பலவிதத்திலும் நிறைவேற்றிக் கொள்கிறாள்!'' என்றார் மகா கபால பைரவர்.

இந்தச் சமயத்தில் சற்று தூரத்தில் குதிரைகளின் குளம்படிச் சப்தமும், இரைச்சலும் ஆரவாரமும் கேட்டன. பொன்னன் சப்தமிடாமல் நடந்து வாசற்படியருகில் வந்து எட்டிப் பார்த்தான். ஐந்தாறு குதிரை வீரர்கள் தீவர்த்தி வெளிச்சத்துடன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. பொன்னன் மனத்துக்குள், ''இன்று



மகாராஜாவும் நாமும் நன்றாய் அகப்பட்டுக் கொண்டோம்!'' என்று எண்ணினான். அவனுடைய மார்பும் 'பட்பட்' என்று அடித்துக்கொண்டது. சட்டென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டான்.

அதே சமயத்தில் மாரப்ப பூபதி, ''மகா பிரபோ! அதோ என்னுடைய ஆட்கள் என்னைத் தேடிக்கொண்டு வருகிறார்கள்; நான் போகவேண்டும்'' என்றான்.

''நானும் இதோ மறைந்து விடுகிறேன். மாதாவின் கட்டளை ஞாபகம் இருக்கட்டும்.''

''மறுபடியும் எங்கே சந்திப்பது?''

''வழக்கமான இடத்தில்தான். சித்ரகுப்தன் உனக்காகக் காத்திருப்பான்.''

இதற்குள் இரைச்சலும் ஆரவாரமும் அருகில் நெருங்கிவிட்டன.

''நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்.''

''அப்படியே பிரபோ!''

இதற்குப் பிறகு சற்று நேரம் பேச்சுக் குரல் ஒன்றும் கேட்கவில்லை. திடீரென்று கொஞ்ச தூரத்தில், ''சோழ சேனாபதி மாரப்ப பூபதி வாழ்க! வாழ்க!'' என்ற கோஷம் கேட்டது. பொன்னனும் விக்கிரமனும் மண்டபத்துக்கு வெளியில் வந்து பார்த்தபோது, தீவர்த்திகளின் வெளிச்சத்தில் குதிரைகள் உறையூர்ச் சாலையில் விரைவாகப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

''மகாராஜா, எப்பேர்ப்பட்ட இக்கட்டிலிருந்து தப்பினோம்?'' என்று சொல்லி பொன்னன் பெருமூச்சு விட்டான்.

விக்கிரமன் ''பொன்னா! என்ன துரதிர்ஷ்டம்? நான் ஏறி வந்த குதிரை, அதன் மேலிருந்த இரத்தினப் பைகள் எல்லாம் ஆற்றோடு போய் விட்டதினால் கூட மோசம் இல்லை; என் உடைவாளும் போய்விட்டதே! என்ன செய்வேன்?'' என்றான்.

''மகாராஜா!''

''என்ன பொன்னா?''

''ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது.

மகாராணி ஸ்தல யாத்திரை கிளம்பும் போது என்னிடம் ஒரு பெட்டியை ஒப்பு வித்தார்கள். உங்களிடம் கொடுக்கும் படி...''

''என்ன பெட்டி அது? சீக்கிரம் சொல்லு பொன்னா!''

''அதில் உங்கள் குலத்தின் வீரவாள் இருக்கிறது. பிடியில் இரத்தினங்கள் இழைத்து...''

''நிஜமாகவா பொன்னா? ஆகா! முக்கியமாக அந்த வாளுக்காகத்தானே நான் இப்போது தாய்நாட்டுக்கு வந்தேன்! என் தந்தை போருக்குக் கிளம்பும்போது, அந்தப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த பட்டாக் கத்தியையும் திருக்குறள் சுவடியையும் எனக்குக் காட்டி, 'இவைதான் நான் உனக்கு அளிக்கும் குலதனம்!' என்றார். எங்கள் மூதாதை - பரத கண்டத்தையெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டு, கடல்கடந்த தேசங்களிலும் ஆட்சி செலுத்திய கரிகாலச் சோழர் கையாண்ட வாள் அது, பொன்னா! பத்திரமாய் வைத்திருக்கிறாயல்லவா?''

''வைத்திருக்கிறேன் சுவாமி!''

''எங்கே?''

''வசந்தத் தீவில் புதைத்து வைத்திருக்கிறேன்.''

''அங்கே ஏன் வைத்தாய்?''

''வேறு எங்கே வைப்பேன், மகாராஜா!''

''சரி பொன்னா! நாம் இப்போது வசந்த தீவுக்குப் போய் அந்த வாளை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். என் தந்தை என்ன சொன்னார், தெரியுமா? ஒன்பது வருஷத்துக்கு முன்னால் சொன்னது நேற்றுதான் சொன்னது போலிருக்கிறது. 'விக்கிரமா! இந்த கரிகாலச் சோழரின் வீரவாளை வேறொரு அரசனுக்குக் கப்பம் செலுத்தும் கையாலே தொடக்கூடாது. ஆகையினால்தான் என் வாழ்நாளில் நான் இதை எடுக்கவேயில்லை. நீ எப்போது ஒரு கையகலமுள்ள பூமிக்காவது சுதந்திர மன்னனாகிறாயோ, அப்பொழுது இந்த வாளை எடுத்துக்கொள்' என்றார். பொன்னா! நான் இப்போது செண்பகத் தீவின் சுதந்திர அரசன் அல்லவா? இனி அந்த வாளை நான் தரிக்கலாம்...''

''மகாராஜா! செண்பகத் தீவுக்கு மட்டுந்தானா? சோழ நாட்டுக்கும் நீங்கள்தான் அரசர்.''

''அதற்கு இன்னும் காலம் வரவில்லை, பொன்னா! ஆனால், சீக்கிரத்தில் வந்துவிடும். நாம் உடனே செய்ய வேண்டிய காரியங்கள் இரண்டு இருக்கின்றன. அந்த வீர வாளையும் திருக்குறளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பயங்கர நரபலி கூட்டத்திலிருந்து மகாராணியை விடுவித்து அழைத்துப் போக வேண்டும். இவற்றுள் முதலில் எதைச் செய்வது, அப்புறம் எதைச் செய்வது என்பதை இப்போது தீர்மானிக்க வேண்டும்.''

''நிஜமாகவா பொன்னா? ஆகா! முக்கியமாக அந்த வாளுக்காகத்தானே, நான் இப்போது தாய் நாட்டுக்கு வந்தேன்'' என்றான் விக்கிரமன்.

அவர்கள் மேலும் யோசனை செய்து, முதலில் உறையூருக்குப் போய் வசந்தத் தீவிலிருந்து வீரவாளை எடுத்துக் கொள்வதென்றும், பிறகு திரும்பி வந்து சிவனடியாரைத் தேடிப் பிடித்து, அவருடைய உதவியுடன் மகாராணியைக் கண்டு பிடிப்பதென்றும் தீர்மானித்தார்கள். இருவரும் மிகவும் களைத்திருந்தபடியால் அன்றிரவு இந்த மண்டபத்திலேயே உறங்கிவிட்டு, அதிகாலையில் எழுந்து

உறையூருக்குப் போவதென்றும் முடிவு செய்தார்கள். ஆனால், விக்கிரமனுக்கு ஏற்கெனவே கடுமையான சுரம் அடித்துக் கொண்டிருந்ததென்பதையாவது, பொழுது விடிவதற்குள் அவன் ஓர் அடி கூட எடுத்துவைக்க முடியாத நிலைமையை அடைவானென்பதையாவது அவர்கள் அறிந்திருக்கவில்லை.

15.திரும்பிய குதிரை

குந்தவி குழந்தைப் பருவத்திலிருந்தே தந்தையின் பெண்ணாக வளர்ந்து

> **மகேந்திரன், யுவராஜ பதவியை வகித்து, பல்லவ சாம்ராஜ்யத்தை பரிபாலிக்கும் பொறுப்பை வகிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார் நரசிம்ம வர்மர்.**

வந்தவள் என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். நரசிம்ம சக்கரவர்த்தியே அவளுக்குத் தாயும் தகப்பனும் ஆசாரியனும் உற்ற சிநேகிதனுமாயிருந்தவர். அவளுக்கு ஏதாவது மனக்கிலேசம் ஏற்பட்டால் அப்பாவிடம் சொல்லித்தான் ஆறுதல் பெறுவாள்; சந்தேகம் வந்தால் அவரைத்தான் கேட்பாள்; ஏதாவது குதூகலிக்கக்கூடிய விஷயம் நேர்ந்தாலும், அவரிடம் சொல்லிப் பகிர்ந்துகொண்டால்தான் அவளுக்குப் பூரண திருப்தி உண்டாகும். ஒரு கதையோ, கவிதையோ, நன்றாயிருந்தால் அவரிடம் சொல்லி அனுபவிக்க வேண்டும்; ஒரு சித்திரமோ, சிற்பமோ அழகாயிருந்தால் அவருடன் பார்த்து மகிழ வேண்டும். இப்படியெல்லாம் வெகுகாலம் வரையில் மகளும் தந்தையும் இரண்டு உடம்பும் ஒரே உள்ளமுமாக ஒத்திருந்தார்கள்.

ஆனால், அந்தக் காலம் போய் மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. அப்பாவுக்கும் பெண்ணுக்குமிடையே இப்போதெல்லாம் ஒரு மானசீகத் திரை போட்டது போலிருந்தது. தேசப் பிரஷ்ட தண்டனைக்குள்ளான சோழ ராஜகுமாரனுடைய ஞாபகம் குந்தவியின் மனத்தை விட்டு அகலவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தும் அவனை மறக்க முடியவில்லை. அந்த ராஜகுமாரனைப் பற்றிக் குந்தவி பேச விரும்பினாள். ஆனால், யாரிடம் பேசுவது? இத்தனை நாளும் தன்னுடைய அந்தரங்க எண்ணங்கள், ஆசைகள் எல்லாவற்றையும் தந்தையிடமே சொல்லி வந்தாள். ஆனால், சோழ ராஜகுமாரன் விஷயமாக அவரிடம் மனம் விட்டுப் பேச முடியவில்லை. எப்போதாவது ஏதாவது கேட்டாலும் என் எண்ணத்தைச் சிறிதும் அறிந்துகொள்ளாதது போலவே அவர் மறுமொழி சொல்லி வந்தார். தனக்குத் தாயார் இல்லையே என்ற குறையைக் குந்தவி இப்போதுதான் உணர ஆரம்பித்தாள்.

அந்தக் குறையை ஒருவாறு நீக்கிக் கொள்வதற்காக அவள் விக்கிரமனுடைய அன்னையுடன் சிநேகம் கொள்ள விரும்பினாள். ஆனால், அருள்மொழியை குந்தவி சந்தித்த அன்றே அவள் பரஞ்சோதியடிகளுடன் தீர்த்த யாத்திரை கிளம்பிவிட்டதைப் பார்த்தோம். யாத்திரையின்போது ஒரு சமயம் அவர்கள் மாமல்லபுரத்துக்கும் வந்திருந்தார்கள். சில தினங்கள் அந்தக் கலாக்ஷேத்திரத்தில் தங்கினார்கள். குந்தவியும் அப்போது மாமல்லபுரத்தில் இருந்தாள். அடிக்கடி அருள்மொழி ராணியைப் பார்த்தாள். ராணி அவளிடம் மிகவும் பிரியமாகவே இருந்தாள். ஆனாலும் அவர்களுடைய உள்ளங்கள் கலக்கவில்லை. எப்படிக் கலக்க முடியும்? தன்னுடைய ஏக புதல்வனைக் குந்தவியின் தந்தை கண்காணாத தீவுக்கு

அனுப்பிவிட்டதைப் பற்றி அருள்மொழியின் மனம் கொதித்துக்கொண்டிருந்தது. குந்தவிக்கோ தன் தந்தை மேல் அணுவளவேனும் குற்றம் இருப்பதாகத் தோன்றவில்லை. தந்தையினிடத்தில் அவளுக்கு இருந்த ஒப்பில்லாத பிரியத்தோடு அவரைப் பற்றி அவளுக்கு ரொம்பப் பெருமையும் உண்டு. இதிகாசங்களில் வரும் சூரிய, சந்திர வம்சத்துச் சக்கரவர்த்திகளைப் போல பெருமை வாய்ந்தவர் தன் தந்தை; வடக்கே நர்மதை நதி வரையில் சென்று திக் விஜயம் செய்தவர்; ராட்சஸப் புலிகேசியை வென்று வாதாபியை அழித்தவர். அப்படிப்பட்டவரின் கீழ் சிற்றரசனாயிருப்பதே அந்த சோழ ராஜகுமாரனுக்குப் பெருமையல்லவா? இருநூறு வருஷமாக சோழர்கள் பல்லவ சக்கரவர்த்திகளுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வரவில்லையா? இப்போது மட்டும் என்ன வந்தது?

இவ்விதம் அந்த இரண்டு பேருடைய மனோபாவங்களிலும் வித்தியாசம் இருந்தபடியால் அவர்கள் மனங்கலந்து பேச முடியவில்லை. ஒருவரிடம் ஒருவரின் அன்பு வளர்ந்தது. ஆனால், ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒரு முக்கியமான பகுதி பூட்டப்பட்டுக் கிடந்தது.

ஒரு நாள் அருள்மொழி ராணி ஓரளவு தன் இருதயத்தின் கதவைத் திறந்தாள். குந்தவியின் தந்தைக்குத் தன்னை மணம் செய்து கொடுப்பதாகப் பேச்சு நடந்ததையும், தான் அதைத் தடுத்து பார்த்திப மகாராஜாவைக் கல்யாணம் செய்து கொண்டதையும் கூறினாள். விக்கிரமனுடைய பிள்ளைப் பிராயத்தில் அவனுக்குக் குந்தவியை மணம் முடித்து வைக்கத்தான் ஆசைப்பட்டதையும் தெரிவித்தாள். அப்போது குந்தவியின் உடம்பெல்லாம் புளகாங்கிதம் அடைந்தது. ஆனால் பிறகு ராணி, 'அதெல்லாம் கனவாய்ப் போய் விட்டது. பாக்கியசாலியான வேறொரு ராஜகுமாரனை நீ மணந்து சந்தோஷமாய் வாழ்வாய்!' என்று சொன்னபோது குந்தவிக்குக் கோபமே வந்தது.

''இல்லை அம்மா! எனக்கு இல்லறத்தில் பற்று இல்லை. உலகத்தைத் துறந்து நான் குலவிரதையாகப் போகிறேன்'' என்றாள் குந்தவி. அவள் அவ்விதம் கூறியதன் கருத்தை ராணி அறிந்துகொள்ளவில்லை.

பிறகு ஒரு சமயம் குந்தவி, இளவரசர் விக்கிரமன் பல்லவ சாம்ராஜ்யத்துக்குக் கப்பம் செலுத்த இசைந்தால், இன்னமும் திரும்பி வந்து சோழ நாட்டுக்கு அரசராகலாமே என்று சொன்னபோது, அருள்மொழி ராணியின் முகம் அருவருப்பினால் சிணுங்கிற்று. ''அதைக் காட்டிலும் விக்கிரமன் செத்துப் போனான் என்ற செய்தி எனக்குச் சந்தோஷத்தை யளிக்கும்!'' என்றாள்.

மாமல்லபுரத்தில் அருள்மொழி ராணி தங்கியிருக்கும்போதுதான் ஒரு நாளைக்குப் பழைய சிவனடியார் வந்து மகாராணியைப் பார்த்துப் பேசினார். அவர் பேசிவிட்டுத் திரும்பிப்



போகும் சமயத்தில் குந்தவி அவரைப் பார்த்தாள். உடனே பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்துவிட்டன. ராணியிடம் சென்று அந்த சிவனடியார் யார் என்று கேட்டாள். யார் என்று ராணியினால் சொல்ல முடியவில்லை. ''யாரோ பெரியவர்; என் பதி வீர சொர்க்கம் சென்ற பிறகு இவர்தான் எங்களுக்குக் குலதெய்வமாயிருந்து வருகிறார்!'' என்றாள்.

குந்தவி மனதுக்குள், ''குலதெய்வமில்லை; குலச் சனியன்!'' என்று நினைத்துக்கொண்டாள். பின்னால் அருள்மொழி தேவி காவேரி சங்கமத்தில் கடலில் மூழ்கிய செய்தியும், அவளை யாரோ தூக்கிச் சென்றதாக வதந்தியும் காதில் விழுந்தபோது, 'தூக்கிக்கொண்டு போனவர் அந்தப் போலி சிவனடியாராய்த்தானிருக்க வேண்டும். ஏதோ கெட்ட நோக்கத்துடன் அந்த வேஷதாரி இத்தனை நாளாய் மகாராணியைச் சுற்றியிருக்கிறான்!' என்று நிச்சயம் செய்துகொண்டாள்.


இந்த துர் சம்பவத்துக்கு சில காலத்துக்கு முன்புதான் குந்தவியின் தமையன் இலங்கையை வெற்றிகொண்டு திரும்பி வந்திருந்தான். அவன் தன் சகோதரியிடம் அளவற்ற வாஞ்சை வைத்திருந்தான். குந்தவி, தன் உள்ளத்தை ஓரளவு திறந்து காட்டுவதும் சாத்தியமாயிருந்தது. தன் சகோதரியின் மனோநிலையை உணர்ந்து,

குந்தவை மனதுக்குள், "குலதெய்வமில்லை; குலச் சனியன்!" என்று நினைத்துக் கொண்டாள்.

மகேந்திரன் தானே செண்பகத் தீவுக்குப் போய் விக்கிரமனை எந்தச் சாக்கிட்டேனும் திருப்பி அழைத்து வரத் தீர்மானித்தான். இந்த எண்ணத்துடனே அவன் சக்கரவர்த்தியிடம் சாவகம், காம்போஜம், முதலிய கீழ் சமுத்திரத் தீவுகளுக்குப் படையெடுத்துச் செல்ல அனுமதி கேட்டான். சக்கரவர்த்தி இதற்குச் சம்மதியாமல், தமக்கே கடற்பிரயாணம் செய்யும் உத்தேசம் இருக்கிறதென்றும், அதனால் மகேந்திரன் யுவராஜ பதவியை வகித்து, பல்லவ சாம்ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை வகிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். மகேந்திரனால் இதை மறுக்க முடியவில்லை.

இந்த நிலைமையில், குந்தவியின் வற்புறுத்தலின் பேரில் மகேந்திரன், மாரப்ப பூபதியைச் சோழ நாட்டின் சேனாதிபதியாக்கியதுடன், அவனை மாமல்லபுரத்துக்கும் தருவித்தான். சிவனடியாரை அவன் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், அவர் மூலமாக ராணி அருள்மொழி தேவி இருக்குமிடத்தை அறிய வேண்டுமென்றும் மாரப்ப பூபதிக்குக் கட்டளை பிறந்தது. அதோடு குந்தவியும் மகேந்திரனும் உறையூர் வசந்த மாளிகையில் சில காலம் வந்து தங்கப் போவதாகவும், அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் உறையூர் போவதற்குச் சக்கரவர்த்தியும் சம்மதம் கொடுக்கவே, மகேந்திரனும் குந்தவியும் மற்ற பரிவாரங்கள் புடைசூழ ஒருநாள் பிரயாணம் கிளம்பினார்கள். விக்கிரமன் காட்டாற்று வெள்ளத்தில் அகப்பட்டுத் தப்பிப் பிழைத்த அன்றைக்கு மறுநாள் உச்சிப் போதில், அந்தக் காட்டாற்றுக்குச் சுமார் ஒரு காத தூரத்தில் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குந்தவி பல்லக்கிலும், மகேந்திரன் குதிரை மேலும் அமர்ந்து பிரயாணம் செய்தார்கள்.

மகேந்திரன் தன்னுடைய இலங்கைப் பிரயாணத்தைப் பற்றியும் அங்கே



தான் நடத்திய யுத்தங்களைப் பற்றியும் தங்கைக்குச் சொல்லிக்கொண்டு வந்தான். இலங்கை நாட்டின் நீர்வள நிலவளங்களைப் பற்றியும் வர்ணித்தான். குந்தவி வியப்புடன் கேட்டுக்கொண்டு வந்தாள். ஆனாலும் இடையிடையே அவளுடைய ஞாபகம் செண்பகத் தீவின் இரத்தின வியாபாரியின் மீது சென்று கொண்டிருந்தது. இது அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது. அந்த இரத்தின வியாபாரி வராமல் போனதினால்தான் என்ன, எதற்காகத் தன் மனம் அவ்வளவு கவலையுறுகிறது என்று ஆச்சரியப்பட்டாள். அவன் தனக்குச் செண்பகத் தீவு என்று சொன்னபடியால், சோழ ராஜகுமாரனைப் பற்றி அவனிடம் விசாரிக்கும் ஆவல்தான் காரணம் என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

'இல்லை; இல்லை. அவர்கள் இருவருக்கும் உள்ள முக ஒற்றுமைதான் காரணம்!' என்று ஒரு மனம் சொல்லிற்று. 'ஆனால், அது உண்மையா? அல்லது நம்முடைய கண்கள்தான் நம்மை ஏமாற்றிவிட்டனவா? உண்மையில் அத்தகைய முக ஒற்றுமையிருந்தால், அப்பா அதைக் கவனித்திருக்க மாட்டாரா? கவனித்திருந்தால் அவனை வழிப்பறிக்காரர்களிடமிருந்து காப்பாற்றி உறையூருக்கு அனுப்பி வைத்திருப்பாரா? அதெல்லாம் இல்லை; நம்முடைய பிரமைதான் காரணம்!' என்று இன்னொரு மனம் சொல்லிற்று. இத்தகைய எண்ணங்களுக்கு மத்தியில், 'உறையூரில் ஒருவேளை அந்த இரத்தின வியாபாரியைச் சந்திப்போமா?' என்ற நினைவும் அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தது.

இப்படியெல்லாம் குந்தவி தன் மனத்துக்குள் எண்ணமிட்டுக் கொண்டும், ஒரு காதில் மகேந்திரனுடைய பேச்சைக் கேட்டு 'ஊங' கொட்டிக் கொண்டும் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், அவர்களுக்கு எதிரே திடீரென்று தோன்றிய ஒரு காட்சி அவளை ஒரே அடியாகத் தூக்கிவாரிப்போட்டது. இத்தனைக்கும் அந்தக் காட்சி வேறொன்றுமில்லை; சேணம் போட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் உயர்ந்த ஜாதிக் குதிரை முதுகில் ஆள் இல்லாமல் தனியாக வந்து கொண்டிருந்த காட்சிதான். அதைக் கண்டு ஏன் அவ்வாறு குந்தவி திடுக்கிட வேண்டும்? - அவளுக்கே தெரியவில்லை. குதிரை இன்னும் அருகில் வந்தது. அது அவளுடைய தந்தையின் குதிரைதான் என்பது ஐயமறத் தெரிந்தது. சில சமயம் சக்கரவர்த்தி அதில் ஏறி வந்திருப்பதை அவளே பார்த்திருக்கிறாள், அது எப்படி இங்கே வந்தது? ஒருவேளை, அப்பாதான்...? அவ்விதம் இருக்க முடியாது. அப்பாவிடம் காஞ்சியில் விடைபெற்றுக் கொண்டுதானே கிளம்பினோம்? நமக்கு முன்னால் அவர் எப்படி வந்திக்க முடியும்? வந்திருந்தாலும் குதிரை ஏன் இப்போது தனியாக வருகிறது?.... சட்டென்று ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. இரத்தின வியாபாரிக்குக் குதிரையும் கொடுத்து அனுப்பியதாக அப்பா சொன்னாரல்லவா? குதிரைக்குப் பதிலாக அவன் கொடுத்த இரத்தினங்களையும் காட்டினாரல்லவா? ஆமாம்; இரத்தின வியாபாரி ஏறிச்சென்ற குதிரையாய்த்தான் இருக்க வேண்டும். ஆனால், அது ஏன் இப்போது தனித்து வருகிறது? இரத்தின வியாபாரி எங்கே? அவன் என்ன ஆனான்...? குந்தவியின் அடிவயிறு அப்படியே மேலே கிளம்பி அவளுடைய மார்பில் புகுந்து மூச்சை அடைத்து விட்டது போலிருந்தது.

(தொடரும்)

எப்போது பார்த்தாலும் காரியம் செய்துகொண்டிருப்பதே நமக்கு இயல்பாகி விட்டது. உடம்பால் காரியம் செய்யாதபோதும், வாக்கால் பேசிக் காரியம் செய்யாதபோதும்கூட, நம் மனசு சதா எதையாவது நினைத்துக்கொண்டே இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்தக் காரியம் நின்றால்தான், அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால்தான், எந்தக் காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடைய முடியும். ஆனால், இந்த மனசால் ஒரு கணம்கூட எதையும் நினைக்காமல் இருக்க முடியவில்லையே! இதை எப்படி நிறுத்தப் பழக்குவது?

இந்தப் பழக்கத்துக்கு வழிதான் பக்தி. காரியமில்லாத பிரம்மத்தை நாமும் காரியமில்லாமலிருக்கிற நிலையில்தான் அனுபவிக்க முடியும். அது முடியவில்லையா? அதே பிரம்மம் சகல பிரபஞ்சங்களையும் நடத்திவைக்கிற அதாவது, காரியத்தைச் செய்கிற ஈஸ்வரனாக இருக்கிறதல்லவா? இந்த ஈஸ்வரனையே சதா சிந்தனை பண்ணு. காரியத்தை எல்லாம் அதற்கே திருப்பு. உடம்பால் நமஸ்காரம், பூஜை; வாக்கால் ஸ்தோத்திரம்; மனசால் தியானம் என்று சகல காரியங்களையும் ஈஸ்வரனிடம் செலுத்து. அவற்றை ஈஸ்வரன் அங்கீகரித்து, உன்னை பிரம்ம ஞானத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். இப்படிப்பட்ட இடையறாத ஈஸ்வரச் சிந்தனைக்குத்தான் பக்தி என்று பெயர். இதில் அன்பு ரொம்பவும் முக்கியம். அன்போடு அவனை நினைப்பதே பக்தி.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு

பக்தி







● சாமுவேல்

சைக்கிள் ஓட்டும் பிராய்லர் கோழி!

மானாமதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் இருக்கிறது மேலகொன்னைக்குளம் கிராமம். இங்குள்ள இரயில் நிலையம் அருகே, இரண்டு ஏக்கர் தோட்டத்தில் அமைந்திருக்கிறது அந்த ஓவியக் கோயில். ஓவியங்களை வரைந்து கோயிலையும் கட்டியிருப்பவர், ஸ்பெயின் நாட்டுக் கலைஞர் சாமுவேல் ஸ்வென் பெர்பின் வில்ஸ்லெஃப்!

''நான் பிறந்தது டென்மார்க்; வளர்ந்தது ஸ்பெயின். முப்பத்தைந்து வயது வரை அங்குதான் வசித்து வந்தேன். பள்ளி நாட்களின் ஓய்வு நேரங்கள் கேன்வாஸ்களுடனும், பிரஷ்களுடனுமே கழிந்தன. படிப்பில் ஏனோ நாட்டம் செல்லவில்லை. சில வருடங்கள் டென்மார்க்கில் ஓவியராக வேலை பார்த்தேன். ஒரு கட்டத்தில் அந்த தேசம் எனக்குச் சலித்துப்போனது.

பல நாடுகளின் இயற்கை அமைப்புகளை நேரில் கண்டு ரசித்து, ஓவியங்கள் வரைய விரும்பினேன். ஓர் ஓவியச் சுற்றுலாப் பயணியாக உலகின் இருபது நாடுகளுக்கும் மேலாகச் சுற்றுப்பயணம் செய்துள்ளேன். இந்தியா வந்த புதிதில் கேரளாவில் ஒரு கூரை வேய்ந்த குடிலில், ஓவியக் கண்காட்சி வைத்திருந்தேன். எதிர்பாராதவிதமாக அந்தக் குடில் தீக்கிரையாகிப் போனது. எனது ஓவியங்களும் அதில் சாம்பலாயின. அப்போதுதான் என் ஓவியங்களுக்காக நிரந்தரக் கலைக்கூடம் அமைக்க முடிவு செய்தேன்'' என்று சொல்லும் சாமுவேல், தமிழ்நாட்டுக்கு வந்து பதினைந்து வருடங்கள் ஆகின்றன.

''என்னை அதிகம் கவர்ந்தது இங்குள்ள கோயில்களும் தென்னை மரங்களும்தான். அதனால்தான் எனது ஓவியக் கூடத்தை கோயிலின் வடிவத்திலேயே அமைத்துள்ளேன். பெரும்பாலான ஓவியங்களில் இவற்றில் ஏதேனும் ஒன்று வரையப்பட்டிருக்கும்.''

''தமிழ்நாட்டைச் சுற்றி வந்த புதிதில், பிராய்லர் கோழிகளைத் தலைகீழாக சைக்கிளில் வைத்துக் கட்டிக்கொண்டு ஓட்டிச் செல்வதைப் பார்த்திருக்கிறேன். அதன் இறக்கைகள் படபடக்கும். க்கீ... க்கீ... என்று அவை கூச்சலிடுவதைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்டிருக்கிறேன். பதிலுக்கு, அந்த பிராய்லர் கோழி, மனிதர்களைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு சைக்கிள் ஓட்டினால் எப்படியிருக்கும் என்றும் கற்பனை செய்தேன். அதுவே பிராய்லர் கோழி சைக்கிள் ஓட்டிச் செல்லும் ஓவியம்!'' எனக் கூறுகிறார் சாமுவேல்.



செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

எஸ்.பி.முத்துராமன்

பஞ்சு அருணாசலத்தின் உறுதுணையோடு அவரது சகோதரர் சுப்பு தயாரிப்பில், பிரபல எழுத்தாளரான சுஜாதாவின் கதையைப் படமெடுக்க முடிவு செய்யப்பட்டபோது, அதனை இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தப் படம்தான் 'ப்ரியா'.

சுஜாதாவின் மிகப் பிரபலமான கதாபாத்திரங்களான கணேஷ், வசந்த் இடம்பெறும் விறுவிறுப்பான துப்பறியும் கதையில், வக்கீலான கணேஷ் பாத்திரத்தில் ரஜினி நடிக்கவும், அவருக்கு ஜோடியாக ஸ்ரீதேவி நடிக்கவும் முடிவாயிற்று. இன்று ரஜினியை உலகமே சூப்பர் ஸ்டார் என்று கொண்டாடுகிறதல்லவா?

அப்படி ரஜினி பெயருக்கு முன்னால், 'ப்ரியா' படத்தின் டைட்டிலில்தான் முதன் முதலாக 'சூப்பர் ஸ்டார்' என்ற பட்டம் போடப்பட்டது! ஆனால், 'பைரவி' படத்தின் விளம்பரத்தில்தான் தயாரிப்பாளர் கலைப்புலி தாணு, ரஜினியை 'சூப்பர் ஸ்டார்' என்று போஸ்டர்களில் பெரிய அளவில் போட்டார்.

ப்ரியா கதையின் சம்பவங்கள் சிங்கப்பூரில் நடப்பதாக எழுதப்பட்டிருந்ததால், முழுப் படத்தையும் சிங்கப்பூர், கோலாலம்பூர், ஹாங்காங் ஆகிய ஊர்களில் எடுப்பது என்று தீர்மானித்தோம். முழுப் படத்தையும் அயல்நாட்டில் எடுப்பது என்பது எங்களுக்கு முற்றிலும் ஒரு புதிய அனுபவம். படத்தின் தயாரிப்புச் செலவு மிக அதிகமாக இருக்கும் என்பதனாலும் எங்களுக்கு இலேசான டென்ஷன் ஏற்பட்டது. படத்தின் ஸ்கிரிப்டை முழுமையாகத் தயார் செய்துகொள்வதுடன், எந்தெந்த காட்சிகளை எங்கு படம் பிடிப்பது என்பதையும் முழுமையாகத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும் என்று முடிவுசெய்தோம். அவுட்டோர் ஸ்பாட்டுகள், வீடுகள், அலுவலகங்கள் மற்றும் இதர இடங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கு வேண்டிய அனுமதி வாங்க முடியும்; நடிகர், நடிகையரின் கால்ஷீட்டை வீணாக்காமல், திட்டமிட்டபடி படப்பிடிப்பை நடத்தவும் முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருந்தது. லொகேஷன் பார்ப்பதற்காக கே.என்.சுப்பு, கேமராமேன் பாபு இரு



வரவேற்பினைப் பெறும் என்று உள்மனம் சொன்னது. சோப்ரா மாஸ்டரும் புலியூர் சரோஜாவும் அந்தப் பாடல்களுக்கு எப்படி நடனம் அமைப்பது என்பதை சிங்கப்பூருக்குப் புறப்படுவதற்கு முன்பாகவே ப்ளான் போட



• 'ப்ரியா' படத்தில் ரஜினி - ஸ்ரீதேவி



நான்... ரஜினி... ப்ரியா...

வருடன் சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் ஹாங்காங் பயணம் மேற் கொண்டோம்.

படத்தில் இடம்பெறும் காட்சிகளின் பட்டியலோடு புறப்பட்ட நாங்கள், அங்குள்ள நண்பர்களின் உதவியுடன் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு நிம்மதியாக ஊர் திரும்பினோம். அதற் குள் பஞ்சு அருணாசலம் இங்கே இளைய ராஜாவுடன் உட்கார்ந்து, படத்துக்கான பாடல்களுக்கு அற்புதமான டியூன்களை வாங்கி வைத்திருந்தார். அந்தப் பாடல் களைக் கேட்கிறபோதே, ஃபாரினில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் பார்த்துவிட்டு வந்த அயல்நாட்டு லொகேஷன்கள் என் மனத் திரையில் ஓட, இளைய ராஜாவின் அற்புதமான டியூன்களுக்கு எழுதப் பட்ட பாடல்கள் அனைத்தும் ரசிகர்கள் மத்தியில் அமோக ஆரம்பித்துவிட்டார்கள்.

படத்தின் பட்ஜெட்டை மனத்திற் கொண்டு படப்பிடிப்புக்கு மிகவும் அவசியமான நடிகர், நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்களைக் கொண்ட சிறிய குழுவாக சிங்கப்பூர் சென்று இறங்கினோம். படப்பிடிப்புக் குழுவில் அனைவரும் ஒரு குடும்பம் போல அளித்த ஒத்துழைப்பை மறக்கவே முடியாது. காலையில் வெகு சீக்கிரமாகவே படப்பிடிப்புக்குப் புறப்பட வேண்டியிருக்கும். நாங்கள் தங்கி இருந்த ஓட்டலில் அந்த நேரத்தில் காலை உணவு தயாராகாது. ஆனால், சோப்ரா மாஸ்டர் அதிகாலையில் எழுந்து, முன்னதாகவே வாங்கி வைத் திருக்கும் பிரட்டில் ஜாம் தடவி, அனைவருக்கும் கொடுப்பார். ஒரு இடத்தில் படப்பிடிப்பு முடிந்தவுடன், கிடைத் ததை வாங்கிச் சாப் பிட்டு, அங்கிருந்து

11

ரசிகர் மன்ற ராஜாக்கள்



''ரஜினி சார் மேல எனக்குச் சின்ன வயசுலேர்ந்தே செம க்ரேஸ். அவர் படம் ஒண்ணு விடாமப் பார்த்துடுவேன். என் தோழிங்க பலரும் அவரோட ரசிகைங்கதான். 'ஆறிலிருந்து அறுபது வரை' படம் பார்த்துத்தான் சூப்பர் ஸ்டாரோட தீவிர ஃபேன் ஆனேன்'' என்று கூறும் திருமதி ரூபாவதி சென்னையை அடுத்த கூடுவாஞ்சேரியில் வசிக்கிறார்.

''கொஞ்ச நாளைக்கு முன்னாடிதான் எனக்குக் குழந்தை பிறந்தது. ரஜினி சார் என் குழந்தைக்குப் பேர் வெக்கணும்ங்கறது என்னோட நீண்ட நாள் கனவு. என் வீட்டுக்காரரும் ரஜினி ரசிகரா அமைஞ்சதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். தலைவர் கவிதாலயா பேனர்ல அடுத்து பண்ணப் போற படத்துக்காக ஆவலோடு காத்துக்கிட்டிருக்கோம். ஷங்கர் காம்பினேஷன்ல 'ரோபோ'வும், 'சிவாஜி' மாதிரி பெரிய ஹிட் ஆக அட்வான்ஸ் வாழ்த்துக்கள். என்னை மாதிரி கோடான கோடி ரசிகர்கள் இருக்கறவரை தமிழகத்தோட நிரந்தர சூப்பர் ஸ்டார் ரஜினி சார்தான். எத்தனை நடிகர் வந்தாலும் இதை மாத்தவே முடியாது. என் குழந்தைக்கு அவர் பேர் வெக்கணும்னு ஆசைப்படுறேன். இதை அவர் ஒரு வேளை படிக்க நேர்ந்து, அந்தப் பாக்யம் எனக்குக் கிடைச்சா அதுவே எனக்குச் சந்தோஷம்தான்'' என்கிறார் ரூபாவதி.

அடுத்த லொகேஷனுக்குப் போய்விடுவோம்.

ஹாங்காங்கில் ஓஷன் பார்க் என்ற பூங்கா மிகப் பிரபலமானது. பரந்து விரிந்து அமைந்த மலைப்பகுதி போன்ற அந்தப் பூங்காவின் ஒவ்வொரு பகுதியிலும் டால்ஃபின் விளையாட்டு, ஜினிகள் விளையாட்டு என்று பல பொழுதுபோக்குகள் இருக்கும். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மலையில் ஏறி - இறங்க வேண்டும். சாதாரண சுற்றுலாப் பயணிகளாக இருந்தால் பரவாயில்லை. படப்பிடிப்பு என்றால் சும்மாவா? கேமரா, விளக்குகள் என்று பளுவான பல பொருட்களையும் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும்! எங்கள் குழுவிலோ மிகக் குறைந்த நபர்கள்தான்! அப்போது ரஜினி செய்த காரியம் எங்களை வியப்பிலாழ்த்தியது! அவர் கேமரா, விளக்குகளுக்குத் தேவையான வெயிட்டான பேட்டரிகள் இரண்டை எடுத்துத் தமது இரு தோள்களிலும் மாட்டிக்கொண்டு மலை மீது நடக்க ஆரம்பித்துவிட்டார்.

நான் அவரிடம் போய், ''ஒரு பேட்டரியையாவது என்னிடம் கொடுங்கள்'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''இரண்டு தோள்களிலும் பேட்டரிகள் இருந்தால்தான் நடக்கும்போது பேலன்ஸாக இருக்கும்'' என்று கூறிவிட்டுச் சுமையோடு நடக்கத் தொடங்கினார். அங்கே நான் ரஜினியைப் பார்க்கவில்லை. ஓர் உழைப்பாளியைத்தான் பார்த்தேன். அந்நிய மண்ணில், படப்பிடிப்பின்போது அவர் கொடுத்த ஒத்துழைப்புதான் ப்ரியா படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம்.

வெளிநாட்டுப் பயணங்களில் நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். நானும் ஒரு பாடம் கற்றுக்கொண்டேன். அதைக் கற்றுக் கொடுத்தவர் ஒரு சீனாக்காரர். அந்தப் பாடம்...

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம் :
எஸ்.சந்திரமௌலி



"புலிகளுக்குப் பொருளுதவி, ஆயுத உதவி செய்ய மாட்டோம்!"

திருமாவளவன் பேட்டி

குஷ்புவுடன் மோதல் ஒருபக்கம், தினமலர் அலுவலகத்தின் மீது விடுதலைச் சிறுத்தைகளின் தாக்குதல் மறுபக்கம் என அந்த இயக்கத்தின் தலைவர் திருமாவளவனின் பெயர் பரபரப்பாகப் பத்திரிகைகளில் அடிபட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கேள்விகளோடு சந்தித்தோம்...

குஷ்புவை விடமாட்டீர்கள் போலிருக்கிறது?

''ஊடகத் துறையினரும், சில நடு நிலையாளர்களும் நடந்த விஷயங்களைச் சரியான ரீதியில் அணுகாமல், எங்கள் மீது அபாண்டங்களை அள்ளி வீசுகிறார்கள். குஷ்பு, முன்பு 'இந்தியா டுடே'வில் சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்ததற்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. அதன் பிறகு தினத்தந்தியில் தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தும் விதமாக தெரிவித்த கருத்துக்கள்தான் எங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின. அதனால்தான் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். அதன் பிறகு குஷ்புவால் ஏற்பட்ட சில சர்ச்சைகளுக்கும் சிறுத்தைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.''

அப்படியென்றால் புத்தக வெளியீட்டு விழாவில்

நடந்ததுதான் என்ன?

''நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் இரவு எனக்குச் சுத்தமாகத் தூக்கம் இல்லை. கட்சிப்பணியின் சுமையால், கொஞ்சம் தாமதமாகத்தான் நிகழ்ச்சிக்குப் போனேன். தோழர்களுடன் விழா நடக்கும் அரங்கத்துக்குள் நுழைந்தபோது அரங்கத்தில் மேடையில் இருந்த அனைவரும், பார்வையாளர்கள் பலரும் வணக்கம் தெரிவித்தார்கள். ஆனால், குஷ்பு மட்டும் வேறு பக்கம் திரும்பிக்கொண்டு, கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் எனக்கு வணக்கம் தெரிவிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அதேசமயம் அவர் என் பக்கம் திரும்பினால், வணக்கம் சொல்லும் மனநிலையில்கூட நான் இருந்தேன். ஆனால், என் பக்கம் அவர் திரும்பவேயில்லை. நான் அதைப் பற்றிப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் நிகழ்ச்சியில் கவனம் செலுத்தினேன். புத்தக வெளியீடு முடிந்து பேச வந்த குஷ்பு, 'என் மீது பல வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இப்போது திருமாவளவனுக்கு வணக்கம் தெரிவிக்காவிட்டால் மற்றொரு வழக்கும் போட்டுவிடுவார்கள்' என்று பழைய கதைகளைச் சொல்லி, 'திருமாவளவன் சார் வணக்கம்' என்றார். அவர் பேசிய விதம் உணர்வுகளைச் சீண்டக்கூடியதாக இருந்தது. எனவேதான் கவிஞர் அறிவுமதி போன்றவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். குஷ்பு, திரைப்பட நட்சத்திரமாக இருப்பதால், சிலர் இதுபோன்ற சங்கதிகளை வணிகமாக்கி, பூதாகாரமாக்க முனைகிறார்கள். ஆனால், தோழமையோடு அவரது தவறுகளைச் சுட்டிக் காட்ட ஒருவரும் இல்லை என்பது மட்டும் புலனாகிறது. அதனாலேயே அவர் தவறுமேல் தவறு செய்கிறார்.''

அவர் எழுப்பும் பிரச்னைகளுக்கு ஆதரவு தருவோம் என்று நீங்கள் பேசினீர்களாமே?

''பெண்ணியம், பெண்கள் சுயசார்பு, பெண் விடுதலை போன்ற பிரச்னைகளை குஷ்பு எழுப்பினால், அதற்குச் சிறுத்தைகள் ஆதரவு உண்டு என்பதைத் தெரிவித்தேன். 'எந்தப் பிரச்னையென்றாலும் ஆதரவு கொடுப்பீர்களா?' என்றார் அவர். 'அதற்காக நீங்களே பிரச்னைகளைத் தேடி அலைந்து மாட்டிக்கொள்ளக் கூடாது' என்றும் அவருக்குத் தோழமையுடன் எச்சரித்தேன்.''

தினமலர் அலுவலகத்தில் உங்கள் கட்சியினர் நடத்திய தாக்குதல் அநியாயமில்லையா? கருத்துக்குக் கருத்து தானே மோத வேண்டும்?


''நீங்கள் குறிப்பிடும் பத்திரிகை எங்கள் மீது அவதூறுகளை வீசுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் சில ஊடகங்கள் உள்நோக்கோடு கருத்துக்களைச் சொல்கின்றன. பெரும்பாலும் யூகங்கள் அடிப்படையில் செய்திகளைப் போடுகிறார்கள். புலனாய்வுத் தன்மை குறைந்து போய்விட்டது. ஒரு சார்புத் தன்மை அதிகம். இத்தகைய போக்குச் சில நேரங்களில் பொது அமைதியையும் சீர்குலைக்கிறது. ஆகவேதான், உள்நோக்கமுள்ள ஊடகங்களை எதிர்த்துக் குரலெழுப்பும் கட்டாயம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அளவில் எங்கள் தோழர்கள் எழுப்பிய எதிர்வினை அமைந்துவிட்டது. இருப்பினும், அந்த

வெறுங்கை
என்றால் நீட்டி முழக்கலாம்.
எண்ணெய்க் கரண்டி வைத்திருப்பவர்
எப்படி நீட்டி முழக்க முடியும்?

* கருணாநிதி



குஷ்பு, தவறு செய்யும்போது தோழமை உணர்வோடு அதைச் சுட்டிக் காட்ட ஒருவரும் இல்லை. அதனாலே அவர் தவறு மேல் தவறு செய்கிறார்!



* குஷ்பு

நாளேட்டின் அலுவலகத்தில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகள் வேதனைக்குரியவை; கண்டனத்துக்குரியது. அதுபோன்ற செயல்களை நான் என்றுமே ஊக்கப்படுத்துவதில்லை.''

நரேந்திர மோடியை சென்னைக்கு வரக்கூடாது என்று சொல்வது எப்படி சரியாகும்?

''நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக அவர் சொன்ன கருத்தை எதிர்க்க எங்களுக்கு உரிமை உண்டு. அதுபோல அவரது கருத்தைச் சொல்ல அவருக்கு உரிமையிருந்தாலும், மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அவர் பேசக் கூடாது. அதை உணர்த்தும் உரிமையும் எங்களுக்கு உள்ளது. அதைத்தான் நாங்கள் செய்தோம்.''

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் என்ன வாயிற்று. எந்தவொரு செயல்பாடும் இல்லையே?

''கலைஞர் ஆட்சியில் தமிழ் பாதுகாப்போடும், உயிரோடும், உணர்வோடும் உள்ளது. எனவே, எங்களுக்கு வேலை குறைவுதானே!''

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நீங்கள் கருத்துரிமை மாநாடு போடப் போகிறீர்கள் என்கிறார்களே?

''தமிழ்நாட்டில் இப்போது கருத்துச் சுதந்திரத்தை அடக்க முயற்சி நடக்கிறது. ஈழத்தில் தமிழர்கள் மீது நடக்கும் படுகொலைத் தாக்குதல்களைக் கண்டிக்கக் கூடாது என்றும், இறந்தவர்களுக்கு அனுதாபம்கூடத் தெரிவிக்கக் கூடாதென்றும் கண்டனக் குரல்கள் எழுகின்றன. அனுதாபக் கவிதை எழுதினால் ஆவேசப்படுகிறார்கள்; தேசத் துரோகம் என்றெல்லாம் பட்டம் கட்டுகிறார்கள். இலங்கை இராணுவத் தாக்குதலில் இறந்த தமிழ்ச்செல்வன், மிலிட்டரி உடையைத் தூக்கிப் போட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அவர் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிப்பது தவறா? இதையெல்லாம் தட்டிக் கேட்கவே கருத்துரிமை மாநாடு. ஈழ மக்களையும், விடுதலைப் புலிகளையும் தனித் தனியாக நாங்கள் பிரித்துப் பார்க்கவில்லை. இந்தப் பிரச்னையில் எங்கள் நிலை என்பது தார்மீக ஆதரவே தவிர, ஆயுத உதவியோ அல்லது, பொருளுதவியோ நாங்கள் செய்யவில்லை; செய்யவும் மாட்டோம்.''

ஈழப் பிரச்னையில் கலைஞர் அணுகுமுறை திருப்தியளிக்கிறதா?

''ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் எச்சரிக்கையோடும் பாதுகாப்போடும் இந்தப் பிரச்னையைக் கையாள வேண்டியுள்ளது. வெறுங்கை என்றால் நீட்டி முழக்கலாம். எண்ணெய்க் கரண்டி வைத்திருப்பவர் எப்படி நீட்டி முழக்க முடியும்?''

பா.ம.க. - தி.மு.க. விரிசல் நாளடைவில் பிளவாக மாறும் என்று நினைக்கிறீர்களா?

''அப்படி நான் நினைக்கவில்லை; பா.ம.க. தொடர்ந்து தி.மு.க. அணியில் இருக்கும்; இருக்கவேண்டுமென்பதுதான் என் விருப்பம்.''


வரும் பாராளுமன்றத் தேர்தலில், தமிழகத்து அணிகளில் மாற்றம் வருமா?

''கண்டிப்பாக... அ.தி.மு.க. கூட்டணியில் மாற்றம் இருக்கும். தி.மு.க. அணி கட்டுக்கோப்பாகத் தேர்தலைச் சந்திக்கும்.''

- ப்ரியன்

கேமரா கதை 3

தஞ்சாவூர்க் கவிராயர்



சாமி கும்பிட்டுவிட்டு கோயில் பிரகாரத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்த நான் சட்டென்று நின்றேன்.

சற்றுத் தொலைவில் ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு ஓர் இளைஞனும் யுவதியும்!

அந்தக் காட்சி, அப்படி ஒன்றும் கௌரவக் குறைச்சலாகவும் இல்லை; இவ்வளவு ஏன்? பார்க்க சந்தோஷமாகக்கூட இருந்தது!

பொது இடங்களில் ஆணும் பெண்ணும் கையைப் பிடித்துக்கொண்டு நடந்துபோவது, அநாகரிகமான பழக்கம் என்று எழுதப்படாத ஒரு சட்டத்தை இந்தச் சமூகம் ஏற்படுத்தி வைத்திருக்கிறது. இந்தச் சட்டத்தை ஏற்று நடக்க பழைய தலைமுறை எப்போதும் தயாராகவே இருக்கிறது.

இத்தனை வயசுக்கு அப்புறமும் அன்றொரு நாள், என் மனைவியின் கையைப் பிடித்துச் சாலையைக் கடக்க அழைத்துச் செல்வதற்குள் எவ்வளவு முரண்டு பிடித்தாள்! 'கையை விடுங்க மொதல்ல' என்று எப்படி உதறினாள்!

சில சமயம் எதிரில் இருப்பவர்களை வெறும் ஜடமாக நினைத்துக்கொண்டு இந்தக் 'காதலர்களும்' 'கல்லூரி நண்பர்களும்' ஒருவரை ஒருவர் நிண்டிக்கொள்வதும் சீண்டிக்கொள்வதுமான அருவருப்பான காட்சியைப் பார்க்கும்போதெல்லாம், ஒரு சாட்டையை எடுத்து அவர்களை விளாசித் தீர்க்கவேண்டும்போல ஒரு வெறி எனக்குள் மூளும்!

இதோ என் முன்னால் நிற்கிற இந்த இரண்டு பேரும் நிச்சயமாக அந்த ரகத்தில் சேர்த்தவர்களில்லை.

இவர்களைப் பார்த்தால் ஏதோ மணமேடையில் இருந்து எழுந்து வந்தவர்களைப்போல் இருக்கிறார்கள்.

புத்தாடை அணிந்திருக்கும் இவர்களை உற்றுக் கவனித்ததும் எனக்குள் ஒரு தடுமாற்றம். எங்கேயோ பார்த்திருக்கிறேன் இவர்களை

ஞாபகம் வந்துவிட்டது.

மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்னால் இவர்கள் இரண்டு பேரையும் நகரின் தென்பகுதியில் இருந்த ஒரு காவல் நிலையத்தில் பார்த்திருக்கிறேன். சந்தேகமே இல்லை. அவர்களேதான்!

காவல் நிலைய அதிகாரி என் நண்பன். என் மகளின் பாஸ்போர்ட் விஷயமாக

காதலென்றால் காதல் இல்லை!



★ 'தெனாவட்டு' படத்தில் ஜீவா, —

அவனைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் என் நண்பனின் முகத்திலிருந்த கடுகடுப்பு மறைந்து, ஒரு கனிவும் அதைத் தொடர்ந்து ஒரு புன்னகையும் தோன்ற, 'உக்காருப்பா. இதோ வந்துடறேன்' என்றான்.

நான் உட்கார்ந்தேன். நான் விரும்பாமலேயே அங்கே அரங்கேறிக்கொண்டிருந்த நாடகம் ஒன்றின் பார்வையாளனாக ஆனது போல் எனக்குள் ஒரு பிரமை!

என் நண்பனின் முகத்திலிருந்து காக்கிக் கனல் வீசியது.

''மிஸ்டர்! இந்தப் பொண்ணைக் கடத்திக்கிட்டுப் போனதா உன் மீது புகார்! புகார் கொடுத்தவர் யார் தெரியுமில்லை? இந்த ஊர்ல பெரிய மனுஷன். தொழிலதிபர் மோகன மூர்த்தி!''

அவன் குரலில் ஓர் உறுதி இருந்தது.

''சார்! புகாரை யார் கொடுத்திருந்தா என்ன? நான் இந்தப் பெண்ணைக் கடத்தலை. அவங்க பேரூர். அவங்ககிட்டயே கேளுங்களேன்!''

எரிச்சலோடு பெண்ணிடம் கேட்டான் என் நண்பன்.

''என்னம்மா, இவன் சொல்றது உண்மையா?''

கொஞ்சம்கூடத் தடுமாறாமல் வந்தது பதில்.

''உண்மைதான் சார். நாங்க ரெண்டு பேரும் ஒரே ஆஃபீஸில் வேலை பார்க்கறோம். கொடைக்கானலில் நடந்த ஒரு யூத் ஃபெஸ்டிவலுக்குப் போயிருந்தோம்! அவ்வளவுதான்!''

''யூத் ஃபெஸ்டிவல்னா?''

''இளமைத் திருவிழா!''

''ஓ! புரிஞ்சுபோச்சு! இளமைத் திருவிழா கொண்டாட உங்க இரண்டு பேருக்கும் சென்னையில் இடமே இல்லை! கொடைக்கானல் போயிருக்கீங்க. குளிர் பிரதேசமாச்சே! நல்லாத்தான் இருந்திருக்கும்!''

அவள் சீறினாள்.

''சார்! நாகரிகமாப் பேச கத்துக்குங்க மொதல்ல! இளமைத் திருவிழான்னு சொன்னாலே, மெட்ராஸ்ல இருக்கற ஸ்டார் ஓட்டல்கள் ஞாபகம்தான் வருகிறது உங்களுக்கு! இலட்சிய வெறியோட, இந்தத் தேசத்துக்காக ஏதாவது செய்யணும்ங்கற குறிக்கோளோட, இளைஞர்கள் ஒன்றுகூடி கொடைக்கானல்ல முதல்முறையா ஒரு பெரிய விழா நடத்தினோம். அதுல இவர் பிரபஞ்சன் கையால பரிசு வாங்கினாரு!''

என் நண்பனின் நையாண்டியை என்னாலயே தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''பலே! அப்ப சொல்லிட்டுப் போயிருக்கலாமே?''

''அப்பா டெல்லி போயிருந்தார்! அம்மாவுக்கு இதெல்லாம் புரியாது! ஆபீஸ் விஷயமா வெளியூர் போறேன்னு சொன்னேன்!''

திடீரென்று வெளியே கார் சத்தம் கேட்டது. அப்புறம் வெள்ளைவெளேர் கதர்ச் சட்டையில் தொழிலதிபர் மோகன மூர்த்தி. அவர் முகத்தை பேப்பரில் பார்த்திருக்கிறேன்.

மகளைப் பார்த்து, ''வாம்மா போகலாம்!'' என்றார் கருக்கமாக.

''அப்பா...'' என்று அந்தப் பெண் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

அவள் சொல்வதைக் கவனிக்க விரும்பாதவராக இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''சார், அவனை விட்ருங்க. இதைப் பெரிசு படுத்த வேண்டாம். பத்திரிகை அது இதுன்னு அசிங்கமாயிடும்! எம் பொண்ணு கிடைச்சுட்டா! அது போதும் எனக்கு! வேலைக்குப் போகவேண்டாம்னா கேக்



'தெனாவட்டு' படக்காட்சிதான் இந்த வார கேமரா ஷாட். ஜீவாவின் காம் பற்றி, கசிந்துருகும் நாயகி பூனத்திடம் பேசினோம். ''இது எனக்கு முதல் படம். 'டிஷ்யூம்' பார்த்து ஜீவாவோட நடிப்புல பிரமிச்சுப் போயிருக்கேன். 'தமிழ் எம்.ஏ.'ல அசந்துட்டேன். இப்ப அவர்கூடவே ஜோடியா நடிக்கறதுல ரொம்பச் சந்தோஷம். படத்துல நாங்க காதலர்கள். ஆனா கதைல எங்களைக் கதாசிரியர் நண்பர்களாக்கிட்டார். இதுகூட நல்லாத்தான் இருக்கு'' என்றார். நாயகன் ஜீவா ''டைரக்டர் வி.வி. கதிருக்கு இது முதல் படம். எப்பவுமே நான் இயக்குநர்களின் நடிகன். இதுலயும் அவரை முழுசா நம்பி என்னை ஒப்படைச்சிருக்கேன். அற்புதமா பண்றார். ஆக்ஷன் படத்துல லவ்வுலயும் புகுந்து விளையாடி இருக்கார். படம் வந்ததும் பார்த்துட்டு இதை நீங்களும் சொல்வீங்க'' என்றார்.

இடி சிரிப்ஸ்!



''உங்க கடைல பொருட்கள் எல்லாம் நல்லா இருக்கு... விலையும் மலிவு... உங்க நேர்மையும் பிடிச்சிருக்கு...!''

''தம்பி... ஐயாவுக்கு ஒரு காலண்டர் கொடு...!''

- தேனி.எஸ்.மாரியப்பன்

கவை இவ!'' என்றார்.

''நான் புகாரை வாபஸ் வாங்கிக்கறேன்''

அந்தப் பையன் தொழிலதிபரைப் பார்த்துக் கோபமாக, ''நீங்க என்ன நினைச்சுக்கிட்டுப் பேசறீங்க? நாங்க ரெண்டு பேரும் காதலர்கள்னா? நாங்க நண்பர்கள் சார்!'' என்று சொல்ல முற்பட,

அந்தப் பெண் திடீரென்று சாமி வந்தது போல் கத்தினாள்.

''வேண்டாம் அருண்! இவங்களுக்கு நட்பும் புரியாது, காதலும் புரியாது! இன்ஸ்பெக்டர், நான் சொல்றதைக் கேட்டுக்குங்க; அப்பா நீங்களும்தான்! நான் இவனைக் காதலிக்கிறேன்! ஆனால், நீங்க நினைக்கிற அர்த்தத்தில் அல்ல! காதல்னா அன்புப்பா! நான் இவன் மீது அன்பு செலுத்தறேன்...''

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி என்ற பக்தி வரிகள் எனக்குள் ஓடின.

''அப்பஎன்னா நீ இவனை விடறதா இல்லியா?'' என்று கொச்சையான அப்பாவித்தனத்துடன் கேட்டார் அந்தத் தொழிலதிபர்.

''அசிங்கமாப் பேசாதீங்கப்பா. காதல்னா அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு அர்த்தமில்லேப்பா. காதல்ங்கறது ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கறது. அவங்க உயர்வுக்காகப் பாடுபடறது. அது அருமையான வார்த்தைப்பா. இந்த டி.வி.யும் சினிமாவும் சேர்ந்து காதலைக் கெட்டவார்த்தையா ஆக்கி, அதுக்கு வேற அர்த்தத்தைக் கொடுத்து இளைஞர்களைக் குட்டிச்சுவராக்கிட்டாங்க! காதல்ங்கறது ரொம்ப ஒசந்த விஷயம்! அதை வெச்சுக்கிட்டு நான் பெரிய சாதனைகள் செய்வேன்! இந்த தேசத்தைக் காப்பாத்த காதல் உதவும் எங்களுக்கு! உங்களுக்குப் பெருமை தேடிக் கொடுப்பேன்!''

'ஆதலினால், காதல் செய்வீர் ஜெகத்தீரே' என்று பாரதி என்னுள் முழங்கினான்!

இன்ஸ்பெக்டரும் தொழிலதிபரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

''சார்! இதுல கையெழுத்துப் போடுங்க!'' என்று ஏதோ காகிதத்தை நீட்டினார் இன்ஸ்பெக்டர்.

அப்பாவுடன் அவள் காரில் ஏறிச் சென்றாள். அவன் இன்ஸ்பெக்டரிடம் கை குலுக்கி விடைபெற்றான்.

அதற்கப்புறம் இப்போதுதான் அவர்களைப் பார்க்கிறேன்.

எனக்குப் புரிந்தது. அவனுக்கு இன்று இந்தக் கோவிலில் திருமணம் நடக்க இருக்கிறது. பிரகாரத்தின் மறுபக்கம் மேளச் சத்தம் கேட்கிறது! அவனைக் கரம்பற்றி வாழ்த்துகிறாள் அவள்!

அவன் கல்யாணத்துக்குப் பிறகும் தொடரும் காதலை, நட்பை, நேசத்தைக் காட்டுவதாக அந்த இரு கரங்களின் பிணைப்பு இருந்தது. ●



■ 'மேகலா' தொடரில்...

தவறுதலாக ஒரு குடும்பத்துக்குள் நுழைந்து விட்டோமோ என்றுதான் நினைத்தோம். அத்தனை நெருக்கமாக, அத்தனை பாசமாக, கூடுதல் உற்சாகத்துடன் கும்மியடிக்கிறது 'மேகலா' டீம். தினம் தினம் தமிழக மக்களைச் சந்தித்து, தம் நடிப்பின் மூலம் அவர்கள் மனத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்திருப்பதன் கர்வம் துளிக் கூட இல்லாமல் வெகு சகஜமாகப் பேசினர்.

''நான் நிறைய சீரியல் பண்ணியிருக்கேன். ஆனா 'மேகலா' மாதிரி என் மனசை மென்மையாக்கின தொடர் எதுவுமில்ல. ஸ்பாட்டுக்கு வந்தாலே என் உலகம் மறைஞ்சு, அடுத்தவங்க உலகத்துக்குள்ள நான் பிரவேசிக்க ஆரம்பிச்சுடுவேன். அவங்களும் அதை அத்துமீறலா நினைக்காம வரவேற்று உபசரிப்பாங்க. அதே போல, டீம்ல ஒவ்வொருத்தரும் எனக்குள்ளவும் பிரவேசிப்பாங்க. இதுதான் 'மேகலா'வோட தனிச்சிறப்பு. ஷூட்டிங் போதெல்லாம் என்னை நானே மீட்டெடுத்துக்கறேன்னா பார்த்துக்கங்க'' என்று வடிவுக்கரசி பேசப் பேச, அவரின் தம்பியாக நடிக்கும் தீபன் சக்கரவர்த்தி, ''அக்கா சொல்றது நாத்துக்கு நூறு உண்மைங்க. நடிக்கறதுக்காக நாங்க அடிச்சுப்போம், அழுவோமே தவிர, கேமராவுக்குப் பின்னாடி ஒற்றுமைத் திலகங்களா மிளிருவோம். பல பேர் எங்களைப் பார்த்துக் கண்பட்டுப் போயிருக்காங்க'' என்றார்.

காதலனுக்காக உருகிக் கைப்பிடித்து, கல்யாணத்துக்குப் பிறகும் கண்கலங்கி வாழும் கேரக்டரில் வரும் பாவனா நாம் பார்த்தபோது சிரித்துக்கொண்டே இருந்தார். ''இப்படியே இருந்துடுங்க, எவ்ளோ நல்லா இருக்கு'' என்றால், ''அதை டைரக்டர்கிட்ட சொல்லுங்க. இருந்தாலும் எனக்கு என் கேரக்டர் மேல செம ப்ரியம் தெரியுமா! ரோட்ல போனாலே 'மேகலா' ஷக்தின்னு எல்லாரும் பிலுபிலுன்னு பிடிச்சுக்குறாங்க. அவங்க மட்டுமா? டீமுக்கே நான்தான் செல்லம். சப்போஸ் யாராவது


என்னைக் கொஞ்ச மறந்தாங்களோ அவ்வளோதான்'' என்றார்.

''ஆமாண்டியம்மா, நீ வெச்சதுதானே இங்க சட்டமா இருக்கு'' என்று ஆரம்பித்தார் ராஜலட்சுமி. 'மூன்று முகம்' படத்தில் ரஜினி ஹீரோயின். அதே காந்த விழிகளோடு, கொஞ்சம் குண்டான உடம்போடு மேகலாவின் அம்மாவாக வலம் வருகிறார்.

''டைரக்டர்லேர்ந்து லைட்மேன் வரைக்கும் ரொம்பத் தன்மையான யூனிட். எதுக்காகவும் யாரும் அனாவசியமா டென்ஷனாக மாட்டாங்க. ஷூட்டிங் வர்ற மாதிரியே தெரியாது. பிக்னிக் வந்து போறாப்பல இருக்கும்.

என்றும் காயத்ரி..!







என்னைக்காவது ஷூட்டிங் இல்லேன்னா பித்துப்பிடிச்ச மாதிரித் தோணும்'' என்றார்.

தூரமாய் நடந்து வந்த சண்முகசுந்தரம் நம்மைப் பார்த்துவிட, உடனே ''அய்யா, நான் கும்பிடுற ஆத்தா உங்களுக்கு எல்லா நலனையும் தரட்டும்யா'' என்றார்.

''அதெல்லாம் இருக்கட்டும் சார், இங்க எப்படி?'' என்றோம்.

''அட என்ன தம்பி நீங்க! நான் மேகலாவுலதானே வாழ்ந்துட்டிருக்கேன். இது குடும்பம் இல்ல தம்பி, கோயில். அந்த ஆண்டவன் அருளால இப்படி ஒரு சீரியல்ல நடிக்க நான் கொடுத்து வெச்சிருக்கணும். நான் கும்பிடுற ஆத்தா...'' என்று அவர் முடிப்பதற்குள்,

''நிச்சயம் மேகலாவ வாழ வைப்பாங்க சார்'' என்று சொல்லிவிட்டு, மேகலாவாக நடிக்கும் காயத்ரியைத் தேடினால், கணவரோடு செல்லில் சிணுங்கிக் கொண்டிருக்கிறார்.

''மெட்டி ஒலிக்கு அப்புறம் நிறைவான ஒரு ரோல் கிடைச்சிருக்கு. டைரக்டர் விக்ரமாதித்யனுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன். இன்னைக்கு மேகலாவ தமிழகத் தாய்மார்கள் கூடப் பொறந்த ஒருத்தியா நினைக்கறாங்க. அவங்க மனசுல என்றென்றைக்கும் இந்த காயத்ரி வாழ்வா'' என்றார்.

இறுதியாக நம்மிடம் பேசியது இயக்குநர் விக்ரமாதித்யன். ''இப்ப என் கவனமெல்லாம் மேகலாதாங்க. யாரும் அவளை மறக்க முடியாதபடி பண்ணணும். அழுகையை மட்டும் மூலதனமாக்காம ஒரு குடும்பத்துல நடக்கற பலதரப்பட்ட விஷயங்களையும் பதிவு பண்ணியிருக்கோம். நேயர்கள் விரும்பற விஷயத்தை மட்டும் தான் தரணும்ங்கிறதுல ரொம்ப உறுதியா இருக்கேன்'' என்றார்.

- ஆ.முத்துராமலிங்கம்

திருவிளையாடல்கள்

சகோதரி ஆனந்தி, காலமாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அமெரிக்காவில் வசிக்கும் அவள் மகன் சங்கருக்குப் பெண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் சௌக்கியம் என்று செய்தி கிடைத்தபோது, ஆனந்தியே மீண்டும் வந்து பிறந்துவிட்டதாக, இங்கே குடும்பத்தில் அனைவரும் சொல்லிச் சந்தோஷப்பட்டோம்.

இதில் ஓர் ஆச்சர்யம் என்னவென்றால், டாக்டர் கொடுத்த தேதிக்கு இரு வாரங்கள் முன்னதாகவே சுமித்ராவுக்குப் பிரசவ வலி கண்டுவிட்டது. அச்சமயம் சங்கர் வீட்டில் இல்லை. ஆனால், தற்செயலாக அதே நேரத்தில் ஆனந்தியின் பேத்தியும் கௌரி - ராம் நாராயண் தம்பதியின் மகளுமான அகிலா, தன் மாமா - மாமியைப் பார்க்கப் போயிருக்கிறாள். உடனே சுமித்ராவைத் தன் காரில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறாள். சுமித்ராவைத் தவிக்கவிடாமல் தக்க தருணத்தில் வந்து அகிலா உதவியதால், குழந்தைக்கு அகிலா என்றே பெயர் சூட்டியிருக்கிறான் சங்கர்.

* 'குட்டி' அகிலா



இதுபோன்ற தெய்வானுகூலங்கள் வாழ்க்கையில் நடக்கத்தான் செய்கின்றன. தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் ஒன்றின்போது 'கல்கி'யின் வருகைக்காக நண்பர்கள் தரையில் ஜமக்காளம் விரித்து அமர்ந்து காத்திருக்கிறார்கள். வெ.சாமிநாதசர்மா, ஃபேன் காற்று ஒத்துக்கொள்ளவில்லை என்பதால் எழுந்துபோய் சற்று அப்பால் அமர்கிறார். அவர் நகர்ந்தாரோ இல்லையோ, மேலே தொங்கிக்கொண்டிருந்த 'ஸீலிங் ஃபேன்' கழன்று தடால் என்று அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் விழுகிறது.

'கல்கி' வந்ததும் சாமிநாத சர்மா தெய்வாதீனமாகத் தப்பியதைச் சொல்லி நண்பர்கள் ஆச்சர்யப்படுகிறார்கள். அவர்களிடையே 'கல்கி' பேசும்போது சொல்கிறார் : ''இதே சம்பவத்தை நாம் கதையில் எழுதினால், இலக்கிய விமர்சகர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். யதார்த்தமாக இல்லை என்று ஒதுக்கிவிடுவார்கள். ஆனால் வாழ்க்கையில் இதுபோன்ற பல அதிசயங்கள் நடக்கத்தான் செய்கின்றன.''

குழந்தைப் பருவத்தில் நான், தி.நகரில் உள்ள ஹோலி ஏஞ்ஜல்ஸ் கான்வென்ட்டில் நர்சரி வகுப்பில் சேர்க்கப்பட்டேன். போக் ரோடில் வீடு. பள்ளிக்கூடம் விட்டதும் அழைத்துப் போக வழக்கமாகத் தோட்டக்காரன் கண்ணன் வருவான்; தோளில் தூக்கிச் செல்வான்.

ஒருநாள் கண்ணனைக் காணோம்! கேட்டருகே நின்றிருந்த என்னை ஒரு பெண் நெருங்கி, ''குழந்தே வா, அம்மா உன்னை இட்டாரச் சொல்லி என்னைத்தான் இன்னிக்கு அனுப்பியிருக்கு'' என்று கூறியபடியே தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு நடந்துவிட்டாள். வேறு திசையில் அவள் செல்வது எனக்குப் புரிந்தது. சுற்று வட்டாரம் வேறு மாதிரி இருக்கவே பயந்து 'ஓ' வென்று கதறி அழ

70 முதல் 7 வரை



● கௌரி தம் மகள் அகிலாவுடன்

ஆரம்பித்தேன். அந்தப் பெண்ணோ நடையைத் துரிதப்படுத்தினாள்! என் அலறலும் அதிகரித்தது.

சொல்லி வைத்தாற்போல் அந்தச் சாலையோடு காரோட்டிச் சென்று கொண்டிருந்த ஏ. சுப்பையா, "அட! கல்கி வீட்டுக் குழந்தை போலிருக்கே? ஏன் அழறான்?" என்று கேட்டுக்கொண்டே காரை நிறுத்தி இறங்கி வந்தார். நான் அவர் பக்கம் பாய, அந்தப் பெண் ஓட்டமும் நடையுமாக விரைந்துகாணாமல் போனாள். உண்மையில் காணாமல் போயிருக்க வேண்டிய நான் தப்பி, சுப்பையா மாமாவின் காரில் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்! என் பெற்றோருக்கு சுப்பையா தெய்வமாகவே காட்சியளித்திருப்பார்தானே!

1960ல் பிரிட்டிஷ் அரசின் அழைப்பை ஏற்று பிரிட்டனுக்குச் செல்கின்ற அரிய வாய்ப்பு 'கல்கி' துணை ஆசிரியர் என்ற முறையில் எனக்குக் கிட்டியது. 'த்ரில்'லுடன் கூடவே ஒரு பிரச்னை: இரண்டு சூட், நாலு டை, ஆறு புது ஷர்ட்டுகள், ஸாக்ஸ்-ஷூ இத்யாதி செலவுகளுக்கு என்ன செய்வது?

சென்னை கஸ்தூர்பா நகருக்குப் பின்புறம் அப்பா வாங்கி, தமது உயில் மூலம் எனக்கு அளித்திருந்த ஆறு கிரவுண்டு நிலம் இருந்தது. அதைச் சற்றும் யோசியாமல் ஐயாயிரம் ரூபாய் விலை பேசி, மூவாயிரம் முன் பணம் பெற்றுக் கொண்டதாக எழுதிக்கொடுத்தேன். தாஸ் தந்த பணத்தில் டிப்டாப்பாக உருமாறி லண்டன் பறந்துவிட்டேன். பிரிட்டன் - ஐரோப்பா சுற்றுப்பயணம் முடிந்து திரும்பிய சில தினங்களில் தாஸ் அவர்களின் மனைவி சோகமே உருவாக என்னைக் காணவந்தார். தமது கணவர் இறந்துவிட்டதாகவும் தாம் ரொம்ப சிரமப்படுவதாகவும் எனவே, தாஸ் முன் பணமாகத் தந்த ரூபாய் மூவாயிரத்தைத் தயவுசெய்து திருப்பித் தந்துவிடவேண்டும் என்றும் கெஞ்சிக்கேட்டார்.

கல்கி காரியாலயத்தில் ஜெனரல்

● அகிலாவும் அகிலாவும்!



மானேஜர் வைத்திய நாதன் அவர்களிடம் விஷயத்தை விளக்கி ஆபீஸில் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்றேன். அந்த நாளில் மூவாயிரம் ரூபாய் என்பது மிகப் பெரிய தொகை. அவர் ரொம்ப ரொம்ப யோசித்துவிட்டு, ''சம்பளத்தில் மாதம் இருநூறு ரூபாய் பிடித்தம் செய்யணுமே'' என்றார். ''எப்படிச் சமாளிப்பாய்?'' என்று கேட்டார். அப்போது எனக்கு மாதச் சம்பளம் நானூறு ரூபாய். ''கஷ்டம்தான்! ஆனால், வேறே வழி தெரியவில்லை'' என்றேன். பணத்தைப் பெற்றுக்கொண்டு போய் திருமதி தாஸிடம் தந்து, நான் எழுதித் தந்திருந்த ஒப்பந்தப் பத்திரத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன்.



சாமிநாத சர்மா, உட்கார்ந்திருந்த இடத்தில் ஸீலிங் ஃபேன் கழன்று விழுந்தது. தெய்வாதீனமாக அவர் தப்பித்தார்.

இன்று அந்த ஆறு கிரவுண்டில் ஓர் அவசரச் செலவுக்கு விற்ற இரண்டு கிரவுண்டு போக, மீதம் நாலு கிரவுண்டில் கல்கி கிருஷ்ண மூர்த்தியின் வாரிசுகள் என்று கூறத்தக்க நாலு குடும்பங்கள் வீடு கட்டி வாழ்கின்றன. இன்றைக்கும், தினந்தோறும் அப்பா படத்துக்குப் பூ வைக்கும் நேரத்தில், அப்பா என்னைப் பார்த்து, 'இலண்டனுக்குப் புறப்படும் ஜோரில் நான் உனக்கு விட்டுச் சென்ற நிலத்தை அவசரப்பட்டு விற்பதாக எழுதிக் கொடுத்தாயே; இன்று உன்னால் இந்த வட்டாரத்தில் அரைக் கால் கிரவுண்டு நிலம் வாங்க முடியுமா?' என்று கேட்டு, ஆண்டவனின் திருவிளையாடலை நினைவு படுத்துவது போல்தான் இருக்கிறது.



● பாரதிய இளைஞர் சங்க விழாவில் வலமிருந்து இரண்டாவதாக வெ. சாமிநாத சர்மா

கல்கி - சதாசிவம் - எம்.எஸ். ஆகியோர் சம்பந்தப்பட்ட ஒரு மகத்தான முடிவிலும், கல்கி காரியாலயம் தொடர்பான இன்னொரு முக்கியமான திருப்புமுனை சம்பவத்திலும், இதே போல் தெய்வ சித்தம் செயல்பட்டு நன்மை செய்திருக்கிறது. ஆச்சர்யமான அந்த விஷயங்கள் அடுத்த வாரம்...

(பேசுவோம்)

வட்டமேஜை

'ரிமோட் உங்கள் கையில்' காலத்திற்கேற்ற, சிந்திக்க வைத்த கட்டுரை. கிருஷ்ணானந்த தீர்த்த சுவாமிகள் கூறியுள்ளது நூற்றுக்கு நூறு உண்மை.

- எஸ். உஷா சுதர்ஷன், திருச்செங்கோடு

ஆட்டோ சங்கர், வீரப்பன் - தொடர்கள் பற்றி கௌதமன் கூறுவதும் ஏற்கக் கூடியதல்ல.

கு.ப.இ.ரகுநாதன், பூவிருந்தவல்லி

'புள்ளிகள் - கோலங்கள்...!' தொடரின் சஸ்பென்ஸ் அடுத்த தொடர் எப்போது படிப்போம் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது.

- ப.வஸந்தா, அனுப்பானடி

பேனசிரின் படுகொலை பற்றிய உண்மைகள் அவருடன் புதைக்கப்பட்டாலும்கூட, என்றாவது ஒருநாள் வெளி வந்தே தீரும்!

- த. அசாருதீன், பள்ளபட்டி

சன் டி.வி. - கலைஞர் டி.விகளின் இந்த சேனல் பங்காளி யுத்தம் எங்கே போய் முடியுமோ?

- இ.முகம்மது உசேன், திருச்சி

ரயில் வராத போதி மரம் - கேமரா கதை நல்ல கருத்துடன் இதயத்தைத் தொட்டது.

- இந்திரன், நாகர்கோவில்

மோட்சத்துக்கு வழிகண்ட பொம்மை யாழ்வாரின் சூட்சும வரியை எடுத்துரைத்த சுஜாதாவுக்குப் பாராட்டுகள்.

- செல்வராஜா

நூற்றுக்கு நூறு!



எந்த ஹீரோவுக்குத் தைரியமிருக்கு என்ற சீமானே! அமீர் கானுக்கே ரோல் மாடலான கமல்ஹாசன் உங்கள் கண்ணுக்குத் தெரியலையா!

- அ.யாழினி பர்வதம், சென்னை - 78

தமிழக அரசை எதிர்க்கும்பொழுது உறுதியுடனும், உரத்த குரலிலும் பேசும் ராமதாஸ், பாராளுமன்றத் தேர்தல் என்றால் மட்டும் சாமர்த்தியமாக காங்கிரஸ் அணி என்று பேசுவது நகைப்பை உண்டாக்குகிறது.

- ஆர்.நாகராஜன், சென்னை - 17

பிறரைக் குறை சொல்வதைத் தவிர்த்து 'தாரே ஜமீன் பர்' போன்ற தரமான படத்தைத் தரத் தயாரா என்பதை சீமான் தெளிவுபடுத்தட்டும்!

- மீனாட்சி கண்ணன், சென்னை - 87

சேனல்கள் பலவீனமான கதையோடு ரசனைக் குறைவான காட்சிகளையே திரும்பத் திரும்பக் கொடுத்தால், எப்படிச் சகித்துக்கொள்வது?

- லலிதா செல்லப்பா, சென்னை

திருப்பூரில் வேலை செய்யும் எங்களுக்கு மண்ணைப் பிரிந்த சோகத்தை செவக்காட்டுச் சித்திரங்கள் ஆறுதல் படுத்துகிறது.

- மா.பிரகாசு, அனுப்பபட்டி

ஸ்பீட் போஸ்ட்



'சக்தி கருணை இல்லம்'. நீலநிற போர்டில் வெண்ணிற எழுத்துகள் பளபளத்தன.

அலுவலக அறையில் காத்திருந்தான் ஸ்ரீதர். கண்களில் ஆர்வ ரேகைகள். பெயர்ப் பதிவேட்டை அவன் முன் விரித்தார் இல்ல நிர்வாகி. கண்களை ஓட்டியவனின் பார்வை 'ராகவன்' என்கிற பெயரில் நிலைத்தது.

ராஜீவன் - ராகவன்... பெயர்ப் பொருத்தம் அழகு. ராகவன் பற்றிய விவரங்களை அறிந்துகொண்டவன் நேராகவும் சந்தித்துப் பேசினான். வரச் சம்மதித்தார். குழந்தை ராஜீவனோடு கதை பேசி விளையாட... ராகவன் தாத்தாவைத் தத்தெடுத்துக்கொண்டு, நிர்வாகிக்கு நன்றி சொல்லிப் புறப்பட்டான் ஸ்ரீதர்.

- விஜி செந்தில்,
பேராவூரணி

மின்னல் கதைகள் மின்னல் கதைகள் மின்னல் கதை

செண்ட்ரல் ஸ்டேஷன்.

ஜி.டி. எக்ஸ்பிரஸ் வந்து நின்றது.

வயதான தாயைக் கைத்தாங்கலாகப் பிடித்து, ஸ்லீப்பர் கோச்சிலிருந்து இறக்கினார் ஈஸ்வரன்.

"என்னமோப்பா, உனக்குக் கௌரவம் கொடுக்கணும்னு வந்து சேர்ந்துட்டேன். இனிமே உன்னோடதான் என் கடைசிக்காலம்" என்றாள் பெருமூச்சுடன், போபாலிலிருந்து வந்த பிரயாணக் களைப்பில்.

போர்டிகோவில் கார் வந்து நிற்க, மருமகள் வாய் நிறைய வரவேற்றாள் மாமியாரை. அவள் உள்ளே சென்றவுடன், பிலுபிலுவென பிடித்துக்கொண்டாள் ஈஸ்வரனை.

"ஏன்னா! இங்கேயே தங்கப்போகிறான்னா சொன்னேள்! சீக்கிரம் திருப்பி அனுப்புகிற வழியைப் பாருங்கோ."

"தோ பார் லலிதா, இனிமே அம்மா இங்கேதான் இருப்பா. நீ வேணா உன் பிள்ளையோடு கல்கத்தாவிலே போய் இரு. தொண்ணூறு வயசுக் கிழவியை எங்கே போய்த் தள்றது?" என்று முதன் முறையாக வெடித்தார் எழுபது வயது ஈஸ்வரன் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு!

- பாமா கோபாலன்





"அருண்... பக்கத்துல இருக்கற கடைக்குப் போய் ரெண்டு ரூபாய்க்கு வெத்தலைப் பாக்கு வாங்கிட்டு வர்றியா?" என்றார் பக்கத்து வீட்டுத் தாத்தா, இரண்டாம் வகுப்புப் படிக்கும் என் மகனிடம். "சரி தாத்தா..." என்றவனிடம், கூடவே இன்னொரு ஒரு ரூபாய் நாணயத்தையும் கொடுத்து,

"இந்தா... இதுக்கு சாக்லெட் வாங்கிக்கோ..." என்றார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த நான்,

"அருண்... வேண்டாம். வாங்காதே...." என்று சொல்லி, அவனைக் கடைக்கு அனுப்பிவிட்டு,

"தாத்தா, அருணை நீங்க தாராளமாக் கடைக்கு அனுப்புங்க. ஆனா, கடைக்குப் போறவனுக்குக் காசு கொடுத்துப் பழக்காதீங்க. ஏன்னா, யாருக்காவது உதவி பண்ணா, ஏதாவது வாங்கணும்னு அவனை எதிர்பாக்க வச்சுடும். இப்படிப் பழக்கற பழக்கம், நாளைக்கே அவன் பெரியவனானாலும் லஞ்சம், ஊழல்னு கொண்டுபோய் விடும். சின்ன வயசுல நாம பழக்கற சின்னச் சின்னத் தப்புதான், பெரிய தப்புக்கு அஸ்திவாரம்.." என்றேன். நான் சொன்னதை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாய்ச் சிரித்தார் தாத்தா.

– கே.ஆனந்தன், தர்மபுரி

மின்னல் கதைகள் மின்னல் கதைகள் மின்னல் கதைகள் மின்னல் கதைகள்

எங்கள் ஆபீஸில் வேலை செய்யும் சிவகுமாரின் வீட்டுக்குப் போக வேண்டும். வழி சொல்லியிருந்தார். பஸ்ஸைவிட்டு இறங்கியவன் குழம்பினேன். பஸ் ஸ்டாப்பிலிருந்து இரண்டு வழிகள் பிரிகின்றன. இடது பக்க வழியில் போகவேண்டுமா? வலது பக்கமா? இப்போதுதான் அவர் வீட்டுக்கு முதன்முதலாக வருகிறேன். செல்லில் அவர் நம்பரை ட்ரை பண்ணினால், 'நாட் ரீச்சபிள்' வந்தது.

யாரைக் கேட்கலாம்? யோசித்தவனின் கண்களில் பட்டது 'அஜந்தா ஆர்ட்ஸ்' என்ற அந்த ஓவிய நிலையம். சிவகுமார் நன்றாக வரைவார். இங்கு கேட்டால் தெரியுமா? உள்ளே நுழைந்தேன். சிவகுமார் கொஞ்சம் கால் ஊனம்.

"ஏங்க, இங்க சிவகுமார்னு ஒருத்தர் வீடு எங்கன்னு தெரியுமா? அவர் கொஞ்சம் கால் ஊனமா நடப்பார்.." என்றேன்.

"எனக்குத் தெரியும் சார்.." என்றான் ஒருவன். "அவர் நல்லா படம்கூட வரைவாரே..." என, "ஆமா..." என்றேன்.

"தப்பா நினைக்காதீங்க. கால் ஊனம்னு சொல்றதுக்குப் பதிலா, 'நல்லா ஓவியம் வரைவார்'னு சொல்லி இருக்கலாமே. வாங்க காட்டறேன்." சொல்லிவிட்டு எழுந்து விந்தி விந்தி நடக்க ஆரம்பித்தான். கன்னத்தில் அறைபட்டதுபோல உணர்ந்தேன்.

– கே.ஆனந்தன், தர்மபுரி



● என்.கோமதி, நெல்லை

'முயற்சி திருவினையாக்கும்' என்று பாடம் நடத்திய அதே ஆசிரியர், 'கிட்டாதாயின் வெட்டென மற' என்கிறாரே...?

நரசிம்ம பக்தர் ஒருவர் நரசிம்மரை நேரில் காண, காட்டில் கண்ணை மூடி அமர்ந்து தவம் செய்தார். ''அய்யா... தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டு அவர் தவத்தைக் கலைத்தான், அந்தக் காட்டில் வாழ்ந்த ஒரு வேடன். ''நீ மிருகத்தை வேட்டையாடும் வேடன். நான் ஒரு மிருகத்தைத் தேடும் தேடன்'' என்று முதலில் சூசகமாகச் சொல்லிவிட்டு, தொடர்ந்து அந்த பக்தரே, ''நான் தேடும் மிருகத்துக்குத் தலை சிங்கம், உடல் மனிதன் போல இருக்கும்'' எனக் கூறிக் கண்களை மூடினார். ''கண்ணைத் திறந்துகொண்டு தேடாமல், இப்படி கண்ணை மூடிக்கொண்டு தேடுகிறீர்களே! நீங்கள் தேடுகின்ற அப்பேர்ப்பட்ட மிருகம் இந்தக் காட்டில் கிடையாது. எனவே, உங்களுக்கு அது கிட்டாது. பெரியவரே, 'கிட்டாதாயின் வெட்டென மற' என்று பெரியவர்கள் சொன்னதை மறந்துவிட்டீர்களா?'' என்று கேட்டு, மீண்டும் அவர் தவத்தைக் கலைத்தான் வேடன். கடுப்பான அப்பெரியவர், ''தம்பி, 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை நீ மறந்துவிட்டாயா?'' என்று சொல்லிவிட்டுத் தவத்தில் மூழ்கினார். கொஞ்ச நேரத்தில் தவ வலிமையால் கொதித்துக்கொண்டிருந்த பெரியவரைத் தட்டி எழுப்பி, மேலும் கொதிப்புக்குள்ளாக்கிய வேடன், ''சாமி, நீங்க தேடற மிருகம் இதுதானா பாருங்க?'' என்று காட்ட, வேடன் விரித்த வலையில், சிங்கத் தலையும் மனித உடலுமாக, நரசிம்மர் சிக்கிக் கிடந்தார். வெலவெலத்துப் போன பெரியவர், 'இது எப்படிச் சாத்தியமாயிற்று' என்று கேட்பதற்குள், ''சாமி, நீங்க தெய்வத்தைத் தொழுவதைத் தொழிலாச் செய்யறீங்க. எனக்கு செய்யும் தொழிலே தெய்வம்'' என்று சூசகமாகக் கூறிவிட்டு, மாறுவேடத்தில் வந்த வேடன் மறைந்தான். தூணிலும், துரும்பிலும் மறைந்துகொள்ள, நரசிம்மரும் மறைந்தார்.

● பத்மனாபன், சென்னை

நமது இந்திய அணிக்கு ஆப்பு வைத்த, ஸ்டீவ் - பக்னர் பற்றி...?

அவர் ஒரு தெய்வம்! இந்திய அணியை நின்றே கொன்றுவிட்டார்! அந்த தெய்வத்திடம், பாண்டிங் ஆள்காட்டிவைங்களுக்கு அவுட் கொடுத்த, அவருடைய ஆள்காட்டி விரலை வரமாகக் கேட்பேன்.

● அ.யாழினி பார்வதம், சென்னை

வாழ்க்கையே ஒரு நாடகம்தானே.



கிரேஸியைக் கேளுங்கள்...



அப்புறம் தனியாக, நீங்கள் எதற்கு நாடகம் நடத்து கிறீர்கள்..?

எனக்கு நாடகம்தான் வாழ்க்கை.

● மல்லிகா அன்பழகன், சென்னை

'ATM'... அதாவது அழகிய தமிழ் மகன் யார்..?

தமிழுக்காக அழகைத் தியாகம் செய்து, முதுமையை விரும்பி ஏற்ற அவ்வையார். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் எழுதிய இந்த 'ATM'ல் அதாவது 'அவ்வையார் தமிழ் மெஷினில்', எந்தக் கேள்விக் கார்டைப் போட்டாலும், பொருள் நிரம்பிய பதில் கொட்டும்!



● அனன்யா, திருச்சி

முருகன் அவ்வையாரிடம் கேட்ட 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்பது வெறும் நகைச்சுவைக்கான ஒன்றுதானா, அல்லது வேறு ஏதேனும் தத்துவார்த்தப் பொருள் நிறைந்ததா?

அகவல் பாடிய அவ்வையாருக்கு, ஆரம்ப தெய்வம் ஆனைமுகன் பிள்ளையார்தான். பிறகுதான் மரத் தடியில் முருகனைச் சந்தித்தாள். இருவரில் யார் மீது அவ்வைக்குப் பிரியம் என்பதைத் தெரிந்துகொள்ள 'அவ்வையே! உனக்குத் தந்தையின் நெற்றிக் கண்ணில் 'சுட்ட பழம்' நான் வேண்டுமா? இல்லை, பச்சைக் களி மண்ணால் பிடித்த குளிர்ந்த, 'சுடாத பழம்' என் அண்ணன் வேண்டுமா?' என்று தத்துவார்த்த நகைச்சுவையோடு, அவ்வையை ஆறுமுகன் ஒருவேளை கேட்டிருக்கலாம்!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி

அமெரிக்க அதிபர் புஷ்ஷிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கும் வாய்ப்பு கிடைக்கிறது... என்ன கேள்வி கேட்பீர்கள்?

தலைவா! 'ஜார்ஜ் W புஷ்' என்ற உங்கள் பெயரில் உள்ள middle name மான 'W' குறிப்பது 'War'ஐத்தானே' என்று கேட்பேன். Bush என்னை புரியாத புதராக... ஸாரி, புஷ் என்றவுடன் புதர் வந்துவிட்டது... புரியாத புதிராகப் பார்ப்பார்.

● சியாமளா, மதுரை

ஆன்மிகத்தைவிட உயர்ந்தது எது...?

சாலப் பரிந்தூட்டும் பெற்ற தாயைத் தொழும் 'பெண்மீகம்'.

போச்சு, மழை வந்து கெடுக்கப் போகிறது என்று எல்லோரும் பயந்தார்கள். நல்ல வேளை. மழை இல்லை. இரண்டாவது பெரும் ஆறுதல், புத்தகக் கண்காட்சியில் கவிதைப் புத்தகங்கள் அவ்வளவாக இடம் பெறவில்லை.

நீலகண்ட சாஸ்திரி எழுதிய சோழர்கள் வரலாறு அழகிய வடிவமைப்பில் இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளன (நியூ செஞ்சுரி). சாமிநாத சர்மாவின் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு விட்டதால், காற்றுபோல் எங்கும் பரவியிருக்கிறார். நியூ ஹொரைசன் மீடியா வெளியிட்டிருக்கும் ஆடியோ புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு.

கேன்டீன் தவிர கிட்டத்தட்ட எல்லா ஸ்டால்களிலும் கல்கியின் பொன்னியின் செல்வன் கிடைக்கிறது. பாக்கெட் சைஸ், செல்ஃபோன் சைஸ், மூக்குப்பொடி டப்பா சைஸ் என்று வகை வகையாகப் பதிப்பித்திருக்கிறார்கள். எஸ்.ராமகிருஷ்ணனின் யாமம் மிக முக்கிய நாவல் என்று பேசிக்கொள்கிறார்கள். வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவோர் பற்றிய படைப்பு இது. ப.சிங்காரத்தின் புயலிலே ஒரு தோணி அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளது.



உயிர்மை முழுவதும் சுஜாதா நிரம்பியிருக்கிறார். புறநானூறு, ரோபோ, நானோ, சில்வியா, ஸ்ரீரங்கத்து தேவதைகள், இத்யாதிகள், கலகம், இசை, உலக சினிமா என்று சாரு நிவேதிதா உயிர்மையில் களம் இறங்கியிருக்கிறார். செழியன் எழுதி ஆனந்த விகடன் வெளியிட்டுள்ள உலக சினிமா நன்றாக விற்பனையானதாகப் பேசிக்கொண்டார்கள்.

பாப்கார்ன், உருளைக் கிழங்கு பஜ்ஜி, பொடி தோசையோடு போட்டி போட்டுக் கொண்டு விற்றுத் தீர்ந்த புத்தகங்கள் சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ பற்றியவை. பெரியார், புத்தர் இருவரையும் பற்றி அதிகமான எண்ணிக்கையில் விமர்சனப் புத்தகங்களைப் பார்க்க முடிந்தது. வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவேஸை ஒன்றுக்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன. ஜார்ஜ் புஷ், இராக் தொடர்பாக புதிதாக ஒன்றுமில்லை. தெஹல்கா பேட்டிகளை அ.மார்க்ஸ் உள்ளிட்ட பலரும் தமிழ்ப்படுத்தி அலசியிருக்கிறார்கள். குஜராத் பற்றிய பதிவுகள் உள்ளன. ஆனால், நரேந்திர மோடி பற்றி ஒரு நாவல் இல்லை.

கதவைத் திற காற்று வரும். மனதைத் திற மகிழ்ச்சி பொங்கும் என்றார் நித்யானந்த சுவாமிகள். அறிந்ததில் இருந்து விடுபடு என்றார் ஜெ. கிருஷ்ணமூர்த்தி. இரண்டு பேரையும் ஒரே பிளாஸ்டிக் பையில் போட்டு எடுத்துச் சென்றார்கள். தொட்டுக்கொள்ள ஓஷோ. கனவு காணச் சொன்ன அப்துல் கலாமை குழந்தைகளும் இளைஞர்களும் அன்வித்



பாப்கார்ன் புத்தகங்கள்!

கொண்டு சென்றார்கள்.

மூன்று நூற்றாண்டு நாயகர்கள் பவனிச்சென்று காட்சியளித்தார்கள். முதலாமவர், ப.ஜீவானந்தம். ஜனசக்தி காலத்து தலையங்கங் களும் ஜீவாவின் உரைகளும் மேடைப் பேச்சுகளும் நியூ செஞ்சுரியால் தொகுக்கப்பட்டுள்ளன. அடுத்து, பகத் சிங். பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள தொகுப்பு நூல் முக்கியமானது. கடிதங்கள், ஆவணங்கள், சிறைக்காலச் சிந்தனைகள் அனைத்தும் இதில் தொகுக்கப்பட் டுள்ளன. மூன்றாவது நாயகர் நடிகர் எம்.ஆர்.ராதா.

சாஃப்ட்வேர் சக்கரவர்த்திகளான பில் கேட்ஸ், அஸிம் பிரேம்ஜி (விப்ரோ), ஆண்ட்ரு க்ரோவ் (இண்டெல்) மூவரின் வாழ்க்கை வரலாறுகளையும் கிழக்கு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ஒரு திரு நங்கையின் உலுக்கியெடுக்கும் வாழ்க்கை வரலாற்றையும் (என் பெயர் வித்யா) இவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஓர் ஆணின் உடலுக்குள் ஒரு பெண்ணின் உணர்வுகளைச் சுமந்துகொண்டு வாழ் வதில் உள்ள வலியை வெளிப்படுத்தும் படைப்பு இது. கவனத்தை ஈர்த்த மற்றொரு முக்கிய படைப்பு, விடுதலைப் புலிகள் இயக்க வரலாறு.

'கண்காட்சி என்று அழைக்க வேண் டாம். அடுத்த ஆண்டு முதல், புத்தகப் பூங்கா என்று அழையுங்கள்' என்றார் கலைஞர் கருணாநிதி. நிரந்தரப் புத்தகக் கண்காட்சி விரைவில் உருவாகிவிடும் என்றார். சென்னை சங்கமம் அரங்கில் நடத்திய கலை நிகழ்ச்சிகள் ரசிக்கும்படி யாக இருந்தன.

- வருத்தஸ்ரீ

தோழமையுடன் விளையாடும் ரமணி!

எல்லா வடிவங்களாகவும் இருக்கக்கூடிய அம்பாள், அவை எல்லாவற்றையும் கடந்தும் இருக்கிறாள் என்கிறபோது, நாமங்களுக்குள்ளே இருக்கக்கூடியவள் அவற்றைக் கடந்தும் விளங்குகிறாள். கடவுள் என்ற வார்த்தைக்கே அதுதான் அர்த்தம்! இப்படி, பெயர்களைக் கடந்து விளங்குபவள், நாம் என்ன பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் அந்தப் பெயருக்கு 'ஆமாம்' என்று சொல்லக்கூடியவள்! 'அம்பா!' 'அம்பிகா!' என்கிறபோது அம்மாவை எப்படி வேண்டுமானாலும் கூப்பிடலாம் என்கிற உரிமையுடன் தொனிக்கிறது. சில சமயத்தில், ஆசார்யர் ஆதி சங்கரரே அம்பாளை 'அம்' என்று அழைப்பார். அம்மா என்பதைவிட ரொம்பச் செல்லமாக 'அம்' என்பார்! குழந்தைகள் அம்மாவை "அம்மா" என்று கூப்பிடுவதற்குப் பதிலாக "அம்மு" என்று அழைக்கிற மாதிரி. அம்மாவை எப்படிக் கூப்பிட்டாலும் அவள் அதை ரசித்துக்கொள்வாள். "என் குழந்தையாகக் கொண்டு இப்படிக் கூப்பிடுகிறது!" என்று மகிழ்ந்து போவாள். அந்தமாதிரி, அம்பிகை பரமேஸ்வரி, தன்னுடைய குழந்தைகள் என்ன பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் அந்தப் பெயரைத் தன்னுடைய பெயராக ஏற்றுக்கொள்ளக் கூடியவள்.

அந்த **அம்பிகா**, **நாராயணி**யாகவும் நாம ரூப விவர்ஜிதாவாகவும் இருக்கக்கூடியவள் எத்தகைய இயல்பினள் என்பதை அடுத்து வரும் நாமங்கள் தெரிவிக்கின்றன; பக்தர்களுக்கு அவள் எப்படிப்பட்டவளாகத் திகழ்கிறாள் என்று விவரிக்கின்றன.

ராக்ஞி - ஆரம்பத் திருநாமங்களுள் ஒன்று **மஹா ராக்ஞி**. இதே ராக்ஞி என்ற திருநாமம் மீண்டும் வருகிறது: ***ராஜராஜார்ச்சிதா ராக்ஞி***.

ராஜராஜன் என்கிற பெயர் புராணப்படி இரண்டு பேருக்குப் பொருந்தும். ஒன்று மனு, இன்னொன்று குபேரன்.

மனு, குபேரன், சந்திரன் - இவர்களெல்லாம் அம்பாள் உபாஸகர்களான பன்னிரண்டு பேரில் அடங்குவர். ஏன் மனுவுக்கு ராஜராஜன் என்று பெயர்..? மானுடத்துக்கே அவன் தலைவனாக இருப்பதால் ராஜராஜன். அதே மாதிரி, நவநிதிகளுக்கும் தலைவனாக இருப்பதால் குபேரனுக்கு ராஜராஜன் என்று பெயர்.

ஆகவே, ராஜராஜ அர்ச்சிதா என்கிறபோது, மனு - குபேரனாக இருந்தாலும் சரி, இந்த மானுட ஆத்மாக்களாக இருந்தாலும் சரி, அவளை அர்ச்சிப்பவர்களாக இருக்கிறார்கள். அவளே மஹாராக்ஞி!

ரம்யா - ரம்யமாக இருப்பவள்; அழகானவள் - ரம்மியத்தைத் தரக்கூடியவள்.

ராஜீவ லோசனா - ராஜீவம் என்றால் தாமரை. தாமரைக் கண்கள் பொருந்தியவள். - அழகான, மென்மையான கண்கள் படைத்தவள்.

ரஞ்சனி - ரம்யா என்றால் இனிமை தருபவள் என்பது மாதிரி ரஞ்சனி என்றால் பக்தர்களுக்கு ஆனந்தத்தைத் தருபவள்.

இறங்கி வரும் குணம்!

ரமணீ என்றால் பக்தர்களோடு விளையாட்டாகப் பழகக்கூடியவள்;

ஸ்ரீ லலிதா சுதா சேஷய்யன் – பாகம் இரண்டு


ஸ்ரீ பெரிய நாயகி
திருப்பழனம்

விளையாடக்கூடியவள். பக்தர்களைத் தோழமையுடன் அரவணைத்துக் கொள்ளக்கூடியவள்.

ஏற்கெனவே கல்யாண குணங்கள் குறித்துப் பார்த்தபோது, சௌசில்யம் என்பதைப் பார்த்தோம். நாராயணனுக்கும் சௌசில்யம் என்று ஒரு குணம் உண்டு. தோழமைத் தன்மை- அம்பாளுக்கும் அது உண்டு.

சாதாரண பூலோக வாழ்க்கையில், நம்மிடம் எல்லோருமே தோழமைத் தன்மையுடன் பழகமாட்டார்கள். ரொம்ப உயரத்திலிருக்கிற ஒருத்தர், ரொம்பக் கீழே இருக்கிற ஒருத்தரிடம் ரொம்பத் விஷயங்கள் அவசியம் இருக்க வேண்டும் - இரண்டு முன் தேவைகள்... ஒன்று - அது அனாயாசமாகச் செய்யப்பட வேண்டும். ஆங்கிலத்தில் சொல்கிறபோதுகூட 'லைக் சைல்ட்'ஸ் ப்ளே' என்று சொல்வதுண்டு. ரொம்பக் கஷ்டமான காரியத்தைக்கூட, ஒருத்தர் குழந்தை விளையாடுகிற இலகுவுடன் செய்கிறபோது இப்படிச் சொல்லுவோம்.

ரொம்பக் கஷ்டப்பட்டு, யாருமே செய்ய முடியாத விஷயத்தை பத்து பேர் உதவியோடு செய்தோமென்று சொன்னால் அதற்குப் பேர் விளையாட்டு இல்லை. விளையாட்டு என்பதை

ராஜராஜன் என்கிற பெயர் புராணப்படி மனுவுக்கு

தோழமையோடு பழகுவது என்பது அவ்வளவு சாதாரணமாக நடந்துவிடாது. எத்தனையோ விஷயங்கள் அவ்விருவருக்கும் நடுவே வரும். மலைக்கும் மடுவுக்குமிடையே உள்ள வித்தியாசம் இருவருக்கிடையே இருந்தால், அந்தத் தோழமைத் தன்மை ஏற்படுவதை நிறைய விஷயங்கள் தடுக்கும். ஆனால், ரொம்ப உயரத்தில் இருக்கக்கூடிய ஒருவர், சாதாரண நிலையில் இருப்பவரிடம் ரொம்ப நட்போடு பழகினார் என்றால், அப்படியிருக்கக்கூடிய தன்மைதான் சௌசில்யம் - அதுதான் அம்பாளுடைய ரமணீய தன்மை!

உரிமையுடன் விளையாட்டு!

யாரிடம் தோழமை கொண்டாடுகிறாளோ, அவர்களிடம் அம்பாள் விளையாட்டாய்ப் பழகுகிறாள். ரொம்ப உரிமையாய் இருப்பவர்களிடம்தானே நாம் விளையாடுகிறோம் - அந்த மாதிரி, தன் பக்தர்களிடம் விளையாடுகிறாள், அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறாள்.

விளையாட்டு என்பதற்கு இரண்டு ரொம்பச் சுலபமாகப் பண்ணவேண்டும். அதனால்தான் கம்பர் பாடுகிறபோது 'நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கா அலகிலா விளையாட்டுடையான்' என்றார். உளவாக்கல் - படைத்தல், நிலைபெறுத்தல் - காத்தல், நீக்கல் - அதாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற மூன்றையும் ஒருத்தர் நிகழ்த்துகிறார். அவர் யார் என்று சொல்லவில்லை கம்பர். ஆனால், இந்த மூன்றையும் அவர் ரொம்ப விளையாட்டாகச் செய்கிறார்! எந்தச் சிரமமும் இன்றி அனாயாசமாகச் செய்கிறாரே, அவருக்குப் பெயர்தான் தலைவர் என்கிறார் கம்பர்.

தலைவராக இருக்கக்கூடிய தகுதி யாருக்கு வரும் என்றால், ரொம்பக் கஷ்டமான விஷயத்தை, யாரும் செய்ய முடியாத விஷயத்தை யார் ரொம்பச் சுலபமாகச் செய்துமுடிக்கிறாரோ, அவர்தான் தலைவராக இருக்க முடியுமே தவிர, வேறு யாரும் தலைவராக இருக்க முடியாது. 'அன்னவர்க்கே சரண் நாங்களே' என்கிறார் கம்பர்.

விளையாட்டுக்கு இன்னொரு பண்பு என்னவென்றால், அது மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்திருக்கும். இருக்க வேண்டும். விளையாட்டு விபரீதத்தை

ஏற்படுத்தக் கூடாது. உணர்ச்சி மிகுந்து போய் சண்டையாகிவிடக்கூடாது; மகிழ்ச்சியைத் தர வேண்டும்.

ஒரு குழந்தை விளையாடுவதைப் பார்த்தால் சந்தோஷமாக இருக்கும். ஒன்றேமுக்கால் அல்லது இரண்டு வயதுக் குழந்தையை விளையாடவிட்டால், அது கிடுகிடுவென்று போகும். தெருவிலேயிருந்து மண்ணை எடுக்கும். சட்டை பாக்கெட்டில் போடும், கொட்டும். பொம்மையை எடுக்கும், பிய்க்கும், தூக்கிப்போடும், அடுத்த நிமிஷம் தண்ணியிலே போடும். அதற்



பேரனுக்கும் பொருந்தும்!

கடுத்த நிமிஷம் வீசி அடிக்கும். ஆனால், அந்தக் குழந்தை பண்ணுவதையெல்லாம் பார்த்தோமானால், உண்மையாக நம் மனத்தைத் தொட்டுப் பார்த்தோமானால், - அதன் அம்மாவுக்கு வேண்டுமானால் பரபரப்பாக இருக்கலாம்; ஆனால், நமக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்கும். நாமும் போய் குழந்தையோடு குழந்தையாக விளையாட மாட்டோமா என்று இருக்கும். வயது, சூழல் என்ற மனத் தடைகள் நமக்கு இருக்கலாம். ஆனால், உண்மையான விளையாட்டு என்பது அப்படி - ஒரு குழந்தை போல் அனாயாசமாக, ஆனந்தமாக இருப்பதுதான்.

மகிழ்ச்சியும் மனநிறைவும்

அப்படிப்பட்ட விளையாட்டைத் தமது பக்தர்களுடன் விளையாடுபவள் அம்பாள். ரமணியமாக இருக்கிறாள் என்றால், அவள் பக்தர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிற விதத்தில் தோழமையோடு விளையாட்டுத்தனத்தோடு பழகுகிறாள். ஆகவே ரம்யா என்ற திருநாமம்.

ரஸ்யா - எல்லோராலும் ஆராதிக்கப்படக்கூடியவள்; பூஜிக்கப்படுபவள்.

ரணத்கிங்கிணி மேகலா - தன்னுடைய இடையில் மேகலாபரணத்தை அணிந்திருக்கிறாள். 'கிணி கிணி' என்று ஓசை எழுப்புகிறது அந்த ஆபரணம். இதை வைத்துக் கொண்டுதான் ஆசார்யார் எழுதினார், 'க்வணத் காஞ்சி தாமா' என்று. அழகிய ஒலி எழுப்பும் மணிகள் பொருந்திய ஒட்டியாணம் அணிந்து கொண்டிருக்கிறாள் அம்பாள்.

ரமா ரம்மியமானவள் என்பதைச் சொல்கிற திருநாமம்.

ராகேந்து வதனா - இந்து வதனா - நிலவு போன்ற முகமுடையவள். ராகங்கள் நிறைந்த பூரண சந்திரனையே தன் திருமுகமாகக் கொண்டவள். அவள் முகத்தைப் பார்த்து, 'அமாவாசை' தினத்தை 'பௌர்ணமி' என்று அபிராமி பட்டரால் சொல்ல முடிந்தது என்றால், அந்த முகம் ராகேந்து வதனம்தானே!

(வளரும்)



முன்பே பெற்ற சம்மதம்!

''வழக்கமாக, ஓர் அரசியல்வாதி மீது நூறு கோடிக்குச் சொத்து சேர்த்து வைத்திருக்கிறார், 250 கோடி சொத்து சேர்த்து வைத்திருக்கிறார் என்றுதான் குற்றம் சாட்டுவார்கள். ஆனால், காங்கிரஸ் என் மீது சொன்ன குற்றச்சாட்டு என்ன தெரியுமா? நான் 250 ஜோடி உடைகள் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதுதான்'' இப்படிக் கூறியவர் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி. துக்ளக் பத்திரிகையின் முப்பத்தெட்டாவது ஆண்டு விழாவில் உரையாற்றும்போது! தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வர் ஆகாமல் இருந்திருந்தால் மோடியை அழைத்திருப்பார்களா? என்று சிலருக்குச் சந்தேகம். ''இந்த வருடம் ஆண்டுவிழாவுக்கு மோடியை அழைப்பது என்று கடந்த வருடம் அக்டோபரிலேயே முடிவு செய்து, அவரது சம்மதத்தைப் பெற்றுவிட்டேன்'' என்று விளக்கம் அளித்தார் சோ.

மோடியின் பேச்சுக்கு அரங்கத்தில் அடிக்கடி ஆரவாரமான கைத்தட்டல். மோடி குறிப்பிட்ட சில சுவையான விஷயங்கள்:

- குஜராத் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்னால், எந்த ஒரு தேர்தலிலும் போட்டியிட்டதில்லை.
- அரசு உயர் அதிகாரிகளுடனான எனது முதல் கூட்டத்தில் கல்வித்துறை செயலாளர், 'நாட்டிலேயே பெண் குழந்தைகள் கல்வியில் குஜராத்துக்கு இருபத்தெட்டாவது இடம்' என்று சொன்னபோது, நான் அதிர்ச்சி அடைந்தேன். இந்த நிலைமையை மாற்றியே தீருவது என்று சபதம் எடுத்துக்கொண்டேன். ஆண்டு தோறும் குறிப்பிட்ட நாளில், பெண் கல்வி அறிவு மிகக் குறைவாக இருக்கும் கிராமங்களுக்கு நானே நேரில் சென்று, மக்களிடம் பேசி குழந்தைகளை - குறிப்பாகப் பெண் குழந்தைகளை - பள்ளிக்கு அனுப்பிவைக்கச் சொல்கிறேன்.
- 'இரவு சாப்பிடுகிற சமயத்திலாவது மின்சாரம் கிடைக்கும்படி செய்யுங்கள்' என்று நான் பதவி ஏற்றவுடன் கிராமத்து மக்கள் கோரினார்கள். இன்று 'ஜோதி கிராம்' திட்டத்தின் கீழ், எங்கள் மாநிலத்தின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது. விவசாயிகளுக்குக்கூட இலவச மின்சாரம் கிடையாது. மின்வெட்டு என்பதே குஜராத்தில் இல்லை. 2500 கோடி நஷ்டத்தில் இயங்கி வந்த மின்வாரியம், இன்று 400 கோடி லாபத்தில் இயங்குகிறது.

- மௌலி

கோயில் பிரசாதத்தைக் கேட்டு வாங்குவதைப் போல் ஆளாளுக்கு 'பாரத ரத்னா' விருதைக் கேட்கும் காலமிது. இதோ இங்கும் சிலர் தங்களது அருமை பெருமைகளைச் சொல்லி, விருதுக்கு 'அப்ளை' செய்கிறார்கள்.



இயக்குநர் பேரரசு

திருப்பாச்சி, சிவகாசி, லேட்டஸ்டா பழனி. இப்படி என்னோட படங்களுக்கு ஊர் பெயர்களைத் தலைப்பா வெச்சு, தமிழ்நாட்டோட பெருமையை உலகம் முழுக்கப் பரப்பி இருக்கேன். எனக்குத் தமிழுணர்வு மட்டுமில்லே, தேசிய உணர்வும் இருக்குங்கறதைக் காட்டறதுக்கு, ஒரு படத்துக்கு 'திருப்பதி'ன்னு பேர் வெச்சேன். ஆந்திர ஹீரோக்கள் மட்டுமே போட்ட 'கலர் கலர்' சட்டைகளை தமிழ் ஹீரோக்களுக்குப் போட்டேன். குத்துப் பாட்டுகளை எழுதி இளைஞர்களுக்குப் பெரிய சேவை செய்திருக்கேன். அதனால, பாரத ரத்னா விருதை எனக்குக் கொடுக்கணும்னு எல்லா இயக்குநர்கள் சார்பிலும் கேட்டுக்கறேன்.

கவுண்டமணி - செந்தில்

நேத்து வந்த 'புறா கூடு' தலைங்க எல்லாம் விருதைக் கேட்கறாங்கடா... சாமியோவ்... தமிழ் சினிமாவுல பதினைந்து, இருபது வருஷமா 'காமெடி'ப் புரட்சி செஞ்சவங்க நாங்க. எட்டி உதைச்சு எட்டி உதைச்சு என்னோட காலே வீங்கிப் போச்சு. உதை வாங்கி வாங்கி இவன் உடம்பெல்லாம் வீங்கிப் போச்சு. சொல்லேன்டா ஈ.வி.ஆர். சோடுத் தலையா!



ஆமாங்க. எங்களோட இந்தச் சேவையைப் பாராட்டி பாரத ரத்னா கொடுக்கணுங்க. ரெண்டு பேருக்கும் கொடுக்கறது கஷ்டமா இருந்தா, பாரதத்தை அண்ணனுக்கும், ரத்னத்தை தம்பி எனக்கும் பிரிச்சுக் கொடுத்துடுங்க அவ்வளவுதான்.



விஜயகாந்த்

தமிழ்நாட்டுல மொத்தம் 43 ½ கட்சிங்க இருக்கு. அதுல 201 கோஷ்டிங்க இருக்கு. இத்தனைக்கும் நடுவுல புதுசா கட்சியை ஆரம்பிச்சேன். மத்தவங்க மாதிரி 'வருவேன் வருவேன்'னு பூச்சாண்டி காட்டாம, சொந்தச் செலவுல வந்தவன். என் கட்சியில பொண்டாட்டி, மச்சினன், ஒன்னுவிட்ட சித்தப்பா தவிர, வேற வாரிசுகளுக்கு இடம் கொடுக்கலை. கல்யாண மண்டபம், காலேஜ், கிராமத்துல கவர்மெண்ட் நிலங்களை வளைச்சுப் போட்டதைத் தவிர வேற ஒன்னுமில்லை. சிலைக்கு மாலை போடறதுக்கு அடிதடி. பிரியாணிப் பொட்டலம்

ஜாலி ஸ்டோர்ஸ்

குசும்புராஜ்

'பாரதம்' அண்ணனுக்கு 'ரத்னம்' தம்பிக்கு!

தார்றதுன்னு கட்சிப் பெருமையைச் சீரா வளர்க்கறேன். பாரத ரத்னா விருதை வாங்கறதுக்கு என்னைவிடச் சரியான அரசியல்வாதி யார் இருக்காங்க?



குஷ்பு

மற்ற நடிகைகள் மாதிரி ஐந்து வருஷம் ஹீரோயினா இருந்துட்டு, தொழிலதிபரைக் கல்யாணம் செய்துக்கிட்டு, சீரியல்ல செட்டிலாகலை. கற்பு, கடவுள்னு சீர்திருத்தக் கருத்துகளை மேடையில் முழங்கறேன். பேசவிடலைன்னாலும் மைக்கைப் பிடுங்கிப் பேசறேன். நான் சும்மா இருந்தா அவங்க விடறதில்லை. அவங்க சும்மா இருந்தா என் வாய் சும்மா இருக்கறதில்லை. எனக்கு பாரத ரத்னா கொடுத்தா, ஒட்டு மொத்த இந்தியப் பெண்களுக்கும் கொடுத்த மாதிரி.

ஒரு தமிழ் 'குடி' மகன்

ஒவ்வொரு தேர்தலிலும் 'இனியாவது நல்லது நடக்கும்' என நினைத்து ஓட்டைப் போட்டு, யாரையாவது பதவிக்குக் கொண்டு வர்றோம். அவர் தமது பையன், பெண், பேரன், பேத்தி என எல்லோருக்கும் பதவிகளை வாரி வழங்குகிறார். இன்னொரு பக்கம் கூட்டணி என்கிற பெயரில் 'அஞ்சு வருஷத்துக்குத் திட்டிக்கிட்டே இருப்பேனே தவிர, ஆதரவு தொடரும்' என அறிக்கைவிடும் மக்கள் நல விரும்பிகள். இந்தக் கஷ்டங்களை மறக்கலாம்னு சினிமாவுக்குப் போனா, அங்கே கொலை, குத்துப்பாட்டு, ரீமிக்ஸ்னு காதைச் செவிடாக்கறாங்க. தீமை செய்பவனுக்கும் நன்மை செய்கற உயர்ந்த தத்துவத்தை மெய்ப்பிக்க இத்தனைத் துன்பங்களையும் பொறுத்துக்கிட்டு, 'டாஸ்மாக்' கடைக்குப் போறோம். அரசு கஜானா நிரம்பறதுக்கு எங்க வயித்தை நிரப்பிக்கறோம். இப்படி எங்களையே அழிச்சு, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தற குடிமகன்கள் சார்பில் எனக்கு 'பாரத ரத்னா' விருதைக் கொடுங்க.







கலைக் கலவரம்!

தமிழ் மண் சார்ந்த கிராமியக் கலைகளை வெகுமக்கள் மறந்து வருகிற இன்றைய இக்கட்டான காலகட்டத்தில், அக்கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் புத்துயிர்க் கொடுத்து வாழவைக்கும் ஓர் அரிய முயற்சியாக 'சென்னை சங்கமம்' நிகழ்ச்சி எனக்குப் படுகிறது.


பொதுவாகவே மூலதனமும், நவீன தொழில்நுட்பமும் ஆக்கிரமித்து நம்மைக் கட்டுப்படுத்தும் இன்றைய வாழ்வில், மனிதனை 'வாங்குபவன்', 'விற்பவன்' என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே பார்த்து வருகிறோம். உலகமயமாக்கல் இதற்கொரு முக்கிய காரணம். அதன் 'கலாசாரத்தில்' மனிதர்கள் வெறும் நுகர்வோர்தான்! உலகத்தை ஒரு படைப்புத்தளமாக அது பார்ப்பதில்லை. இப்படிப்பட்டச் சூழலில் எத்தகைய கலைத்துறையைச் சார்ந்த குடும்பத்திலிருந்தும், இளைய தலைமுறையினர் கலைத் துறைக்கு வரும் வாய்ப்புக் குறைவு. ஆனால், 'சென்னை சங்கமம்' போன்ற நிகழ்ச்சிகள் மூலம் கலைஞர்களைப் புத்துருவாக்கம் செய்வது சாத்தியமாகிறது. எனவே, சென்னை சங்கமம் இந்த நேரத்தில் சிறப்பான கலைக் கலவரத்தை நிகழ்த்தி வருகிறது என்று மகிழ்ந்து சொல்லலாம்.

– 'சென்னை சங்கமம்' பற்றி கவிஞர் ஈரோடு தமிழன்பன்








பிப்ரவரி–10–மதுரையில்
முதல் அரசியல் மாநாடு
கல்லாமை... இல்லாமை... போக்கிட
கர்மவீரர் கனவை நனவாக்கிட....
சமத்துவ தலைவர்
அழைக்கிறார்
அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.



